Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 | திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 14 சனிக்கிழமை (28.06.2014) பக்கங்கள் 20 | ஓசை -270

## குருநகரில் தீ விபத்து; இரு வீடுகள் சேதம்



(யாழ்ப்பாணம்)

யாழ். குருநகர்ப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற தீவிபத்தில் இரண்டு வீடுகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன. மற்றொரு வீடு பகுதியாக எரிந்து சேதமடைந்துள்ளது. குருநகர், பாங்ஷால் வீதியில் குடிமனைகள் நெருக்கமாக உள்ள பகுதியிலேயே இத் தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

இத் தீ விபத்தில் இரு வீடுகள் முற்றாக எரிந்து சேதமாகியுள்ளன.

(19) ஆம் பக்கம் பார்க்க

## பாக். பிரஜைகள் மீது விசா கட்டுப்பாடு அமுல்

(கொழும்பு)

பாகிஸ்தான் பிரஜைகளுக்கு நாட்டுக்குள் நுழைவதற்கான நுழைவுச்சீட்டு வழங்குவதில் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை அமுலில் இருந்த நெகிழ்ச்சித் தன்மைகள் அகற்றப்பட்டுள்ளதுடன் சில சலுகைகளும் இரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன.

அந்த வகையில் பாகிஸ்தான் பிரஜைகளுக்கு இதுவரை வழங்கி வந்த வருகைதரு விசா வசதிகளை அரசாங்கம் இரத்துச் செய்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் இந்த முடிவு குறித்து பாகிஸ்தான் அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. இந்த முடிவு தொடர்பாக இலங்கை அரசாங்கம் நேற்று நேரடியாக பாகிஸ்தான்

(19) ஆம் பக்கம் பார்க்க

# யாழ். மாநகர சபைக்கு புதிய கட்டடம்

# நிதி ஒதுக்கீட்டுக்கு அமைச்சரவை அங்கீகாரம்

### ஜனாதிபதி சீசேல்ஸ் விஜயம்

மாலைதீவிற்கான விஜயத்தினை நிறைவு செய்துகொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சீசேல்ஸ் சென்றுள்ளார். அங்கு சென்றுள்ள ஜனாதிபதி, இரண்டு நாள் அங்கு தங்கியிருப்பார்

(19) ஆம் பக்கம் பார்க்க

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைக் கட்டட நிர்மாணப் பணிகளுக்குரிய முதலாம் கட்ட நிதி ஒதுக்கீட்டிற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருக்கின்ற நிலையில் எதிர்வரும் நவம்பர் மாதம் அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு- செலவுத் திட்டத்தில் இதற்கான நிதி விடுவிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

புதிதாக அமையவுள்ள இந்த யாழ். மாநகர சபைக் கட்டடம் சுமார் 700 மில்லியன் ரூபா செலவில் அமையவுள்ளதாகவும் தெரிவித்த அவர், முதலாம் கட்ட நிதி விடுவிக்கப்பட்டதும் 2015 ஆம் ஆண்டில் நிர்மாணப் பணிகள் நடைபெறுமென்றும் தெரிவித்துள்ளார்.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கின் முன்பாகவுள்ள யாழ். மாநகர சபைக் காணியிலேயே புதிய மாநகர சபைக் கட்டடம் அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா,25)




## சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சி

(கொழும்பு)

நாட்டுக்குள் வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சுற்றுலா அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளது. கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட அமைதியான சூழலின் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. இதன் காரணமாக இலங்கைக்கு அதிகளவில் அந்நியச் செலாவணி கிடைத்தது.

இந்நிலையில் தமிழ் மக்கள் மீதான வன்முறை தொடர்வது பற்றிய கண்டனங்கள் காரணமாக சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு அவப்பெயர் ஏற்பட்டது. அன்று தொடக்கம் சுற்றுலாத்துறை வீழ்ச்சியை சந்திக்கத் தொடங்கியது. இவ்வாறான நிலையில் முஸ்லிம்களுக்கு எதிரான ஹலால் பிரச்சினையை அடுத்து முஸ்லிம் நாடுகளின் சுற்றுலாப் பயணிகளும் இலங்கை வருவதை தவிர்க்கத் தொடங்கினர்.

அண்மையில் அளுத்கமவில் இனக்கலவரம் வெடித்தது. இதனையடுத்து தற்போது அவுஸ்ரேலியா, ஐரோப்பிய நாடுகளின் சுற்றுலாப்பயணிகள் இலங்கையை

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஆஸி. நோக்கிச் சென்ற படகு ஆபத்தில் 153 பேர் கடலில் தத்தளிப்பு

(சிட்னி)

அவுஸ்ரேலியா நோக்கி சட்டவிரோதமாகப் பயணித்த புகலிடக் கோரிக்கையாளர்களின் படகு ஒன்று நடுக்கடலில் மூழ்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தென்னிந்தியாவிலிருந்து புறப்பட்டதாக நம்பப்படும் இந்தப் படகில் 153 பேர் இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.


கிறிஸ்மஸ் தீவில் இருந்து சுமார் 300 கடல் மைல் தொலைவில் புகலிடக் கோரிக்கையாளர்கள் அடங்கிய படகொன்று தத்தளிப்பதாக தகவல் வெளியான போதிலும், அவுஸ்ரேலிய அரசாங்கம் இத்தகவலை ஊர்ஜிதம் செய்ய மறுத்திருக்கிறது.

asylum-seekers இந்தப் படகிலுள்ளதாகக் கூறப்படும் 153 பேரில் இருவரிடம் பேசியதாக Fairfax ஊடக நிறுவனம் அறிவித்துள்ளது.

இவர்களில் ஒருவர் தமிழ்ப் பெண்ணாக இனங்காணப்பட்டுள்ளார். தாம் வந்த படகு யூன்

(19) ஆம் பக்கம் பார்க்க

## நயினை நாகபூசணிக்கு இன்று கொடியேற்றம்



## ரஜரட்ட பல்கலைக்கழக சிக்கலுக்கு தீர்வு

(கொழும்பு)

ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் கட்டடத்திற்குள் தடுத்துவைக்கப்பட்டிருந்த பல்கலைக்கழக உபவேந்தர் உள்ளிட்ட பேராசிரியர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக நிர்வாகத்துடன் நடைபெற்ற கலந்துரையாடலில் தமது கோரிக்கைகளுக்கு சிறந்த பதில் கிடைத்துள்ளதாக பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் தலைவர் தினேஷ் குமார கூறினார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## மாலைதீவு பாதுகாப்பு படைகளுக்கு இராணுவ பயிற்சியளிக்க திட்டம்

### உதவி வழங்க மகிந்த உறுதி



மாலைதீவு அரசாங்கத்தின் பாதுகாப்புச் சேவைகளை மேம்படுத்த இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்கும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மாலைதீவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அந்த நாட்டின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் கேணல் முகமது நாசிமை, குறும்பா தீவில் சந்தித்துரையாடிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

மாலைதீவு பாதுகாப்புச் சேவைகளை மேம்படுத்தும் வகையில் படையினருக்குப் பயிற்சிகள் வழங்கவும் கருத்தரங்குகள் நடத்தவும் இலங்கை அரசாங்கம் உதவ வேண்டும் என பாதுகாப்பு அமைச்சர் கேணல் முகமது நாசிம்

(19) ஆம் பக்கம் பார்க்க

உள்ளே

தரம் 9, 10, 11
மாணவருக்கான
கணிதபாட வினாத்தாள்

# உயர்தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில், பரிசுக்கூப்பன்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மாணவர்களுக்கான கல்வி-தொழில் வழிகாட்டல் சேவையை 2009ஆம் ஆண்டு முதல் ஐந்து வருடங்களுக்கு மேலாக வழங்கி வரும் சிகரம் நிறுவனம் தற்போது க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான பல்வேறு கற்கைநெறிகள் மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழக அனுமதிக்கான புலமைப்பரிசில் மற்றும் பரிசுக் கூப்பன்களை வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

உயர்தரப் பரீட்சையின் பின்னர் மாணவர்கள் சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்திக்கொள்வதற்காக, முன்கூட்டியே தமது எதிர்காலத்தைத் திட்டமிட வழிகாட்டும் வகையில் இந்த திட்டத்தை முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் சிகரம் அறிமுகப் படுத்தியுள்ளது.

முதற்கட்டமாக 2014 ஓகஸ்ட் உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு பாடசாலை ஊடாகவும், தனியார் கல்வி நிறுவனங்கள் ஊடாகவும் இந்தப் புலமைப் பரிசில் மற்றும் பரிசுக்கூப்பன் களை வெல்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

கூப்பன்களைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்கள், ஹொட்டேல் முகாமைத்துவ கற்கைநெறி, aat. LONDON A/L. ENGLISH THE EASY WAY, IELTS , க.பொ.த. உயர்தர தொழில் நுட்பவியல் பாடங்கள், அச்சு-வானொலி, தொலைக்காட்சி ஊடகக்கற்கை நெறிகள் ஆகிய, சிகரம் நிறுவனம் வழங்கும் தொழில்வாண்மைக் கற்கை நெறிகளை புலமைப் பரிசில்களுடன் தொடரும் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன், மேலும் பல உள்நாட்டு, வெளிநாட்டுச் சேவைகளையும் விசேட கழிவுக் கட்டணங்களுடன் பெற்றுக்கொள்ள முடியும்.

சிகரம் கற்கைநெறிகள் ஒவ்வொன்றும் துறைசார் ஆசிரியர்கள் மற்றும் புலமையாளர்களால் கற்பிக்கப்படும் அதே வேளை, கற்கைநெறிகளை பூர்த்திசெய்யும் மாணவர்களுக்கு பெறுமதிமிக்க சான்றிதழ்களுடன், சிகரம் தொழில் வங்கி ஊடாக வேலைவாய்ப்பு ஏற்பாடுகளும் பெற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றுடன், வெளிநாட்டு கல்வி தொழில் ஆலோசனை சேவை, சிகரம் தொழில் வங்கி பதிவுக்கட்டணம், சிகரம் தொழில்வாண்மைக் கற்கை நெறிகளுக்கான பதிவுக்கட்டணம் என்பவற்றையும் இலவசமாக பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்புக்களை இந்தத் திட்டத்தின் மூலம் மாணவர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஊடாக வழங்கப்பட்டுவரும் மேற்படி புலமைப்பரிசில் மற்றும் பரிசுக் கூப்பன்களுக்கான விண்ணப்பப் படிவங்களை நிரப்பி, மேற்படி நிறுவனங்களின் ஊடாகவே சிகரம் நிறுவனத்துக்கு அவற்றைச் சேர்ப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப்பெறாத மாணவர்கள் இலக்கம் 153, பலாலி வீதி, கந்தர்மடம் என்னும் முகவரியில் அமைந்துள்ள சிகரம் நிறுவன அலுவலகத்தில் நேரடியாகவோ, அல்லது 077361 6798 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டோ விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பதிவுசெய்யும் ஒவ்வொரு மாணவ ரும் சிகரம் நிறுவனத்திட மிருந்து ஏதேனும் ஒரு புலமைப் பரிசில் அல்லது சேவைக் கட்டணக் கழிவைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# மூன்று பேருக்கு டெங்கு

யாழ்.போதனா வைத்திய சாலையில் டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகிய மூவர் நேற்று சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவ் வைத்திய சாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து ஒருவரும், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து இருவருமாக மூவர் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் இந்த மாதம் மட்டும் 44 பேர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (பா)

# மீண்டும் குத்தகைக்கு விடப்படும் குளப்பிட்டிச் சந்தை

குளப்பிட்டிச் சந்தை மீண்டும் குத்தகைக்கு விடப்படவுள்ளது. சந்தையைக் குத்தகைக்கு எடுத்தவர் தனக்கு நட்டம் எனக்கூறி குத்தகையைக் கைவிட்டதனால் இச்சந்தைக்கான கேள்வித் தொகை மீண்டும் கோரப்படவுள் ளது.

அதுவரை நல்லூர் பிரதேச சபை இச்சந்தையை நடத்தவுள்ளது.

சில மாதங்களுக்கு முன்னரேயே குளப்பிட்டிச் சந்தை நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.வசந்தகுமார் தலைமையில் வடமாகாண முதலமைச் சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

மரக்கறி, மீன், இறைச்சி மற்றும் பல்வகைப் பொருட்கள் விற்பனையாகும் இச்சந்தையில் வைத்து மீன் வியாபாரம் செய்வதினால் வீதியில் பயணம் செய்வோர் பெரிதும் இன்னல்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

# குறும்பட வெளியீடு

ஓவியா கிரி யேஷனின் தயா ரிப்பில் பழி குறும்பட வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாணம் ராஜா தியேட்டரில் நடைபெறவுள்ளது.

இப்படத்தினை ஜி.எஸ். துஷி இயங்கியுள்ளார்.


## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக்

*ரீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக். பொலித்தீன். என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3395)

□ □ □ □ □

### விற்பனைக்கு

நல்லின, வேள்விக்கு வளர்க்கக்கூடிய யமுனாபாரி சணல் கிடாய்கள் மற்றும் மறி ஆடுகள், மொறிஸ் மைனர் 2 சிறி கார் என்பன விற்பனைக்குண்டு. நல்லூரடியில் 2 1/2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0771685179

(R/354)


# வருடாந்த திருவிழா

யாழ்.கோட்டை வாசல் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா நாளை காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுத்தலுடன் தொடங்கவுள்ளது.

கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் தொடங்கிய ஆராதனைகள் தினமும் மாலை 4.30 மணிக்குச் செபமாலையுடன் ஆரம்பித்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இன்று மாலை 4.30 மணிக்கு நற்கருணை ஆராதனை, ஆசீர் என்பன இடம்பெறும். நாளை திருநாள் திருப்பலி நிறைவில் புனிதரின் திருச்சொரூப பவனி நடைபெறுமென நாவாந்துறை பங்குத்தந்தை மற்றும் மக்கள் அறிவித்துள்ளனர். (68)

# விளையாட்டு விழா

(திருநெல்வேலி)

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 69 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பாரம்பரிய விளையாட்டு விழா நாளை மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மன்ற முன்றலில் மன்றத் தலைவர் சி.தியாகராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் றொலெக்ஸ் பேக் ஹவுஸ் உரிமையாளர் ச.செல்வராசா கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக டாக்டர் கே.தங்கராசா, கட்டட ஒப்பந்தகாரர் சு.மணிராசா ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் ச.சுப்பிரமணியம், நாதஸ்வர வித்துவான் க.வைத்தீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். சங்கிலியன் மன்ற மாலை நேர வகுப்பு மாணவர் களின் இசையும் அசைவும் நிகழ்ச்சியும் இடம் பெறவுள்ளது. (137)


## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும், சேவை நிலையங்களிலும் 30.06.2013 வரையும் அடகுவைத்து மீட்கப்படாத நகைகள் 11.08.2014 இலிருந்து காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | -- |
| நெல்லியடி | -- |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி.
யாழ்ப்பாணம்.

(C/3717)



## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1069 | திகதி 26.06.2014

வெற்றி எண்கள்: 14 17 23 48 | ஆங்கில எழுத்து: P

ஜக்பொட் பரிசு ரூ. 3,20,03,980/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 3,20,03,980/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 11 | 50,000/= | ரூ. 5,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 256 | 1,000/= | ரூ. 2,56,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 489 | 1,000/= | ரூ. 4,89,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11898 | 60/= | ரூ. 7,13,880/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6331 | 40/= | ரூ. 2,53,240/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 156255 | 20/= | ரூ. 31,25,100/= |
| ஆங்கில எழுத்து | 22592 | 20/= | ரூ. 4,51,840/= |
| | | மொத்தம் ரூ. | 68,39,060/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 8 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 விதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 606452962-4-34 |
| கொழும்பு | 606451537-6-26 |
| யாழ்ப்பாணம் | 606450428-6-26 |
| அம்பாறை | 606448844-7-27 |
| கேகாலை | 606451642-9-19 |
| கண்டி | 606455532-9-49 |
| திருக்கோணமலை | 606446947-6-46 |
| அநுராதபுரம் | 606447481-2-02 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 72,39,060/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 32,310,020/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.06.30 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3698)



## சிறுநீரகம் தேவை

$B^-$ குருதி வகையைச் சேர்ந்த சிறு நீரகம் உடனடியாகத் தேவை.

*தொடர்புக்கு :* 0778999994 0776791028

(R/353)

# கல்வி மேம்பாட்டு ஊக்குவிப்பு வங்கிகளின் முயற்சிக்கு பாராட்டு

(வடமராட்சி)

இன்றைய மாணவர்கள் எதிர்காலத்தில் நாட்டிற்குகந்த சிறந்த பிரஜைகளாகத் திகழ்வதற்கு அவர்களின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகள் மேம்பாடடையவேண்டும் அந்த வகையில் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு வங்கிகளால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் காத்திரமானதாக அமைகிறது. என வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தெரிவித்தார்.



வல்வெட்டித்துறை மக்கள்வங்கியின் 'மழலைகளுடன் மக்கள்வங்கி' விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் மக்கள்வங்கி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. க.பொ.த (சா/த) தரப் பரீட்சை மாணவர்கள், க.பொ.த (உ/த) மாணவர்கள் ஆகியோரின் ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த மக்கள்வங்கி மழலைகள் கல்வி ஊக்குவிப்பிலும் தற்போது ஈடுபட்டுள்ளது. இது நிச்சயம் எதிர்கால சந்ததியினருக்கு சிறப்பாக அமையும்

மழலைகளுக்கு உதவுவதும் மழலைகளின் கல்வி மேம்பாடுகளுக்கு வழி வகுப்பதுவும் மிக முக்கியமாகும். முன்பள்ளிக்கல்வியிலேதான் கல்வி ஆரம்பிக்கப்படுகின்றது.

ஆகவே முன்பள்ளிக்கல்வியைச் சிறப்பாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் இதன் மூலமே எதிர்காலத்தை வளம் பெறச் செய்து நாட்டைச் சுபீட்சப் பாதையில் இட்டுச் செல்ல முடியும்.

மக்கள்வங்கி மழலைகளுடன் மக்கள்வங்கி என்ற விழாவை மிகச் சிறப்பாக நடாத்துவது மகிழ்ச்சிக்குரியதாகும் என்றார். (01)

# "இணுவைக் கந்தா போற்றி" இறுவட்டு வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி கோவில் கும்பாபிஷேகத்தை சிறப்பிக்கும் வகையில் முற்று முழுதான இணுவில் கலைஞர்களின் உருவாக்கத்தில் இறுவட்டொன்று வெளியிடப்படவுள்ளது.

சி.கௌரீஷன் தயாரிப்பில் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1 மணி அளவில் 'இணுவைக் கந்தா போற்றி' என்ற இசை இறுவட்டு ஆலய முன்றலில் வெளியிடப்படவுள்ளது.

பாடல்களை தினேஸ் ஏகாம்பரம், இறயித், அழகேசன், பவானந்த மூர்த்தி, சி.கௌரீஷன், சண்முகப்பிரியன் எழுத அமிர்தலோயனன், அமிர்தசிந்துயன், பாலராயன், மதுசிகன், கிசாந், மதுசா ஆகியோர் குரல் வழங்கியுள்ளனர்.

இவ் இசை இறுவட்டிற்கான இசையினை சுதர்சன் வழங்கியுள்ளார்.

இதில் 18 கலைஞர்கள் பங்கு பற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (48)

# புவனேஸ்வரி அம்பாளுக்கு மகாகும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு அத்தாய் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டப பஷ மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 04 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றவுள்ளது.

கும்பாபிஷேக கிரியைகள் நாளை மறுதினம் காலை 9.15 மணிக்கு விநாயக வழிபாட்டுடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 3 தினங்கள் கிரியைகள் இடம்பெறுவதுடன் நான்காம் நாள் வியாழக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறவுள்ளது.


மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் 10.30 மணி வரையுள்ள சுபவேளையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

வவுனியா கிரியாதத்துவ நிதி சிவஸ்ரீ.சிவகுகநாதக்குருக்கள் கும்பாபிஷேகத்தை நடாத்தி வைக்கின்றார். விழாவிற்கு நல்லை ஆதீனகுரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் அருளாசிகள் வழங்கவுள்ளார். (இ)

# பொங்கல்விழா

மண்டைதீவு பூமாலடி பூம்புகார் அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 2 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் 14 ஆம் திகதி மு.ப 11 மணிக்கு விசேட அபிஷேகம் பூசை வழிபாடுகள் இடம்பெற்று தொடர்ந்து மறுநாள் அதிகாலை 2 மணிக்கு தீமிதிப்பு வைபவம் இடம்பெறும்.(எஸ்பி)



நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற பொலிஸ் அணிவகுப்பின் போது காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தமயந்தி விஜயசிறி அணிவகுப்பை பார்வையிடுவதைக் காணலாம். (18)

# சாத்தான் ஓதும் வேதம்




அன்பான வாக்காளப் பெருமக்களே! தமிழ்த் தேசியவாதிகளே!

என்ன திடீரெண்டு இருந்தாப்போல இப்பிடிச் சொல்லுறன் எண்டு யோசிக்கிறியளோ...

இன்னும் கொஞ்ச நாளில எலெக்ஸன் வரப்போகுதெல்லோ... அதுதான்... அநேகமாக ஒரு ஏழெட்டு மாசத்தில நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கப்போகுதெண்டு கதைக்கினம்....

அதுதான்... மெல்ல மெல்ல நாங்களும் அதுக்கேத்தமாதிரி எதையாவது செய்யோணுமெல்லோ... ஹி...ஹி....

எதுக்கும் நாங்கள் கொஞ்சம் முன்னேற்பாடாக உஷாரா இருக்கிறது நல்லதுதானே!

**இந்த ஐ.நாவோ, அமெரிக்காவோ இந்தியாவோ மோடியோ தமிழ் நாட்டு லேடியோ... சொன்னமாதிரி ஒண்டையும் செய்யிறதாக் காணேல்ல. இதையெல்லாம் எனியும் நாங்கள் நம்பிக்கொண்டிருக்கேலாது...**

சும்மா கீரைக்குப் புளி விடுகிறதைப்போல ஒரு 'இதுக்கு' வைச்சுக்கொள்ளலாம்.

மற்றப்படி அடுத்த தேர்தலுக்கு நாங்கள் எதையாவது ஒண்டைக் கண்டு பிடிக்கத்தானே வேணும்...

**எதுக்கும் இந்தத் தமிழ், தமிழர், தேசியம், தமிழ்த்தேசியம், தமிழற்றை ஒற்றுமை எண்ட கொஞ்சச் சரக்குகளிருக்கு. அதுகளைத்தான் எப்பவும் கவனமாகப் பழுதுபடாமல் வைச்சிருக்கோணும்., இதுகள்தான் எப்பவும் கைகுடுக்கிற சமான்கள்..... அதால இதுகளை அடிக்கடி எடுத்துத் தூசி தட்டித் துடைச்சுப் பளபளப்பாக வைச்சிருக்க வேணும்.**

அதாலதான் சொல்லிறன்... நாங்கள் தமிழர் எண்டு. தமிழரெண்டால்....

தமிழரெண்டால்.....!?

தமிழரெண்டால்.... தமிழர்தான்.

ஆ... நினைவுக்கு வந்திட்டுது... பழந்தமிழர். பண்பாடுடைய தமிழர். ஈழத்தமிழர். புலம்பெயர் தமிழர். அகதித் தமிழர். பாதிக்கப்பட்ட தமிழர். வீரத்தமிழர். மறத்தமிழர். புலித்தமிழர். கிலித்தமிழர்.... கனேடியத் தமிழர், லண்டன் தமிழர்... உலகத் தமிழர்....

சரி, என்னமாதிரியெண்டாலும் வைச்சுக்கொள்ளுங்கோ. ஆனால் நாங்கள் தமிழரெண்டதை மட்டும் மறந்திடாதேயுங்கோ...

தமிழரெண்டால்... அவர்க்கொரு தனிக்குணமுண்டெண்டு சொல்லிறவை.

அந்தக் குணம் என்னெண்டு எனக்குச் சரியா விளங்கேல்ல. சரி, இப்ப அதை விளங்கித்தான் என்ன விளங்காமல் விட்டுத்தானென்ன? ஏதோ ஒரு சரக்கெண்டு வைச்சுக்கொள்ளுங்கோ.... இப்ப அதைப்பற்றி இதுக்கு மேல கதைக்கப்போய்.... ஏன் தேவையில்லாமல் வம்பில மாட்டிக்கொள்ளுவான்...?

இதைப் பற்றித் தேவையில்லாமல் கதைச்சால்... பிறகு, அவனவன் எழும்பி நிண்டு ஆளாளுக்கு இதுதான் சரி, அதுதான் சரி எண்டு கூத்தாடத் தொடங்கீடுவான்...

போதாக்குறைக்கு இணையத்தில வந்து கோவணத்தையே பதம்பார்த்திடுவான்கள்.

அதால, இதையெல்லாம் விட்டுப்போட்டு, இப்ப நாங்கள் இந்தத் **தமிழையும் தமிழர் எண்டதையும் தமிழ்த்தேசியம் எண்டதையும் வைச்சுக்கொள்ளுவம்.**

**இதுகள்தான் எப்பவும் எங்களுக்குச் சோறு போடுறது சுகந் தாறது. வற்றாத அமுதசுரபியாக... எண்டைக்கும் எங்கட தலைமுறை தலைமுறையாக வளந் தாறதாக இருக்கு.**

**அதால, 'நாங்கள் தமிழர்' எண்டு ஒரு தேவாரத்தை அடிச்சு எல்லாருக்கும் தரப்போறம்...**

**அப்பிடியே 'தமிழ்த்தேசியம்' எண்ட வாய்பாட்டையும் தரப்போறம்...**

இந்தத் தேவாரத்தோடயும் வாய்பாட்டையும் கொண்டு இப்ப மெல்ல மெல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்ரை எம்.பி மார் ஊர் ஊராக வரத்தொடங்கீட்டினம்.

**அவை உங்களிட்ட வரேக்க, 'நாங்கள் தமிழர்' எண்டு மட்டும் நினைச்சுக் கொண்டு கண்ணை மூடிக்கொண்டு, முந்தி வாக்குப்போடேக்க ஒண்டையும் யோசிக்காமல் புள்ளடியைக் கீறின மாதிரி இந்தத் தடவையும் ஒருக்கால்.....**

தயவு செய்து கோவப்படாதையுங்கோ... 'நாங்கள் தமிழரெல்லோ..' எண்டதை ஒருக்கால் நினையுங்கோ...

ஏனெண்டால்... நாம் தமிழரெல்லோ....

ஆ... நினைவுக்கு வந்திட்டுது... 'தமிழரெண்டால்... அவர்க்கொரு தனிக் குணமுண்டெண்டு' சொன்னனன் எல்லோ...

அது என்ன குணமெண்டு தெரியுமோ..?

**'தமிழரெண்டால் தவறியும் சிந்தியாதோர்.. தங்கள் துயர் களைய ஒருபோதும் நினையாதோர்...'**

இல்லையில்லை..... மாறிச் சொல்லிப்போட்டன். வாய் தடுமாறி இதைச் சொல்லிப்போட்டன்...

**'தமிழரெண்டால்.... தமிழரெண்டால்... தலைவர்களிடம் எதையும் கேளாதோர்.... தமிழுக்காகத் தமிழ்த்தேசியத்துக்காக எதையும் செய்யா...தோ...ர்....'**

சீச்சீ... பிறகும் ஏதோ குழம்புது...

எல்லாத்தையும் விடுங்கோ... நாங்கள் தமிழர் எண்டதை மட்டும் நினைவில.... நெஞ்சில வைச்சிருங்கோ...

**ஏனெண்டால் இவ்வளவு காலமும் இப்பிடிச் சொல்லியே பழகீட்டம்... வேற தொழிலொண்டயும் பழகேல்ல... வேற வழியும் எங்களுக்குத் தெரியாது... ஹி...ஹி....**

மகிழ்ச்சியும் உழைப்பும் வாழ்நாளை வளர்ப்பவை.

- பிராங்க்ளின்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## வாசிப்பின் வழியாக வாழும் திறன்!

தொலைக்காட்சி, திரைப்படங்கள் போன்ற காட்சி ஊடகங்களால் நமது புத்தகங்கள் வாசிப்பில் பாதிப்பு ஏற்படுகிறதா என்பது பற்றிய நண்பர் ஒருவரின் கட்டுரையைப் பார்க்க நேர்ந்தது. காட்சி ஊடகங்களை விட வாசிப்பின் போது நமது கற்பனைக்குக் கிடைக்கும் சுதந்திரம் அதிகம் என்பதால் வாசிப்பின் முக்கியமும் முதன்மையும் எப்போதுமிருக்கும் என்று அவர் விளக்குகிறார்.

உண்மைதான், பல நாவல்கள் திரைப்படமாக்கப்பட்ட போது அவை வெற்றியடையாமல் போனதுக்கு, நமதிந்த கற்பனைச் சுதந்திரம் படத்தில் வரையறுக்கப்பட்டு விடுவதையே காரணமாகச் சொல்கிறார்கள்.

உதாரணத்துக்கு, கல்கியின் பொன்னியின் செல்வனை இன்று எந்தப் பெரிய இயக்குநர் படமாக எடுத்தாலும், அதில் நமக்குத் தெரிந்த எந்தப் பெரிய நடிகர் வந்தியத்தேவனாக நடித்தாலும், நம் மனதிலிருக்கும் வந்தியத்தேவனைக் கொண்டுவந்து விட முடியாதென்றே நிச்சயமாகத் தோன்றுகிறது. அதுபோலவே குந்தவையும், ஆழ்வார்க்கடியான் நம்பியும்.

வாசிப்பின் எல்லை விரிந்ததுதான். தவிரவும் புத்தகங்களை நாம் தனியாகவே வாசிக்கிறோம். வாசிக்கும்போது நமக்கும் அதற்குமான உறவு அந்தரங்கமானதாகத் தோன்றுகிறது. அதிலுள்ள விஷயங்களை நமது அறிதல், அனுபவம், கற்பனை வீச்சிற்கேற்ப நமக்குரிய விஷயங்களாக மாற்றிக்கொள்ள அதிக சுதந்திரத்தை வாசிப்புத் தருகிறது.

ஆனால், நம்மத்தியில் வாசிப்புப் பழக்கம் அருகி வருவது பற்றியும் நண்பர் கவலை தெரிவிக்கிறார். *“நூலகங்கள் ஆட்களின்றி வெறிச்சோடிப்போயுள்ளன. வாசிக்கவும் அதைப்பற்றி உரையாடவும் கூடியதாக இருந்த சனசமூக நிலையங்களின் பக்கம் இப்பொழுது யாருமே போவதில்லை. ஒரு காலம் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டதற்காகக் கடுமையாகக் கோபமுற்ற மக்கள், அந்த நூலகத்தை இழந்ததை தங்கள் வாழ்வின் மீது நிகழ்த்தப்பட்ட பெரும் அநீதியென உணர்ந்து கொந்தளித்தவர்கள் இப்பொழுது நூலகங்களைக் குறித்து கரிசனையற்று வருகிறார்கள். இது வெட்கத்துக்கும் துக்கத்துக்குமுரியது...”* என்று அவர் எழுதுகிறார்.

வாசிப்பு மட்டுமல்ல, சிறுவர்கள் கதை கேட்கும் பழக்கமும் கிட்டத்தட்ட வழக்கொழிந்து வருகிறது. கதை கேட்பதன் மூலமும் வாசிப்பதன் மூலமும் குழந்தைகள் கற்பனை செய்யப் பழகுகிறார்கள். இதுதான் அவர்களைச் சுயமாகச் சிந்திக்கவும் கற்றுக் கொடுக்கிறது. நம் சிந்தனை உருவாகி வருவதே சிறு வயதில் கேட்ட வாசித்த கதைகளின் வழியாகத்தான் என்பதை இன்று மொழியியலாளர்கள் விளக்குகிறார்கள்.

அடுத்த மனிதரை எந்த விதத்திலும் இம்சிக்கக் கூடாது. நமக்கிருக்கும் இன்பங்கள், துன்பங்கள், ஏக்கங்கள், ஏமாற்றங்கள், சலிப்புகள், சங்கடங்கள் எல்லாமே ஒவ்வொரு மனிதருக்குமானவைதான். பூமியில் வாழவும், சுவாசிக்கவும், கடவுளை வணங்கவும், கஷ்டங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளவும் நமக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ அவ்வளவு உரிமையும் நம் சக மனிதனுக்கும் இருக்கிறது என்பதை உணர்த்திக் கொண்டிருப்பவை இலக்கியங்களே.

மற்றவர்களுடன் வாழ்வது என்ற கலையையும் அத்தகு வாசிப்பே நமக்கு அளிக்க முடியும். நமக்குள் தன்னலத்தைப் பின்தள்ளி விடுவதும், பிறர் துயர் துடைக்க இந்த வாழ்வைப் பயன்படுத்துவதுமே உயர்வென்று இலக்கியங்கள் நமக்கு வலியுறுத்தும்.

வாசிப்புப் பழக்கம் மூலம், வாழும் வழி பிடிபடும். நம் சிறுவர்கள் நல்ல மனிதர்களாக வளர்வதற்கு, பாடப் புத்தகங்களுக்கு வெளியே தேடி வாசிப்பதற்கு ஊக்கப்படுத்துவோம். இது வளர்ந்தவர் ஒவ்வொருவரினதும் கடமை.

- *ஆசிரியர்*

# ஐ.நா. எந்தக்குழுவை அமைத்தாலும் இலங்கை வர அனுமதியில்லை

## - என்கிறது ஜாதிகஹெல உறுமய -

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு எந்த விசாரணைக்குழுவை நியமித்தாலும் அதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். சிங்கள மக்களின் விருப்பத்தை நாடாளுமன்றத்தின் மூலமாக வெளிப்படுத்தி விட்டோம் என தெரிவிக்கும் அரசாங்க பங்காளிக்கட்சியான ஜாதிக ஹெல உறுமய, உள்ளக விசாரணைகள் சுயாதீனமாக இடம்பெறுகின்றன எனவும் தெரிவித்தது.

இது தொடரபாக உதய கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை மீதான சர்வதேச விசாரணையொன்று இடம்பெறுவதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்பதை அரசாங்கம் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டு விட்டது. இந்நிலையில் இலங்கை மீதான விசாரணைகளை மேற்கொள்ளும் முயற்சியில் ஐ.நா. விசாரணைக்குழு செயற்பட்டு வருகின்றது.

யார் எவ்வாறான விசாரணைக்குழுக்களை நியமித்தாலும் இலங்கை மீதான சர்வதேச தலையீட்டிற்கு ஒருபோதும் இடமில்லை. இந்த நாட்டை சீரழிக்கும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் நாம் இடமளிக்கமாட்டோம்.

இலங்கையில் சிங்கள மக்களின் விருப்பம் என்னவென்பது நாடாளுமன்றில் கொண்டு வரப்பட்ட பிரேரணையினை நிறைவேற்றியதன் மூலமாக வெளிப்பட்டு விட்டது.

ஒரு சில பிரிவினைவாத அமைப்புக்களும் சர்வதேசத்திடம எமது நாட்டைக் காட்டிக் கொடுக்கும் தேசத்துரோகிகளையும் தவிர ஏனைய அனைவரும் சர்வதேச விசாரணைக்கு எதிர்ப்பினையே தெரிவிக்கின்றனர். இவ்வாறான நிலையில் சர்வதேச விசாரணைக்குழுவொன்று இலங்கைக்குள் வருவதை மக்கள் அனுமதிக்க மாட்டார்கள்.

மேலும் யுத்தத்தில் 40 ஆயிரம தமிழ் மக்கள் கொல்லப்பட்டதற்கு எந்தவொரு ஆதாரமும் இல்லை. யுத்தக் குற்றங்கள் இடம்பெற்றுள்ளதா என்பதற்கும் காணாமற் போனோர் தொடர்பில் கண்டறிவதற்கும் இலங்கையில் சுயாதீன விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

எமது நாட்டிலும் பக்கச்சார்பற்ற வகையில் விசாரணைகள் இடம்பெறுகின்றன. எனவே அதற்கு எவ்வித தடைகளும் இன்றி ஆதரவு வழங்கப்பட வேண்டும். இங்கு அரசியல் நடத்தும் கட்சிகள் உள்ளக விசாரணையினை ஆதரித்து நாட்டின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டும். அதை விடுத்து சர்வதேச விசாரணைகளுக்கு ஆதரவு வழங்கக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார்.

# உண்டியல் திருட்டு முயற்சி முறியடிப்பு

அராலி கிழக்கு ஆவராம்பிட்டி முத்துமாரி அம்மன் ஆலயத்தின் உண்டியலை கடந்தபுதன் கிழமை அதிகாலை உடைத்து அதில் இருந்த பணத்தை திருட முற்பட்டவர் என்று கூறப்படுபவரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து தம்மிடம் ஒப்படைத்துள்ளதாக வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த திங்கட்கிழமை முடிவடைந்ததையடுத்தே இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அராலி கிழக்கைச் சேர்ந்த 27 வயதுடைய நபரே மேற்படி சம்பவத்தின் போது மடக்கிப்பிடிக்கப்பட்டதுடன், இவர் ஏற்கனவே பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

மேற்படி ஆலயத்தில் கடந்த புதன்கிழமை அதிகாலை 12.30 மணியளவில் ஆலயக்கதவினை உடைத்த திருடன் ஆலயத்தின் உண்டியலினை உடைக்க முற்பட்டுள்ளான்.

இதன்போது, சத்தம் கேட்டு விழித்துக் கொண்ட ஆலயக் காவலாளி திருடனைத் துரத்திய போது திருடன் மதில் பாய்ந்து ஓடியுள்ளான்.

இதனைத் தொடர்ந்து ஆலய வீதிகளில் கடைகள் அமைத்திருந்தவர்கள் தப்பியோடிய திருடனை மடக்கிப்பிடித்து வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# காவியுடைகளைக் களைய அரசாங்கம் கேட்கவில்லை

## - எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு -

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் பிக்கு மாணவர்கள் அவர்களின் காவியுடைகளை களையவேண்டும் என்று அரசாங்கம் கேட்கவில்லை. எனினும் பல்கலைக்கழகங்களில் படிக்கும் பிக்கு மாணவர்கள் புதிய பிக்கு மாணவர்களுக்கு இதனை வலியுறுத்துவதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

பௌத்த மதத்தலங்களில் பௌத்த பிக்குகளுக்கு உரிய போதனைகள் வழங்கப்படுகின்றன. எனினும் பல்கலைக்கழகங்களில் பயிலும் பிக்குமாணவர்கள் மாற்று போதனைகளை பின்பற்றுகின்றனர்.

1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்கலைக்கழகங்கள் ஜே.வி.பி. மற்றும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இயங்கின. எனினும் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் அவர்களிடம் இருந்து பல்கலைக்கழகங்களை மீட்டதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

# மேலதிக கள்ளு வைத்திருந்த 15 பேருக்கு அபராதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரிப் பகுதியில், அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேலதிகமாக கள்ளு வைத்திருந்த குற்றச்சாட்டில் கடந்த வாரம் பிடிபட்ட 18 பேரில் 15 பேருக்கு தலா 1000 ரூபா தண்டம் விதித்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ. வாகப்தீன் உத்தரவிட்டார்.

இதேவேளை, மன்றிற்குச் சமூகமளிக்காத ஏனைய மூவருக்கும் எதிராக நீதவான் பிடியாணையையும் பிறப்பித்தார்.

கிளிநொச்சி மதுவரித் திணைக்களத்தினரால் மேற்படி 18 பேரும் கடந்த வாரம் பிடிக்கப்பட்டதுடன், கிளிநொச்சி நீதிமன்றத்தில் இவர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதவான் மேற்படி உத்தரவுகளைப் பிறப்பித்தார்.


# வேட்டைக்குச் சென்றவர் மயக்கமுற்று உயிரிழந்தார்

(யாழ்ப்பாணம்)

மயக்கமுற்ற நிலையில் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அனுப்பியபோது இடைவழியில் உயிரிழந்தார். பின்னர் இவரது சடலம சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தில் இயக்கச்சி கோவில்வயலைச் சேர்ந்த ஏழு பிள்ளைகளின் தந்தையான பொன்னையா நவரத்தினம் (வயது - 56) என்பவரது சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று நாட்களுக்குமுன் வேட்டைக்குச் சென்ற இவர் வீடு திரும்பாத நிலையில் சங்கத்தாவயல் சுடலையில் மயங்கிய நிலையில் மீட்கப்பட்டார் என்றும், வீட்டுக்கு அவரை அழைத்துச் சென்றபோது அவரது உடல் சோர்வடைந்ததால் பளை மருத்துவமனைக்கு தாம் கொண்டு சென்றனர் என்றும் உறவினர்கள் தெரிவித்தனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக அவரை சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்ட போது இடைவழியில் உயிரிழந்துவிட்டார் என்றும் உறவினர் தெரிவித்தனர். சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# வடக்கில் கம்யூனிஸ்ட் இயக்கத்தை வேரூன்ற வைத்தவர்

**சண்முக சுப்பிரமணியம்**



"கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்" என இலங்கையின் வடபுலத்து மக்களாலும், "காத்தார்" என யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர் சமூகத்தாலும் அன்புடனும், அர்த்தத்துடனும் அழைக்கப்பட்டு வந்த முருகுப்பிள்ளை கார்த்திகேசன் (மு.கா) அமரத்துவமடைந்து, இவ்வருடம் செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதியுடன் 37 வருடங்கள் உருண்டோடி விட்டன.

இந்த 37 வருடங்களில் அவர் பெரிதும் நேசித்து வந்த தமிழ் மக்களின் வாழ்விலும் உலக அரங்கிலும் எவ்வளவோ பிரமாண்டமான மாற்றங்கள் நிகழ்ந்தேறிவிட்டன.

இந்த மாற்றங்கள் நிகழ்ந்த போதெல்லாம், அவை பற்றி, கார்த்திகேசன் உயிருடனிருந்திருந்தால், என்ன கருத்துகளைக் கூறியிருப்பார், அவற்றுக்கு எத்தகைய தீர்வுகளை முன் வைத்திருப்பார், என்னென்ன நகைச்சுவைகளை அவிழ்த்திருப்பார் என, அவருடன் பழகிய பல்வகை மனிதர்களும் நிச்சயமாக ஊகங்களை வெளியிட்டிருப்பர்.

எமது மதிப்புக்குரிய ஆசானும், தோழருமான கார்த்திகேசன் 1919ஆம் ஆண்டு பிறந்து, 1977இல் மறைந்தார். அவர் இப்பூவுலகில் வாழ்ந்தது மொத்தம் 58 ஆண்டுகள் மட்டுமே. சுமார் அரை நூற்றாண்டுகால இவ்வாழ்க்கையில், அவர் இலங்கை இடதுசாரி இயக்க வரலாற்றிலும், தமிழ் மக்கள் வாழ்விலும் பதித்து விட்டுச் சென்ற சுவடுகள் என்றும் காலத்தால் அழியாதவை.

உலக வரலாற்றில் சொற்ப காலம் வாழ்ந்தாலும், மனித சமுதாயத்துக்காக என்றென்றைக்குமாக தமது வாழ்வை அர்ப்பணித்து விட்டுச் சென்ற, லெனின், சேகுவேரா, ஜூலியஸ் பூசிக், பகத்சிங், சுப்பிரமணிய பாரதி போன்றோரின் வரிசையில், எமது தேசத்தின் அழியாத சொத்தாக கார்த்திகேசனும் இருக்கிறார் என்பதை நாம் எவ்வித தயக்கமும் இன்றி பெருமையுடன் சொல்லிக் கொள்ளலாம்.

கார்த்திகேசன் தனதுகல்லூரிப் படிப்பை மலேசியாவில் முடித்த பின்னர், தாயகம் திரும்பி இலங்கை பல்கலைக் கழக கல்லூரியில் ஒரு மாண-வராகச் சேர்ந்து பட்டதாரியானார். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் காலத்திலேயே அவர், ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளாலும், மார்க்சிய கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்டு, தன்னை ஒரு கம்யூனிஸ்ட்டாக வளர்த்துக் கொண்டார்.

அந்தக் காலத்தில் அவர் பல்கலைக்கழக கல்லூரியிலிருந்து வெளிவந்த "மாணவர் செய்தி" என்ற ஏட்டுக்கு ஆசிரியராக இருந்து எழுதிய கட்டுரைகளும் செய்திகளும் மாணவ சமூகத்தை மட்டுமின்றி, இலங்கையின் எதிர்கால அரசியல் தலைவர்களையே ஈர்ப்பனவாக இருந்தன.

அதன் காரணமாக பிற்காலத்தில் இலங்கையின் சக்திவாய்ந்த அரசியல்வாதியாக மாறிய ஜே.ஆர். ஜெயவர்தனாவே, ஒரு சந்தர்ப்பத்தில் தனது செய்தியொன்றை அந்தப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக கார்த்திகேசனை நாடிச் சென்ற சம்பவமும் நிகழ்ந்தது.

பல்கலைக்கழகப் படிப்பை மிகவும் சிறப்பாக முடித்த கார்த்திகேசன், விரும்பியிருந்தால் இலங்கையின் மிகச் சிறந்த சிவில் நிர்வாக உத்தியோகத்தர்களில் ஒருவராக வந்திருக்க முடியும். அல்லது முதலாளித்துவ கட்சியொன்றில் இணைந்திருந்தால் ஒரு அமைச்சராகக் கூட சில வேளைகளில் வந்திருக்கக் கூடும்.

ஆனால் அவர் அதற்கு மாறாக, கம்யூனிஸ்ட் கட்சியின் முழு நேர ஊழியர் என்ற கடுமையான, ஆனால் மக்களுக்கு உவகையுடன் சேவையாற்றக் கூடிய பாதையைத் தேர்ந்தெடுத்தார். கட்சிக்கு கிடைக்கும் மிகச் சொற்ப வருமானத்தில், தனது இளம் மனைவியுடன், கொழும்பு கொட்டா வீதியிலிருந்த கம்யூனிஸ்ட் கட்சி காரியாலயத்தில், வேறு பல தோழர்களுடன் இணைந்து கிடைப்பதைக் கொண்டு வாழும் "கம்யூன் வாழ்க்கை"யை வாழ்ந்தார்.

அவர் கொழும்பில் கட்சியின் முழு நேர ஊழியராக வேலை செய்த காலத்தில் கட்சியின் புகழ்மிக்க ஆங்கில வார ஏடான "போர்வாட்" (Forward) பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்தார். பத்திரிகைக்கு அச்சுக் கோர்ப்பதிலிருந்து, அச்சிட்ட பத்திரிகைகளை மடித்து எடுத்துச் சென்று, வீதிகளில் கூவி விற்பது வரை, அவர் மிகக் கடினமாகவும், அர்ப்பணிப்புடனும் பணியாற்றினார்.

அந்தச் சூழ்நிலையில் தான், இலங்கையின் வடபுலத்தில் கட்சிக் கிளையொன்றை ஸ்தாபிக்கும் பொருட்டு, கம்யூனிஸ்ட் கட்சி அவரை யாழ்ப்பாணம் அனுப்பியது. அங்கு 1944 இல் தன் மனைவி சகிதம் சென்ற அவர், கட்சிக்கு பொருளாதார ரீதியில் ஒரு சுமையாக இருக்கக் கூடாது என்ற எண்ணத்தில், யாழ். இந்துக்கல்லூரியில் சாதாரண ஆசிரியத் தொழில் ஒன்றைப் பெற்று, அங்கு கல்வி கற்பித்தபடியே, கட்சி அமைப்பு வேலைகளிலும் ஈடுபட்டார்.

அவரது ஆசிரியத் தொழில், அவரது கட்சிப் பணிகளுக்கு மிகவும் வாய்ப்பான ஒரு தொழிலாக அமைந்து கொண்டது. அவர் தன்னிடம் கல்வி கற்ற மாணவர்களுக்கு முற்போக்கான கருத்துகளை ஊட்டவும், அவர்களது பெற்றோர்களான யாழ். தமிழ் சமூகத்துடன் உறவு கொள்ளவும், கல்வித்துறையின் ஏனைய சகாக்களுடன் உறவு பூணவும் அத்தொழில் பெரும் வாய்ப்பைத் திறந்துவிட்டது.

அவர் யாழ். இந்துக் கல்லூரியில் சுமார் 30 வருடங்கள் ஆசிரியராகவும், பின்னர் சிறிது காலம் பதில் அதிபராகவும் கடமையாற்றினார். அதன் பின்னர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி என்பனவற்றின் அதிபராக இருந்து ஓய்வு பெற்றார்.

ஆரம்ப காலத்தில் தோழர் கார்த்திகேசனுடன் கட்சிப் பணிகளில் இணைந்து கொண்டவர்களில் தோழர்கள் இராமசாமி ஐயர், எம்.சி.சுப்பிரமணியம், டாக்டர். சு.வே. சீனிவாசகம், மகாலிங்கம் மாஸ்டர், ஆர்.ஆர். பூபாலசிங்கம், எஸ்.கே. கந்தையா, வீ.ஏ. கந்தசாமி, அரசடி இராசையா ஆகியோர் முக்கியமானவர்களாவர். பிற்காலத்தில் அ.வைத்திலிங்கம், ஐ.ஆர். அரியரத்தினம், பொன். கந்தையா, காதர் போன்ற பலர் கார்த்திகேசனுடன் இணைந்து கட்சிப் பணிகளை முன்னெடுத்தனர்.

கம்யூனிஸ்ட் கட்சி ஏழை எளிய மக்களுக்காக முன்வைத்த விமோசன வேலைத் திட்டங்கள் மட்டுமின்றி, முழுத் தமிழ் மக்களுக்காகவும் முன்வைத்த, "வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு பிரதேச சுயாட்சி" என்ற யதார்த்தபூர்வமான தீர்வு, 1956இல் பண்டாரநாயக்க அரசாங்கம் கொண்டு வந்த சிங்களம் மட்டும் சட்டத்தை நாடாளுமன்றத்திலும், வெளியிலும் உறுதியாக எதிர்த்து நின்ற நிலைப்பாடு என்பனவும், தமிழ் மக்கள் மத்தியில் கட்சிக்கு பெரும் செல்வாக்கை பெற்றுத்தந்தன.

1956 பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பருத்தித்துறை தொகுதியில் போட்டியிட்ட தோழர் பொன். கந்தையா அமோக வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினரானார். வட்டுக்கோட்டை தொகுதியில் போட்டியிட்ட தோழர் அ.வைத்திலிங்கம், அத்தொகுதியில் வெற்றிபெற்ற தமிழரசுக் கட்சி வேட்பாளர் அ.அமிர்தலிங்கத்திடம் மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்திலேயே தோல்வியுற்றார். அதேபோல கட்சி சார்பில் யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிட்ட தோழர் கார்த்திகேசன் கணிசமான வாக்குகள் பெற்று கட்டுப் பணத்தைப் பெற்றார். அங்கு சமசமாஜக்கட்சி தனது வேட்பாளரை போட்டிக்கு நிறுத்தாது விட்டிருந்தால், கார்த்திகேசன் தெரிவாகியிருக்கலாம் என்பதை, வேட்பாளர்களுக்கு போடப்பட்ட வாக்குகள் காட்டி நிற்கின்றன.

இருந்த போதிலும், யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தலில் வண்ணார்பண்ணை வட்டாரத்தில் கட்சி சார்பாகப் போட்டியிட்ட கார்த்திகேசன், அங்கு போட்டியிட்ட மிகவும் செல்வாக்கு மிக்க, பிற்காலத்தில் மாநகர சபை முதல்வராக வந்த, தமிழ் காங்கிரசின் வேட்பாளரான துரைராசாவைத் தோற்கடித்து வெற்றி பெற்றார். அதுமாத்திரமல்ல, அவர் மாநகர சபை உறுப்பினராக இருந்த காலத்தில் தான், தமிழரசு - காங்கிரஸ் கட்சிகளுக்கிடையிலான முரண்பாட்டைப் பயன்படுத்தி, யாழ்ப்பாணத்தின் சனத்தொகையில் மிகச் சிறு தொகையினரான முஸ்லிம்களின் பிரதிநிதியாகத் தெரிவான சுல்தான் என்பவரை யாழ். மாநகர சபையின் முதல்வராக்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்று நாம் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கையில், இடதுசாரி இயக்கங்கள் விட்ட தவறுகளாலும், தமிழ் - சிங்கள தேசிய வெறிப் போக்குகள் விளைவித்த நாசத்தாலும், சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஏற்பட்ட பிளவுகள் பலவீனங்களாலும், பொதுவாக இலங்கையிலும், குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும், இடதுசாரி இயக்கம் மிகவும் பலவீன-மான ஒரு நிலையில் இருப்பதையே காண முடிகிறது. ஆனால் இது நிரந்தரமானதல்ல.

தோழர் கார்த்திகேசன் அவர்கள் அமரத்துவமடைந்த 33ஆவது வருடத்தை நினைவு கூருகின்ற இவ்வேளையில், வெல்லப்பட முடியாத மார்க்சிசம்-லெனினிசம் என்ற ஆயுதத்தைக் கொண்டு, மீண்டும் இலங்கையில் ஒரு சக்தி வாய்ந்த கம்யூனிஸ்ட் இயக்கத்தை கட்டியெழுப்புவதே, அவருக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாக அமையும்.

## அமரர் கார்த்திகேசன் 95 ஆவது பிறந்ததின நினைவுநாள் நிகழ்வு

**கார்த்திகேசன் மாஸ்டர் என்று மாணவர்களால் மட்டுமல்ல ஏனையோராலும் அழைக்கப்பட்ட தோழர் கார்த்திகேசன் அவர்களின் பிறந்தநாள் நினைவுதினம் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.**

**கார்த்திகேசன் மாஸ்டர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, யாழ்.பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, யாழ்.இந்துக் அதிபராகக் கடமையாற்றியவர். மார்க்சிய சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டு அதன் வழி தனது வாழ்க்கையை நடாத்தி முன்னுதாரணமாகச் செயற்பட்டவர். முற்போக்கான வழியில் உறுதியாகச் செயற்பட்டு அன்றைய இளைஞர்களின் இதயத்தில் மானிட நேயக் கொள்கையான மார்க்சியத்தை ஆழப் பதித்து வழிநடாத்தியவர் தோழர் கார்த்திகேசன்.**

**சட்டத்தரணி எஸ்.ஜீ.புஞ்சிஹேவா, திரு.எம்.வாமதேவன் (ஓய்வுநிலை அமைச்சுச் செயலாளர்), ஜனாப் எம்.ஜீ.முஸ்தபா (ஓய்வுநிலை ஆசிரியர்) ஆகியோரின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நிகழ்வின் நோக்கம் பற்றி திரு.எஸ்.சிவகுருநாதனும், "கல்வியும் தேசிய ஒற்றுமையும்" என்ற தலைப்பில் சட்டத்தரணி எஸ்.ஜீ.புஞ்சிஹேவாவின் உரையும், பேராசிரியர் சபா.ஜெயராசாவின் சிறப்புரையும் இடம்பெறும். நன்றியுரை திருமதி.கே.சுமதி.**

# சர்வதேச சமூகத்தை எதிரியாக்கி நாட்டை நெருக்கடிக்குள் தள்ளுகிறது அரசு

## சஜித் குற்றச்சாட்டு



அரசாங்கம் சர்வதேச சமூகத்தை எதிரியாக்கிக் கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். அம்பாந்தோட்டை கொஹலகஸ்கல என்னும் இடத்தில் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்தை எதிரியாக்கிக் கொண்டதன் மூலம் நாடு பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றது.

ஆளும் கட்சி அமைச்சர்கள் மேடைகளில் வீராவேசமாக பேசும் பேச்சுக்களுக்கு தொடர்ந்தும் கரகோசம் எழுப்பி உற்சாகமளிக்க மக்கள் தயாரில்லை.

அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடும் போக்குவாதத்தை இல்லாதொழிக்க வேண்டும் எனவும், சர்வதேச சதித்திட்டங்களை முறியடிக்க வேண்டுமெனவும் மேடைகளில் பிரசாரம் செய்து வருகின்றனர்.

ஐக்கிய நாடுகள் விசாரணைக்குழு விசாரணைகளை நடாத்தவுள்ளது. விசாரணைக் குழுவினை நாட்டுக்குள் அனுமதிப்பதில்லை என நாடாளுமன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும், விசாரணைக் குழுவின் விசாரணைகளை நிறுத்த முடியாது.

அரசாங்கம் அமைச்சர்களை தரம் தூதர்களாக்கி நாடு முழுவதிலும் அனுப்பி வைத்துள்ளது.

அண்மைய வன்முறைகளில் உயிர், உடமை மற்றும் உள ரீதியான பாதிப்புக்களை எதிர்நோக்கியவர்களுக்கு எவ்வாறு ஆறுதல் கூறுவது.

பாரிய சேதம் விளைவிக்கப்பட்டதன் பின்னர் பாதிக்கப்பட்டவர்களை எவ்வாறு ஆற்றுப்படுத்துவது.

ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள அரசாங்கம் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றது.

மக்களுக்கு பொய் வாக்குறுதிகளை அளித்து அரசாங்கம் செய்வதறியாது செயற்பட்டு வருகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இராணுவத்தில் முஸ்லிம்களை இணையுமாறு அழைப்பு



அரசாங்கம் சர்வதேச சமூகத்தை எதிரியாக்கிக் கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் ஒத்துழைப்புக்கும் ஒருங்கிணைப்புக்குமான கவுன்சிலின் கூட்டத்தில் விசேட உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார்.

தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவர்கள் இராணுவத்தில் இணைகும் செயற்பாடு இடம்பெறுகின்றது. இதில் முஸ்லிம்களும் இணைய முடியும். இதன் ஊடாக நாட்டை பாதுகாப்பதற்கு உதவ முடியும். என்னுடன் இங்கு 17 இராணுவத்தினர் வந்துள்ளனர். இவர்களில் நான்கு பேர் முஸ்லிம்களாகும்" என்றார்.

5,000 முஸ்லிம் பொலிஸாரை பொலிஸ் திணைக்களத்தில் இணைக்குமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் அறிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே இராணுவத்தில் முஸ்லிம்கள் இணையுமாறு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்நாயக்க அழைப்புவிடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மங்களவின் குற்றச்சாட்டுக்களை இன்னும் நிராகரிக்கவில்லை அரசு

## என்கிறார் ஜோன் அமரதுங்க

புலனாய்வுப் பிரிவின் தொடர்பில் மங்கள சமரவீர அண்மையில் வெளியிட்ட குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் இதுவரையில் உத்தியோகபூர்வமாக நிராகரிக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

புலனாய்வுத் தகவல்களை அம்பலப்படுத்தப் போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் எச்சரிக்கை விடுத்தால் அது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய வழமையான நடவடிக்கைகள் சில காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். எனினும் அரசாங்கம் இந்த வழிமுறைகளை பின்பற்றத் தவறியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளின் பெயர்கள் வெளியிட்டமை தொடர்பிலான மங்களவின் குற்றச்சாட்டைத் தவிர்ந்த ஏனைய குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் இதுவரையில் நிராகரிக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். புலனாய்வுப் பிரிவினர் தொடர்பில் இராணுவப் பேச்சாளர் கருத்து வெளியிட எவ்வித சட்ட ரீதியான அந்தஸ்தும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சர்ச்சை தொடர்பில் உரிய அமைச்சு எவ்வித அறிவித்தலையும் விடுக்காமை கவனிக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார். 17ஆம் திருத்தச் சட்டம் இரத்துச் செய்யப்பட்டதன் மூலம் ஒட்டு மொத்த அரச சேவையும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

வாழ்க்கைச் செலவில் பாதிக்கப்பட்டுள்ள அப்பாவி மக்களைப் பாதுகாக்க அரசாங்கத்திற்கு எவ்வித அவசியமும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அரசாங்கத்தை பாதுகாக்க ஒட்டு மொத்த அரசப் பொறிமுறையும் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# சேதமடைந்த சொத்துக்களுக்கு 200 மில்லியன் ஒதுக்கீடு

அளுத்கம மற்றும் தர்ஹாநகரில் இடம்பெற்ற கலவரத்தின் போது சேதம்விளைவிக்கப்பட்ட சொத்துக்களுக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்காக 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கியுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரகோன் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் களுத்துறை மாவட்டச்செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார். பேருவளை, களுத்துறை, மத்துகம பகுதிகளில் பாதிக்கப்பட்ட சில கட்டடங்கள் பாதுகாப்பு படையினரால் திருத்திக்கொடுக்கப்படுமெனவும் களுத்துறை மாவட்ட செயலகத்துக்கு ரூபா 50 மில்லியன் ஒதுக்கியுள்ளதாகவும் இராணுவத்துக்கு ரூபா 150 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# மாகாணசபை உறுப்பினர்களுக்கு தற்காலிக பாதுகாப்பே வழங்கப்பட்டது

## அஜித் ரோஹண

தமது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நீக்கப்பட்டுள்ளதாக வட மாகாண சபையின் சில உறுப்பினர்கள் நேற்று முன்தினம் அமர்வின் போது தெரிவித்தனர்.

வடமாகாண சபையின் மூன்று உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட பொலிஸ் பாதுகாப்பு மீளப்பெறப்பட்டுள்ளதாக பொலிஸார் உறுதிப்படுத்தினர்.

குறித்த மாகாண சபை உறுப்பினர்களுக்கு மீண்டும் பொலிஸ் பாதுகாப்பு தேவைப்படுமாயின் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலாளரிடம் அனுமதி பெறப்பட வேண்டும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

குறித்த மூன்று மாகாண சபை உறுப்பினர்களுக்கும் தற்காலிகமான பொலிஸ் பாதுகாப்பே வழங்கப்பட்டிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# இனக்கலவரத்தை தடுப்பதற்கு அன்று தவறிவிட்டது ஐ.தே.க.

## ஏற்றுக்கொள்கிறார் ரணில்



தமிழர்களுக்கு எதிரான 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தை தடுப்பதற்கு அன்று ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று அக்கட்சியின் தேசியத் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதே போன்றதொரு தவறை இன்றைய அரசாங்கம் செய்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாடாளுமன்ற கட்டடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமயத் தலைவர்கள் மற்றும் சமூகத்தலைவர்களுடனான சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வன்முறைகள் நிறைவுற்றாலும் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான பிரச்சினை இன்னும் முடிவடையவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# ஈராக்கிற்கு பயணங்கள் மேற்கொள்வதை மறுஅறிவித்தல் வரை தவிருங்கள்

## வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

ஈராக்கில் நிலவுகின்ற யுத்த சூழ்நிலை காரணமாக மறுஅறிவித்தல் வரை அந்த நாட்டிற்கு பயணம் மேற்கொள்வதை தவிர்க்குமாறு வெளிவிவகார அமைச்சு, இலங்கையர்களுக்கு அறிவித்துள்ளது.

அத்துடன் ஈராக்கில் தற்போது தங்கியுள்ள அனைத்து இலங்கையர்களும், பாக்தாத்திலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் தொடர்புகொண்டு, தேவையான அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளுமாறும் அமைச்சு கேட்டுள்ளது.

0096 4770 48 47 458 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது slembirq@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியுடன் ஈராக்கிற்கான இலங்கைத் தூதரகத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஈராக்கில் தங்கியுள்ள இலங்கையர்களுக்கு இதுவரை எவ்வித பிரச்சினைகளும் ஏற்படவில்லை என அந்த நாட்டிற்கான இலங்கைத் தூதுவர் சுமித் நாகந்தல சுட்டிக்காட்டியுள்ளார்.

மோதல் இடம்பெறும் பகுதிகளில் இலங்கையர்கள் தங்கியிருப்பமை தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் பதிவாகவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கலவரத்தில் சேதமடைந்த கட்டடங்களின் புனரமைப்புப் பணிகளில் இராணுவம்



பேருவளை மற்றும் அளுத்கம ஆகிய பிரதேசங்களின் புனர நிர்மாணப் பணிகளை இராணுவம் மேற்கொள்ளும் என, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அண்மையில் பௌத்த முஸ்லிம் கலவரத்தினால் பிரதேசத்தில் பாரியளவில் சொத்து சேதம் ஏற்பட்டது. வன்முறைகளினால் சேதமடைந்த கட்டடங்களை புனர்நிர்மாணம் செய்வதற்கு இராணுவத்தினரை ஈடுபடுத்த உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் ஊழிய வளத்தை இலவசமாக வழங்குவார்கள் எனவும், கட்டட நிர்மாணப் பொருட்களை வழங்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். படையினரின் இலவச ஊழிய வளத்தைப் பயன்படுத்தி பிரதேசத்தில் சேதமடைந்த கட்டடங்கள் மீள்நிர்மாணிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டில் மீளவும் இன வன்முறைகள் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ஏற்கனவே பணிப்புரை விடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மாலைதீவிற்கு விஜயம் செய்வதற்கு முன்னதாக இந்தப் பணிப்புரைகளை விடுத்திருந்தார் எனத் தெரிவித்துள்ளார். வன்முறைகள் இடம்பெற்ற பகுதிகளுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தேசத்தை நேசிக்கும் எவரும் இன்னுமொரு இன சமூகத்தை தாக்கவோ ஒடுக்கவோ மாட்டார்கள் என பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார். அளுத்கம பேருவளை தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடாத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

# பாடசாலைகளின் கல்வி மேம்பாட்டிற்கு முன்னின்று உழைப்பவர் சந்திரகுமார்

## கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர் புகழாரம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு அதிக வளங்களை தேடிக கொடுத்த பெரும் சக்தியாக நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் இருக்கின்றார். அது மட்டுமன்றி மாவட்டத்தின் ஒவ்வொரு பாடசாலைக்கும் ஏதோ ஒரு வகையில் நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டு அந்தப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கு பங்காற்றியிருக்கின்றார் என்பது மறுக்க முடியாத உண்மை. என கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர் மு.இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு மகிந்தோதய தொழிநுட்ப பீடத்திற்கான 250 இலட்சம் ரூபா செலவில் மூன்று மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீள்குடியேற்றத்தின் ஆரம்பம் முதல் இன்று வரை எங்கள் பாடசாலையின் வளர்ச்சியாக தொடர்ந்தும் பல் வழிகளில் உதவிகளை மேற்கொண்டு வருகின்றார். மாணவர்களுக்கான விடுதிகள் அமைத்தல் உள்ளிட்ட மற்றும் பெருமளவு பௌதீக வளங்களை கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு பெற்றுக் கொண்டமைக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் நடவடிக்கையே காரணமாக அமைந்தது என தெரிவித்தார்.

ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் இங்கு கருத்துத் தெரிவித்த போது, ஆரம்பத்தில் ஒரு இடைத்தங்கல் முகாமாகக் காணபட்ட கிளிநொச்சி மத்திய கல்லூரி இன்று பெருமளவு வளங்களுடன் ஒரு நிறைவான பாடசாலையாக காணப்படுகிறது. இருப்பினும் இன்னும் இருக்கின்ற ஒரு சில வளப்பற்றாக் குறைகளையும் விரைவில் நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகள் எம்மால் நிச்சயம் மேற்கொள்ளப்படும். இப்பாடசாலைக்குரிய தளபாட வசதிகளை நாம் விரைவில் பெற்றுத்தருவோம் எனவும் உறுதியளித்தார்.

பாடசாலை முதல்வர் இரவீந்திரன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் ஓய்வு பெற்ற முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழுத் தலைவருமான பத்மநாதன், கரைச்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் அமிர்தலிங்கம், கல்லூரியின் பிரதி அதிபர் ஆலாலசுந்தரம், கிளிநொச்சி மகா வித்தியாலய அதிபர் பங்கையற்ச்செல்வன், கனகபுரம் மகாவித்தியாலய அதிபர் குகானந்தராஜா, கிளிமத்தி ஆரம்ப வித்தியாலய அதிபர் திருமதி காஞ்சனா மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## முன்பள்ளிச்சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்




அனலை சமூகநல மன்றத்தினால் அனலைதீவைச் சேர்ந்த 4 முன்பள்ளிகளுக்கு 64 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அனலைதீவு மனோன்மணி அம்மன் ஆலய திறந்தவெளி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

அனலைதீவைச் சேர்ந்த அருணோதயா முன்பள்ளி, ஐயனார் முன்பள்ளி, ஸ்ரீபாலமுருகன் முன்பள்ளி, நாவலர் முன்பள்ளி ஆகிய முன்பள்ளிகளுக்கு தலா 16 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிராம அலுவலர் எஸ்.வடிவழகையன், பிரதேச சபை முன்பள்ளிகளுக்கான ஒருங்கிணைப்பாளர் திருமதி பெர்ணாண்டோ பாரதி, அனலை சமூகநல மன்ற நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (63)

## வணிகப்போட்டி

(வலிகாமம்)

வலிகாம வலயமட்ட வணிகப போட்டி எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யா/இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எனவே மாணவர்களை உரிய நேரத்திற்கு அனுப்பி வைக்குமாறும் மேலும் வர்த்தகம், கணக்கீடு மற்றும் பொருளியல் கற்பிக்கும் ஆசிரியர்களையும் இந்நிகழ்விற்கு நடுவர்களாகப் பணியாற்ற அனுப்பி வைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (66)

## தரமுயர்த்த ஆலோசனை

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கப் பகுதியில் உள்ள தேனீர்சாலையை தரமுயர்த்தி நடாத்துவதற்கு யாழ்மாநகரசபையில் ஆலோசனை முன்வைக்கப் பட்டுள்ளது.

அண்மையில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கப் பகுதியின் வடக்குப்பக்கமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள தேனீர் சாலையை தரமுயர்த்தி புனரமைத்து நடாத்தி வருமானமீட்டுவதற்கு யாழ்.மாநகரசபை தீர்மானித்து மாநகரவருமானப்பகுதிக்கு வழங்கவுள்ளதாகவும் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

நேற்றுமுன்தினம் யாழ்.மாநகரசபையின் ஆறாவது மாதாந்தப் பொதுக்கூட்டத்திலேயே இவ்விடயம் குறித்து ஆலோசிக்கப் பட்டுள்ளது. (பா)

## சதுர்த்தி உற்சவமும் சங்காபிஷேகமும்

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய சதுர்த்தி திருவிழாவும் சங்காபிஷேகமும் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை இடம்பெறவுள்ளது.

ஆலய பிரதமகுரு தலைமையில் மாலை 6 மணிக்கு சங்காபிஷேகமும் சதுர்த்தி விசேட பூசையும், வசந்தமண்டப பூசையும் இடம்பெற்று விநாயகர் உள்வீதி உலாவருதலும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மணவாளக்கோலத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (இ)

## சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்

(சுன்னாகம்)



இணுவிலை பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தேவராஜா - திருமுருகராஜன் அகில இலங்கை சமாதான நீதவானாக யாழ்.மாவட்ட நீதிபதி ஆனந்தராஜா முன்னிலையில் கடந்த 17ஆம் திகதி சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் தற்போது யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அரசறிவியல் ஆசிரியராக கடமையாற்றுவதுடன் யா/இராமநாதன் கல்லூரியில் நீண்டகாலமாக ஆசிரியராக கடமையாற்றியவராவார்.

அத்துடன் இணுவில் பொது நூலகத்தின் முன்னைநாள் தலைவரும் தற்போதைய நிர்வாக சபை உறுப்பினர் என்பதுடன் பல்வேறு சமூகசேவைகளையும் ஆற்றிவருபவர் என்பது குறிபபிடத்தக்கது. (66)

## தொழிற்பயிற்சி அதிகாரசபையால் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது யாழ்ப்பாணமாவட்டத்தில் இரண்டாம் அரையாண்டிற்கான கற்கைநெறிகளை எதிர்வரும் யூலை மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

இக்கற்கைநெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், சுன்னாகம், நல்லூர், சண்டிலிப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளன.

இக்கற்கைநெறிகளாவன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், கணனிவன்பொருள் திருத்துநர், கட்டடநிர்மாண உதவியாளர், மோட்டார்சைக்கிள் திருத்துநர், வீட்டுமின்னிணைப்பாளர், அலுமினியம் பொருத்துநர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், அழகுக்கலை வல்லுநர், மரவேலை தொழில்நுட்பவியலாளர் (தளபாடம், கணனி படவரைஞர், வானொலி தொலைகாட்சி திருத்துநர், வெளியிணைப்பு இயந்திரம் திருத்துநர் இவ்வனைத்துக்கற்கை நெறிக[illegible] தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றித[illegible]ழுக்கான பயிற்சிகளாகும்

இக்கற்கைநெறிகளை கற்கவிரும்புவர்கள் தங்கள் அடையாள அட்டை மற்றும் கல்விச்சான்றிதழ்களுடன் மாவட்டஅலுவலகம், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, 1ஆவது மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12,கே.கே.எஸ்வீதி, யாழ்ப்பாணம் (தொ.பே.021 222 7949) அல்லது ஏதாவது தொழிற்பயிற்சி நிலையங்களில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபையின் யாழ்.பிராந்திய உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார்.

## முரசின் இன்றைய பலன்

(28.06.2014 சனிக்கிழமை)



ஜய வருஷம் ஆனிமாதம் 14 ஆம் திகதி.
பிரதமை / சித்தம்.
திருவாதிரை நட்சத்திரம் காலை 6.41 வரை. பின் புனர்பூஷம்.
இராகு காலம் 08.55 - 10.25 வரை. சுபநேரம் 02.55 - 04.25 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | நீண்ட நாட்களாக பிரயாசை எடுத்துவந்த நிகழ்வு வெற்றியைத்தரல், பரீட்சை முடிவு சாதகமாக அமையப் பெற்றதனால் பதவி உயர்வு கிட்டல். |
| ரிஷபம் | பெற்றோரின் நோய் காரணமாக பராமரிக்க ஆளில்லாமையினால் கிடைத்த பதவியைக் கைவிட்டுவிடல், நம்பிக்கையால் பணம் கிடைத்தல். |
| மிதுனம் | மேலாதிகாரியுடன் முரண்படால் ஒத்துப்போனதால் பதவி உயர்வுக்குச் சிபார்சு செய்தல், பழைய ஒப்பந்த வேலைகள் நஷ்டத்தை ஏற்படுத்தியதால் புதியவற்றைக் கைவிட்டு விடல். |
| கடகம் | விவாகம் குழப்பமடைதல். பொருட் கொள்வனவிற்காக எடுத்துச் சென்ற பணத்தை இழந்து தவிர்த்தல். |
| சிம்மம் | அநாவசியத்தலையீட்டினால் மனங்கவலையடைதல், சுற்றிவளைத்துப் பேசி தன் காரியத்தைச் சாதிக்க முயற்சித்தல். |
| கன்னி | முறைதவறிய காதல் விவகாரத்தினால் பெற்றோருடன் முரண்படும் நிலை ஏற்படல், விழாவில் கலந்து சிறப்பிக்க தம்பதியர் சகிதம் பங்குகொள்ளல். |
| துலாம் | நீண்டகாலம் நிலவிவந்த பகைமை மறைந்து உறவுக்கு கைகொடுக்க முன்வரல், கவனக்குறைவினால் எடுத்துச் சென்ற ஆவணங்கள் கைதவறிவிடல் |
| விருச்சிகம் | பிரயாணத்தால் காரியசித்தி ஏற்படல், கோள் குண்டனியால் நிறைவேறவிருந்த செயற்பாடு இழுபட்டுச் செல்லல். |
| தனுசு | உணவுக்கட்டுப்பாட்டினைக் கடைப்பிடித்ததனால் நோய் நீங்கும் அறிகுறிதென்படல், பணியில் தேக்க நிலை அற்றுபோதல். |
| மகரம் | பிரத்தியோகச் செயற்பாட்டை குடும்பநலன் கருதிகை விட்டுவிடல், அநாமதேய தொலை பேசி மிரட்டலினால் அச்ச உணர்வு. |
| கும்பம் | விவாக முயற்சி இழுபட்டுச்செல்லல், நம்பி நடந்த நண்பர் மோசடி ஏற்படுத்தல். |
| மீனம் | வைத்தியரின் ஆலோசனையைச் செவிமடுக்காது விட்டதனால் நோய் முற்றிவிடல், வரவிருந்த ஆபத்து விலகிவிடும். |


வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு விழா

# யாழ். வலயம் சகல பிரிவுகளிலும் முதலிடம்


## ● 51 சாதனைகள் முறியடிப்பு
## ● முல்லைத்தீவு வலயம் முன்னேற்றம்



யாழ்ப்பாணக் கல்வி வலயம்



வலிகாமம் கல்வி வலயம்



வடமராட்சி கல்வி வலயம்

### தடகளம்

| கல்வி வலயம் | புள்ளிகள் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 460 |
| வலிகாமம் | 382 |
| மன்னார் | 286 |
| முல்லைத்தீவு | 202 |
| வடமராட்சி | 175 |
| வவுனியா தெற்கு | 142 |
| கிளிநொச்சி | 107 |
| வவுனியா வடக்கு | 106 |
| தென்மராட்சி | 093 |
| துணுக்காய் | 059 |
| மடு | 057 |
| தீவகம் | 022 |

### அஞ்சலோட்டம்

| கல்வி வலயம் | புள்ளிகள் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 108 |
| மன்னார் | 083 |
| முல்லைத்தீவு | 067 |
| வலிகாமம் | 053 |
| வடமராட்சி | 034 |
| வவுனியா வடக்கு | 017 |
| மடு | 010 |
| வவுனியா தெற்கு | 007 |
| கிளிநொச்சி | 000 |
| தென்மராட்சி | 000 |
| துணுக்காய் | 000 |
| தீவகம் | 000 |

### பெருவிளையாட்டு

| கல்வி வலயம் | புள்ளிகள் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 715 |
| வலிகாமம் | 418 |
| வடமராட்சி | 375 |
| வவுனியா தெற்கு | 120 |
| கிளிநொச்சி | 112 |
| முல்லைத்தீவு | 071 |
| வவுனியா வடக்கு | 070 |
| தென்மராட்சி | 066 |
| தீவகம் | 051 |
| மன்னார் | 035 |
| மடு | 005 |
| துணுக்காய் | 000 |

### ஒட்டுமொத்தப் புள்ளிகள்

| கல்வி வலயம் | புள்ளிகள் |
|---|---|
| யாழ். கல்வி வலயம் | 1175 |
| வலிகாமம் கல்வி வலயம் | 0800 |
| வடமராட்சி கல்வி வலயம் | 0550 |
| மன்னார் கல்வி வலயம் | 0321 |
| முல்லைத்தீவு கல்வி வலயம் | 0273 |
| வவுனியா தெற்கு கல்வி வலயம் | 0262 |
| கிளிநொச்சி கல்வி வலயம் | 0219 |
| வவுனியா வடக்கு கல்வி வலயம் | 0176 |
| தென்மராட்சி கல்வி வலயம் | 0159 |
| தீவக கல்வி வலயம் | 0073 |
| மடு கல்வி வலயம் | 0062 |
| துணுக்காய் கல்வி வலயம் | 0059 |

(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் யாழ். கல்வி வலயம் சகல பிரிவுகளிலும் முதலிடத்தைப் பிடித்து அசத்தியுள்ளது. அத்துடன் 51 சாதனைகள் முறியடிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் விளையாட்டுப் பிரிவு மாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட விளையாட்டு விழாவின் தடகளப் போட்டிகள் கடந்த திங்கட்கிழமை முதல் நேற்று வரை யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த வீர,வீராங்கனைகள் பங்குகொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தினர்.

நேற்றைய இறுதி நாள் நிகழ்வில் அஞ்சலோட்டம் மற்றும் 100, 200 மீற்றர் ஓட்டப் போட்டிகள் நடைபெற்றது. தடகளம், அஞ்சலோட்டம், பெருவிளையாட்டு அனைத்துப் பிரிவுகளிலும் யாழ். கல்வி வலயம் முதலிடத்தைப் பிடித்து அசத்தியுள்ளது. அதேவேளை, முல்லைத்தீவு கல்வி வலய வீர, வீராங்கனைகள் சிறப்பாக செயற்பட்டதுடன் ஒட்டுமொத்த புள்ளிகள் அடிப்படையில் ஐந்தாமிடத்தைப் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் 15,17, 19, 21 ஆகிய வயதுப் பிரிவுகளில் சிறந்த வீர,வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன.

ஆண்கள் பிரிவில் 15 வயதுப் பிரிவில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி வீரர் எம். கஜவரன், 17 வயதுப் பிரிவில் யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த பி. நிருஜன், 19 வயதுப் பிரிவில் யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஜெரி அகாஸ், 21 வயதுப் பிரிவில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ். விதுஷன் ஆகியோருக்கும்,

பெண்கள் பிரிவின் 15 வயதுப் பிரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஏ. அபினஜா, 17 வயதுப் பிரிவில் விசுவமடு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த பி. தனுஜா, 19 வயதுப் பிரிவில் இளவாலை கன்னியர் மட மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஏ. ஆன்ரி, 21 வயதுப் பிரிவில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த கே. சகிரா ஆகியோருக்கும் விருதுகள் வழங்கப்பட்டது.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக ஒலிம்பியன் எதிர் வீரசிங்கம், மாகாணக் கல்வி அமைச்சர் குருகுலராஜா, மாகாண சபை உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், ஆர்னொல்ட் வடக்கு மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன், மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்ட, வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், கல்விச் சமூகத்தைச் சேர்ந்த அதிகாரிகள், விளையாட்டு வீர,வீராங்கனைகள், விளையாட்டு நலன் விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(எஸ்.பி.12)

# உலகக் கிண்ண கால்பந்தாட்டத் திருவிழா


## ரஷ்யா, அல்ஜீரியா ஆட்டம் சமநிலை



(குரிடிபா)

அல்ஜீரியா ரஷ்ய அணிகள் மோதிய ஆட்டம் சமநிலையில் நிறை பெற்றுள்ளது. இப்போட்டி இலங்கை நேரப்படி நேற்று நள்ளிரவு 12.30 மணிக்கு நடைபெற்றுது. ஆட்டம் ஆரம்பமாகி ஆறாவது நிமிடத்திலேயே ரஷ்யாவின் கோகோரின் தனது தலையால் முட்டி அற்புதமான கோலைப் போட்டார். 24ஆவது நிமிடத்தில் ரஷ்யாவின் கொம்பாரோவ் அடித்த பந்தை ஹொலிச்சி தடுத்து ஆடினார். 27ஆவது நிமிடத்தில் அல்ஜீரியாவின் மெஸ்பா அடித்த பந்தை ரஷ்யாவின் அகின்பீவ் தடுத்தாடினார். ஆட்டத்தின் 39ஆவது நிமிடத்தில் அல்ஜீரியாவின் மெஸ்பாவிற்கு மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டது. 43ஆவது நிமிடத்தில் அல்ஜீரியாவின் ஸ்லிமாணி அடித்த பந்தை அகின்பீவ் அருமையாக தடுத்தார். 45ஆவது நிமிடம் முடியும் வரை இரு அணிகளும் மேலும் கோல் எதுவும் போடாத சூழலில் முதல் பாதி ஆட்டம் முடிந்தது.

பின்னர் இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகியது. 47ஆவது நிமிடத்தில் ரஷ்யாவின் சமேடோவ் அடித்த பந்தை ரெய்ஸ் தடுத்தாடினார். 57ஆவது நிமிடத்தில் ரஷ்யாவின் கொம்பாரோவுக்கு மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டது. 59ஆவது நிமிடத்தில் ரஷ்யாவின் கோஸ்லோவுக்கு மஞ்சள் அட்டை வழங்கப்பட்டது. 60ஆவது நிமிடத்தில் அல்ஜீரிய அணியின் ஸ்லிமாணி அருமையான கோல் அடித்து கோல் கணக்கை சமன் செய்தார். பின்னர் ஆட்டத்தின் இறுதி நிமிடங்கள் வரை இரு அணிகளும் கோல் அடிக்காத நிலையில் 1–1 என்ற கோல் கணக்கில் ஆட்டம் சமநிலையானது. ஆட்டநாயகனாக அல்ஜீரியாவின் ஸ்லிமாணி தெரிவு செய்யப்பட்டார்.



## வென்றது பெல்ஜியம்

கொரியாவுக்கு எதிரான போட்டியில் பெல்ஜியம் அணி இறுதி நேரத்தில் வெற்றிபெற்றது. 20ஆவது உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் பிரேசில் நாட்டில் நடைபெற்ற வருகின்றது. இலங்கை நேரப்படி நேற்று நள்ளிரவு 12.30 மணிக்கு நடைபெற்று போட்டியில் கொரியா, பெல்ஜியம் அணிகள் மோதின. ஆட்டம் ஆரம்பமாகி முதல் 24 நிமிடங்களில் இரு அணி வீரர்களும் தொடர்ந்து பவுல் ஆனார்கள். 25ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் மிரால்லாஸ் அடித்த பந்தை யுன் இலாவகமாக தடுத்தார். 30ஆவது நிமிடத்தில் கொரியாவின் கி அடித்த பந்தை கொர்டாய்ஸ் இலாவகமாக தடுத்தார். 30ஆவது நிமிடத்தில் கொரியாவின் ஹொங்கிற்கு மஞ்சள் அட்டை வழங்கப்பட்டது. 36ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் மெர்ட்டனஸ் அடித்த பந்தை கொரியாவின் கிம் கோல் விழாமல் தடுத்தார்.

45ஆவது நிமிடத்தில் கொரியாவின் கிம் ஷின்வுக்கின் காலில் எட்டி உதைத்ததற்காக சிவப்பு அட்டை வழங்கப்பட்டது. முதல் பாதி முடியும் போது இரு அணிகளும் ஒரு கோல் கூட போடவில்லை. இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகிய பின் 50ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் டெம்பெலெவிற்கு மஞ்சள் அட்டை வழங்கப்பட்டது. 54ஆவது நிமிடத்தில் கொரியாவின் லீ அடித்த பந்தை புடென் இலாவகமாக தடுத்தார்.

78ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் வெட்ரோங்கென் அருமையான கோல் அடித்தார். பின்னர் இறுதிவரை இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்காததால் 0 –1 என்ற கோல் கணக்கில் பெல்ஜியம் அணி வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக பெல்ஜியத்தின் தடுப்பாட்டக்காரரான வெட்ரோங்கென் தெரிவு செய்யப்பட்டார்.

## இன்றைய ஆட்டம்

**பிரேசில் எதிர் சிலி**
**இலங்கை நேரம்**
**இரவு 9.30**

**கொலம்பியா எதிர் உருகுவே**
**இலங்கை நேரம்**
**அதிகாலை 1.30**

## இது தமிழ் பெண் இல்லையப்பா!



ஈரான், ஆர்ஜன்ரீன அணிகள் மோதிய பேர்ட்டியின் போது மெஸ்சியின் மனைவி அன்டோனெல்லா தன்னுடைய மகனை இடுப்பில் சுமந்தபடி போட்டியை காண வந்தார். இந்த உலகக் கிண்ணத்தில் வீரர்களின் மனைவிகளும் வெற்றிக் கொண்டாட்டங்களில் பங்கேற்கின்றனர். அந்த வகையில் ஈரான் அணியை வீழ்த்தி ஆர்ஜன்ரீனா வெற்றி பெறுவதைப் பார்க்க மெஸ்சியின் மனைவியும் அவரது 19 மாத மகனும் ஆர்ஜென்ரீன அணியின் டி-சேர்ட் அணிந்தபடி வந்திருந்தனர். அந்தப் போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் அணியை வெற்றி பெற செய்து அசத்தினார் மெஸ்சி.

## கடி மன்னனுக்கு வந்தது போட்டித் தடை



இத்தாலி வீரர் சியெலினியை தோள்பட்டையில் கடித்த உருகுவே வீரர் சுவாரேஸிற்கு நடப்பு உலகக் கோப்பைப் போட்டிகள் உட்பட 4 மாதங்களுக்கு விளையாட சர்வதேச கால்பந்து சம்மேளனம் தடை விதித்துள்ளது. இந்தத் தடையினால் அடுத்த சுற்றுக்கு முன்னேறிய உருகுவே அணிக்குக் கடும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

காரணம் முதல் போட்டியில் கோஸ்டாரிகாவுக்கு எதிராக சுவாரேஸ் காயம் காரணமாக விளையாடவில்லை, மாறாக அவர் விளையாடிய அடுத்த 2 போட்டிகளில் அவர் கோல்களை அடித்து அணியை அடுத்த சுற்றுக்கு இட்டுச் சென்றார்.

இது குறித்து சர்வதேச கால்பந்து சம்மேளனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்

இது போன்ற நடத்தையை களத்தில் ஒரு போதும் பொறுத்துக் கொள்ள முடியாதது. அதுவும் உலகக் கோப்பை போட்டிகளில், இலட்சக்கணக்கானோர் போட்டிகளைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது இந்த நடத்தை மிகவும் கண்டிக்கத்தக்கது.

இந்தத் தடை குறித்து உருகுவே மேல் முறையீடு செய்தாலும், சனிக்கிழமை நடைபெறும் அடுத்த சுற்றின் முதல் போட்டியில் இவர் விளையாட முடியாது என்பது உறுதி.

ஆனால் இந்தத் தடை உத்தரவை உருகுவே கால்பந்து கூட்டமைப்பு கண்டித்துள்ளது. மேலும் இது இத்தாலி, ஆங்கில ஊடகங்கள் மற்றும் பிரேசிலின் சதி என்று வ்ர்ணித்துள்ளது.

## ஹென்ரீசியனின் இன்றைய ஆட்டம்

வலிகாமம் கால்பந்து லீக்கின் அனுசரணையுடன் ஹென்றீசியன் விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் ஹென்றீசியன் பிறீமியர் லீக் கால்பந்துப் போட்டித் தொடர் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் இன்றைய தினம் அராலி எதிர் சென்லூட்ஸ், வல்வை எதிர் புங்குடுதீவு நசரேத், நெடியகாடு எதிர் சாவற்கட்டு மகாத்மா, சென்.சேவியர் எதிர் ஆதிசக்தி ஆகிய அணிகள் மோதவுள்ளன. (48)

## நியூசிலாந்து முதல் இனிங்ஸ் 293

மேற்கிந்தியத்தீவுகள், நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதி ஆட்டம் மேற்கிந்தியத்தீவுகளின் பிரிட்ஜ்ரவுனில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 293 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிசாம் 78, ரெய்லர் 45, வில்லியம்ஸன் 43 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பென் ஐந்து, ரோச் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை விக்கெட் இழப்பின்றி 32 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

## களத்திற்கு வெளியில்...

எதிரணியின் கோல் காப்பாளர் எங்கள் வாய்ப்புகளை தடுத்து விட்டார். இருப்பினும் நாங்கள் அடுத்த சுற்றுக்கு முன்னேறி விட்டதால், எங்கள் சந்தோஷத்தில் குறைவில்லை.

**டிடியர் டெஸ்சாம்ப்ஸ் (பிரான்ஸ் பயிற்சியாளர்)**

பிர்ான்ஸ் அணிக்கெதிரான போட்டியில் வேலன்சியாவுக்கு சிவப்பு அட்டை வழங்கப்பட்டமை மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. முக்கியமான வீரர் வெளியேறிய போதும் மற்ற வீரர்கள் சிறப்பாக ஆடி ஆட்டத்தை சமநிலை செய்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இருப்பினும் நடுவரின் செயற்பாடுகள் குறித்து ஆய்வு செய்ய ஒரு குழு அமைப்பது குறித்து யோசிக்க வேண்டும்.

**ஈகுவடோர் பயிற்றுநர்**

மன்னித்து விடுங்கள், என்னால் வெற்றிபெற முடியவில்லை. உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்பது என் கனவு. இது நனவாகாதது வருத்தம் அளிக்கிறது. இந்த நிலையில் ஹொண்டூராஸ் அணியின் பயிற்றுநராகத் தொடர்ந்தும் செயற்பட விரும்பவில்லை. இத்தொடருடன் எனது பதவியிலிருந்து விலக முடிவு செய்துள்ளளேன்.

**பெர்ணான்டோ சௌரஸ் (ஹொண்டூராஸ் பயிற்றுநர்)**

ஆசிய சம்பியன் என்ற அந்தஸ்துடன் களமிறங்கினோம். ஆனால், உலகக் கிண்ணத்தொடரில் எமக்கு ஏமாற்றமே மிஞ்சியது. இந்த முடிவு ஏமாற்றமும் வருத்தமும் அளிக்கிறது. இரண்டாவது சுற்றுக்கு முன்னேற போராடியும் அந்த முயற்சி பலனளிக்கவில்லை. தோல்வியை நானே பொறுப்பேற்கிறேன்.

**ஆல்பெர்டோ ஜசெரோனி (ஜப்பான் பயிற்றுநர்)**

சுவாரேஸ் சம்பவத்தைப் பார்த்தோம், அனைவரும் பார்த்தனர், ஆனால் இது குறித்து நாங்கள் எதுவும் கூற விரும்பவில்லை. எங்களுக்கு சிலி போட்டி மிக் முக்கியம், ஆகவே இது போன்ற மேம்போக்கான விவகாரங்களில் கவனத்தைச் சிதறவிடப்போவதில்லை.

**மிட்பீல்டர் வில்லியன் (பிரேசில் வீரர்)**

## கானா வீரர்கள் இருவர் இடை நீக்கம்

பிரேசிலில் நடந்து வரும் உலக கோப்பை கால்பந்துப் போட்டியில் பங்கேற்றுள்ள கானா அணியின் வீரர்களில் சுல்லே முன்டாரி, கெவின் பிரின்ஸ் பாடெங் ஆகியோர் திடீரென இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். ஒழுங்கீனமாக நடந்து கொண்டதாக இருவர் மீதும் காலவரையற்ற இந்த நடவடிக்கையை கானா கால்பந்துச் சங்கம் மேற்கொண்டுள்ளது. இந்த நடவடிக்கை உடனடியாக அமுலுக்கு வந்து இருப்பதால் போர்த்துக்கலுக்கு எதிரான கடைசி லீக் ஆட்டம் தொடங்குவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னதாக இருவரும் சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர். கானா கால்பந்து சங்க செயற்குழு உறுப்பினரை தாக்கியதாக முன்[illegible]யும், அணியின் பயிற்சியாளர் அப்பியாவை அவமரியாதையாக பேசியதாக கெவின் பிரின்ஸ் பாடெங்கும் நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்று கானா கால்பந்துச் சங்கம் தெரிவித்துள்ளது. முன்டாரி தன் மீதான நடவடிக்கை குறித்து கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. கெவின் பிரிஸ் பாடெங் அளித்துள்ள விளக்கத்தில், பயிற்சியின் போது முன்டாரியுடன் தான் சிரித்து பேசியதால் கோபம்

அடைந்த பயிற்சியாளர் தன்னை அசிங்கமாக திட்டினார். நான் பயிற்சியாளரை அவமதிக்கவில்லை. நான் நாட்டுக்குத் திரும்பி கொண்டிருக்கிறேன். எனது அணி வீரர்களுக்கு வாழ்த்துக்கள் என்று தெரிவித்துள்ளார். இதற்கிடையில் கானா அணி வீரர்கள் சம்பளப் பிரச்சினை காரணமாக திடீரென பயிற்சியில் ஈடுபட மறுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து கானா அரசாங்கம் உடனடியாக பணம் திரட்டி தனி விமானம் மூலம் பிரேசில் கொண்டு சென்று வீரர்களுக்கு பகிர்ந்து அளித்தனர். இதனால் வீரர்களின் போராட்டம் தற்காலிகமாக முடிவுக்கு வந்தது.



# இலங்கையின் மாகாணசபைகளை மக்களுக்குப் பயனுடையவைகளாக ஆக்குவதற்கு ஏதாவது வழியுண்டா!

4

- வரதராஜப்பெருமாள்



> **13 பிளஸ் என்று அவ்வப்போது பேசப்பட்டாலும், உரத்த குரலில் இந்தியாவும் அமெரிக்காவும் ஐநா மனித உரிமைகள் அமைப்பின் தீர்மானமும் அடிக்கடி பேசுவது 13ஆவது திருத்தத்தை இலங்கை அரசாங்கம் முழுயாக நிறைவேற்ற வேண்டும் என்பதே.**

13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றும்படி கோருதல் வேறு:

அதனை உடனடியாக முறையாக நிறைவேற்றும்படி கோருவது வேறு.

13 பிளஸ் என்று அவ்வப்போது பேசப்பட்டாலும், உரத்த குரலில் இந்தியாவும் அமெரிக்காவும் ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் தீர்மானமும் அடிக்கடி பேசுவது 13ஆவது திருத்தத்தை இலங்கை அரசாங்கம் முழுயாக நிறைவேற்ற வேண்டும் என்பதே.

13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்று கூறுபவர்கள் எவரும் 13ஆவது திருத்தம் முறையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று ஏன் கோருவதில்லை என்பதுவும் என்னுள் உள்ள பிரதானமான கேள்வியாகும்.

13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றும்படி கோருபவர்களின் கருத்தில் பெரும்பாலும் உள்ள உள்ளடக்கம் மற்றும் புரிதல் என்னவெனில்:- மாகாண சபைக்கு பொலிஸ் மற்றும் நில அதிகாரங்களும் போதிய அளவு நிதி வளங்கலும் வழங்கப்பட வேண்டும் என்பதே.

அப்படியானால், அரசியல் யாப்பு ரீதியாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள ஏனைய அனைத்து சட்டவாக்க மற்றும் நிறைவேற்றதிகாரங்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா? என்ற கேள்விக்கு தெளிவான பதிலை யாரும் தரவில்லை என்பதோடு அவற்றின் மீது இன்று வரை யாரும் அக்கறை செலுத்தவில்லை என்பதுவும் உண்மையாகும்.

என்னுடைய புரிதலின்படி மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள மாகாண அமைச்சரவை இன்னமும் ஒரு அரசாங்கமாக செயற்படவில்லை என்பதே. அதனை ஓர் வெறும் ஆலோசனைச் சபையாகவே கொழும்பு மைய அரசாங்கம் நடாத்துகிறது.

அதேவேளை அந்த அமைச்சரவையும் தாம்தான் அரசாங்கம் என்பதை நிலைநாட்டுவதற்கான எந்த நடவடிக்கையிலும் ஈடுபடாமல் தம்மை ஓர் ஒப்பாரி வைக்கும் குழுவாக மட்டுமே ஆக்கி வைத்திருக்கின்றது.

இப்போதைய நிலையில் பொலிஸ் அதிகாரம் கொடுத்தாலும் அது ஆளுநரின் பொலிசாக மட்டுமே அமையும்.

நிதிவளம் ஆளுநரின் அதிகாரத்துக்குக் கொடுத்தாலென்ன அல்லது மத்திய அரசாங்கமே நேரடியாகச் செலவழித்தாலென்ன அதில் எந்த வேறுபாடும் ஏற்பட மாட்டாது.

எனவே மாகாண சபைகள் 13ஆவது திருத்தத்தின்படி முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டியது அவசியமே. அதற்கு முதலில் அவை முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டால்தான் இப்போதுள்ள குறைந்த அதிகார அளவின் மத்தியிலும் அவை பயன்களை மக்களுக்கு வழங்கக் கூடியதாக அமையும்.

மாகாண சபைகளின் அதிகாரங்கள் தொடர்பாக 13ஆவது திருத்த ஏற்பாடுகளில் உள்ளார்ந்த ரீதியாக உள்ள குறைபாடுகளை நீக்குவதற்கு வடக்கு மாகாண அரசாங்கம்:-

**1.** ஜனாதிபதியுடன் பேச வேண்டும். இனவாதிகளல்லாத சட்ட நிபுணர்களும் நிர்வாக அனுபவசாலிகளும் கொண்டதொரு அதிகாரப் பகிர்வு ஆணைக்குழு வொன்றை அமைக்கும்படி கோர வேண்டும்:

**2.** மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண அமைச்சரவை இருக்கும் போது ஆளுநர் மாகாண அரசின் ஒரு சம்பிரதாயத் தலைவர் மட்டுமே என்பதே 13ஆவது திருத்த அரசியல் யாப்பு ஏற்பாடுகளின் அர்த்தம் என்பதையும், அதற்குத் தக்கபடியே 1987ஆம் ஆண்டின் மாகாண சபைகள் சட்டத்தின் ஒவ்வொரு பிரிவும் விளக்கம் கொள்ளப்பட வேண்டும் என்பதையும் சட்டபூர்வமாக உச்ச நீதிமன்றத்தின் ஊடாக நிலைநாட்டுதல் வேண்டும்.

அதேவேளை மத்திய அரசாங்கம் சட்டத்துக்குப் பிழையாகவும் சட்டத்துக்குப் புறம்பாகவும் நடந்து கொள்ளும் விடயம் ஒவ்வொன்றின் மீதும் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தல் வேண்டும். நீதித்துறை சுதந்திரமானது அல்ல நீதியரசர் ஜனாதிபதிக்கு வேண்டியவர் என்ற விவாதங்கள் முக்கியமானவை அல்ல. அதை அவர் நிலைநாட்டினால் உலகம் உண்மையை அறியட்டும்.

**3.** இலங்கையின் முன்னாள் உயர்நீதிபதிகள் பிரபல வழக்கறிஞர்களைக் கொண்ட ஒரு நிழல் நீதிமன்றத்தை ஆக்கி அதன் மூலம் 13ஆவது திருத்தம் தொடர்பான சரியாண சட்ட விளக்கங்களை வெளிக் கொண்டு வருதல்.

**4.** அதிகாரப் பகிர்வு தொடர்பாக 13ஆவது திருத்தத்தில் உள்ள குறைபாடுகளையும் மத்திய அரசாங்கம் இழைக்கும் தவறுகளையும் தெளிவாக விளக்கும் அறிக்கைகளை வெளிக் கொணர்ந்து அதன் அடிப்படையில் பல்வேறு மட்டத்திலும் விளக்கச் சந்திப்புகளையும் அரசியற் பிரச்சாரங்களையும் மேற்கொள்ளுதல்.

**5.** 13ஆவது திருத்தத்தில் உள்ள குறைபாடுகளை நீக்குவதற்கு ஆதரவான அனைத்து இன அரசியல் சமூக சக்திகளையும் ஒரு அதிகாரப் பகிர்வு இயக்கமாக - மன்றமாக அணிதிரட்டுதல்.

**6.** 13ஆவது திருத்தத்தில் உள்ள குறைபாடுகளை நீக்கும் கோரிக்கைகளைக் கொண்ட தீர்மானங்களை தெளிவாக வரையறுத்து அவற்றை முன்னுரிமை வரிசையின் அடிப்படையில் ஒன்றின் பின் ஒன்றாக மாகாண சபையின் தீமானங்களாக நிறைவேற்றி அதனை அனைத்து மட்டத்திலும் கவனத்துக்குக் கொண்டு வருதல்.

**7.** மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள அமைச்சரவையே மாகாண அரசாங்கம் ஆளுநரல்ல என்பதையும் மத்திய அரசாங்கம் அரசியல் யாப்பின்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் நிலைநாட்டுவதற்கான சட்ட நியாயங்களை மையமாக வைத்து வன்முறை எதுவும் அற்ற தொடர்ச்சியான மக்கள் போராட்டங்களை நடாத்துதல்.

**8.** மாகாண சபை மக்களுக்கு முடிந்த அளவு உடனடியாக சேவையாற்றுவதற்கு என்னென்ன சட்டங்களெல்லாம் உடனடியாக ஆக்க வேண்டுமோ அவற்றையெல்லாம் காலதாமதமின்றி ஆக்குதல் வேண்டும்.

**9.** மாகாண அரசாங்கத்தால் மேற்கொள்ளக் கூடிய அபிவிருத்தித் திட்டங்கள், விதவைகள் மறுவாழ்வு, உடல் ஊனமுற்றோருக்கு புனர்வாழ்வு, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, மீள்குடியேறியோருக்கு மேலதிக உதவிகளை தொடர்ந்து வழங்குதல் போன்ற விடயங்களுக்கு உரிய நிதியங்களை சட்டபூர்வமாக உருவாக்கி அவற்றிற்கான திட்டங்களை தெளிவாக வெளியிட்டு அவற்றிற்கான நிதிவளங்களை சாத்தியமான எல்லா வழிகளிலும் மூலங்களிடமிருந்தும் முறைப்படி பெற்று திரட்டி மக்களுக்குப் பயனுடைய வகையில் காரியங்களை ஆற்ற வேண்டும்..

என மாகாண ஆட்சித் தலைமை பல்முனையில் காரியசித்தியும் நடைமுறையாக்கும் புத்தியும் கொண்டதாக செயற்பட வேண்டும் - செயற்பட முடியும் - செயற்படுவதற்கான எல்லா வளங்களும் வாய்ப்புகளும் துணைகளும் நியாயாதிக்கங்களும் வடக்கு மாகாண ஆட்சித் தலைமைக்கு உண்டு. வடக்கு மாகாண சபையே ஏனைய மாகாணங்களுக்கு வழிகாட்டியாக அமையும்.

இங்கு தேவைப்படுவது -

செய்ய வேண்டும் என்ற விருப்பம் - சமூகநலன் மீதான உண்மையான ஈடுபாடு - தீர்மானகரமான நிலைப்பாடுகள் - உறுதியான அர்ப்பணிப்பு - அயராத உழைப்பு.

வாக்கில் உண்மையும், நெஞ்சில் உரமும், நேர்மைத் திறனும் கொண்ட மக்கள் தலைமை உண்டாயின் சத்தியமே வெல்லும் - நீதியே நிலை பெறும்.

"மனமுண்டானால் இடமுண்டு"

"அடிக்கு மேல் அடியடித்தால் அம்மியும் நகரும்"

"எறும்பூரக் கற்குழியும்"

"முயற்சி திருவினையாக்கும்"

இவை வெறும் பழமொழிகள் அல்ல. தமிழர்களின் வரலாற்று அனுபவங்களின் வெளிப்பாடு எனக் கூறி இத் தொடரை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.



## பொசிற்றிவ் திங்கிங்

"பொசிற்றிவ் திங்கிங்"க்கு சொல்லப்படும் உருவகக் கதை.


இரண்டு வாளிகள்... பெரிய அகண்ட கிணற்றினுள் இறங்கி மேலே தண்ணீரை எடுத்துச் செல்லும் முயற்சியில், உள்ளே சென்று கொண்டிருந்தன. அதில் ஒரு வாளி வருத்தமாய் இருந்தது. "ஏன் வருத்தமாக இருக்கிறாய்.." என அதனிடம் இரண்டாவது வாளி கேட்டது.

"நிறைய கொண்டுபோய் கொடுக்கிறோம். அவற்றைக் எடுத்து ஊற்றிக்கொண்டு, நம்மை காலியாக அனுப்புகிறார்களே.."

"தவறு. நாம் காலியாக உள்ளே செல்வதனால்தான் நம்மால் முழுவதும் நிரப்பிக்கொண்டு மேலே வருகிறோம். அதனை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள எடுத்துக் கொள்கிறார்கள்! ஆக நாம் உதவ, அவர்கள் பயனடைகிறார்கள் எனப் பெருமைப்படு" என்றது இரண்டாவது வாளி!

# மோடியுடன் ராஜபக்ச தமிழ்நாட்டை வெல்வாரா?

ஆர்.ஹரிஹரன் கட்டுரையிலிருந்து.




தமிழ் கடற்கரை ஓரங்களில் சிக்கல் தோன்றியுள்ளது, அதன் அதிர்ச்சி அலைகளை பாக்கு நீரிணைக்கு அப்பாலும் உணரக்கூடியதாக உள்ளது. பிரச்சினையின் மையமாக இரட்டைப் பயங்கரவாதத்தின் அடிச்சுவடு உள்ளதை தெளிவாக காணக் கூடியதாக உள்ளது.

சமீபத்தில் தமிழ் நாடு மற்றும் இலங்கையில் நடந்த பயங்கரவாத நடவடிக்கைகளை ஆராயும் போது அவற்றின் இருப்புக்கான நம்பகத்தன்மை வலியுறுத்தப்படுகிறது. ஒன்று இந்தியன் ஜிகாதி வலையமைப்புடன் தொடர்புள்ளதாகவும் மற்றது எல்.ரீ.ரீ.ஈயின் வெளிநாட்டு கிளை தீவில் தடம் பதிப்பதற்காக மேற்கொள்ளும் முயற்சிகளுடன் தொடர்புடையது.

இரண்டும் பொதுவான அம்சங்களைக் கொண்டுள்ளது: ஆட்டிப்படைக்கும் கருத்துகளுக்கான ஒரு காரணம், அனைத்து முரண்பாடுகளுக்கும் எதிராக தாக்குதல்களை முன்னெடுக்கும் நோக்கம், மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வலையமைப்புகளின் இருப்பு, என்பனதான் அந்த பொதுவான அம்சங்கள்.

ஆயினும் அந்த ஒப்பீடு அத்துடன் முடிவடைகிறது. பிராந்திய வாக்கு வங்கி அரசியல் காரணமாக தமிழ் நாட்டில் உள்ள ஜிகாதி வலையமைப்பு நன்றாக காரியமாற்றியுள்ளதாக தெரிகிறது. ஆயினும் எல்.ரீ.ரீ.ஈ தனது புத்துயிர்ப்பு முயற்சிகளை முன் தள்ளுவதற்கு பெரிதும் சிரமப்படுகிறது, அதற்காக இலங்கையின் எதிர் நடவடிக்கைகள் மற்றும் பிரவினைவாதம் தொடர்பான சிறிய செயற்பாடுகளைக் கூட உடனடியாக ஒடுக்கிய அதன் திறமை என்பனவற்றுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் நிலை தற்போது தமிழ் நாட்டில் ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இது திராவிட கட்சிகளின் போட்டி அரசியல், அதே போல இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ, யுத்தத்துக்கு பிந்திய பிரச்சினைகளான தமிழ் மக்களின் அதிகாரம் மற்றும் புனர் வாழ்வு என்பனவற்றை மோசமாக கையாளுதல் ஆகியவற்றின் கலவையாக மாறியுள்ளது.

ராஜபக்ஸ்வின் அபிவிருத்தி மாதிரி தமிழர்களுக்கு சுயாட்சி வழங்கவேண்டிய முக்கியமான பிரச்சினைக்கு போதுமான முயற்சிகளை மேற்கொள்ளாமல் பொது சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதிலேயே அதிக கவனம் செலுத்துவதாக உள்ளது.

இலங்கையில் பயங்கரவாத செயற்பாடுகளை தூண்டுவதற்கு வெளிநாட்டு எல்.ரீ.ரீ.ஈ சக்திகளினால் மூன்றுமுறை முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. முக்கியமாக அந்த மூன்று முயற்சிகளிலும் தமிழ்நாட்டு தொடர்பு இருந்துள்ளது.

முதல் முயற்சி, 2012இல் திருகோணமலை மாவட்டத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயக கட்சி அங்கத்தவர் ஒருவரின் கொலையை விசாரணை செய்தபோது கண்டுபிடிக்கப் பட்டது. அவரது உடலுக்கு அருகில் புலிகளின் சின்னத்துடன் கூடிய "துரோகிகளுக்கு மரணம்" என கையால் எழுதப்பட்ட ஒரு குறிப்பு காணப்பட்டது.

சந்தேக நபர்களிடம் மேற்கொண்ட தீவிர விசாரணைகளின் பின், எல்.ரீ.ரீ.ஈ இற்கு புத்துயிர் அளிக்க முயற்சித்து வரும் வெளிநாட்டு எல்.ரீ.ரீ.ஈயின் விநாயகம் பிரிவினர்தான் இதற்கு காரணம் என்பது வெளிப்பட்டது.

முழுமையாக மேற்கொள்ளப் பட்ட விசாரணைகள் வெளிநாட்டு விநாயகம் பிரிவு எல்.ரீ.ரீ.ஈ யினரின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வந்த ஏனைய புத்துயிர்ப்பு முயற்சிகளையும் வெளிக்காட்டின. பரிசிலுள்ள விநாயகம் பிரிவின் குமரன் என்பவர் தமிழ் நாட்டில் வைத்து 15 முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களை ஆட்சேர்ப்பு செய்து அவர்களை ஐந்து பேர்களைக் கொண்ட மூன்று சிறு குழுக்க ளாக ஒழுங்குபடுத்தியுள்ளார். இந்த குழுக்களில் ஒன்றுதான் கிழக்கு மாகாணத்தில் உள்ள திருகோணமலைக்கு ஈ.பி.டி.பி. அங்கத்தவரைக் கொலை செய்வதற்காக மார்ச் 2012இல் அனுப்பப்பட்டது.

எல்.ரீ.ரீ.ஈயின் புத்துயிர்ப்புக்கான இரண்டாவது முயற்சி 2012 டிசம்பரில் ஒரு முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவ்ர் கொழும்பில் கைது செய்யப்பட்டபோது கண்டுபிடிக்கப் பட்டது. அதன் காரணமாக தமிழ் ஈழத்துக்கு ஆதரவான இலங்கைத் தமிழர்கள் தமிழ் நாட்டில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு எல்.ரீ.ரீ.ஈ சித்தாந்தம் அவர்களுக்கு போதிக்கப்படும் இரகசிய பிரச்சார முயற்சி பற்றிய திடுக்கிடும் தகவலை கண்டுபிடிக்க முடிந்தது. இதற்கு வெளிநாட்டு எல்.ரீ.ரீ.ஈ சக்திகள் நிதியுதவி வழங்கி வந்துள்ளன.

இலங்கை வழங்கிய தகவல்க்ளின் அடிப்படையில் தமிழ்நாடு காவல்துறையினர், சென்னை புற நகர் பகுதியில் உள்ள பம்மலில் உள்ள ஒரு வீட்டை சோதனையிட்டு அங்கிருந்த - எஸ்.சுரேஸ்குமார், டி.உதயதாஸ், ரி.மகேஸ்வரன், மற்றும் கே.கிருஸ்ணமூர்த்தி - நாலு பேரை டிசம்பர் 2012இல் கைது செய்தனர். வெடிபொருட்கள் தயாரிக்கும் ஒரு குழுவுக்கு சுரேஸ்குமார் தலைமையேற்றிருந்தார். காவல்துறையினர் ஆவணங்கள், மின்னணு சுற்றுப் பலகைகள் மற்றும் பனல்கள் என்பவற்றை அந்த வீட்டிலிருந்து மீட்டுள்ளார்கள்.

மார்ச் 2014இல் இலங்கை பாதுகாப்பு அமைச்சு, "பயங்கர வாத நடவடிக்கைகளை செய்தார்கள், செய்ய முயற்சித்தார்கள், உதவி அல்லது பங்களிப்பு நல்கினார்கள் என நம்பப்படும்" 16 தமிழ் புலம் பெயர் அமைப்புகளைச் சேர்ந்த நிறுவனங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட 424 தனி நபர்கள் ஆகியோருக்கு சொந்தமான அனைத்து நிதிகள், சொத்துகள், மற்றும் பொருளாதார வளங்கள் என்பனவற்றை முடக்கும்படி கட்டளையிட்டுள்ளது.

ஒரு அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று, அவர்களை 2012ஆம் வருட ஐ.நா விதி இல. 1இன் படி பட்டியலிட்டு பாதுகாப்பு செயலாள ரினால் கையொப்பமிட்டு மார்ச் 20, 2014இல் வெளியிடப் பட்டுள்ளது.

எல்.ரீ.ரீ.ஈ யினால் மேற்கொள்ளப்பட்ட சமீபத்தைய முயற்சி மார்ச் 2014இல் நடந்துள்ளது. ஒரு முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவரான கோபி என்கிற செல்வநாயகம் கஜீபன் கிளிநொச்சியில் வைத்து ஒரு காவல்துறை உத்தியோகத்தர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார். அவரை வேட்டையாடு வதற்காக பாதுகாப்பு படையினர் ஒரு தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டார்கள். முடிவில் அவர்கள் கோபியை மட்டுமல்லாது, தேவிகன் என்கிற சுந்தரலிங்கம் கஜதீபன், மற்றும் அப்பன் என்கிற நவரட்னம் நவனீதன் ஆகிய வேறு இரு முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ யினரையும் கொன்றார்கள்.

சந்தேக நபர்களைப் பற்றிய மேலதிக புலனாய்வுகளும் மற்றும் விசாரணைகளும், முன்னாள் கரும்புலியான தேவிகன், வி.பிரபாகரனின் முன்னாள் மெய்ப்பாதுகாவலரும் அதேசமயம் ஒரு விமானியும் கூட என்பதை வெளிப்படுத்தின. அவர் வெளிநாட்டிலுள்ள எல்.ரீ.ரீ.ஈயினரின் இரு பிரிவுகளின் தலைவர்களான நோர்வேயிலுள்ள நெடியவன் மற்றும் பிரான்சிலுள்ள விநாயகம் ஆகிய இருவருடனும் தொடர்புகளைக் கொண்டிருந்தார்.

தமிழ்நாடு எல்.ரீ.ரீ.ஈயின் ஒரு தளமாகவும் மற்றும் மாநிலத்தில் உள்ள அரசியற் கட்சிகள் தமிழ் பிரிவினைவாதிகளுக்கு ஆதரவாகவும் மாறிவருவதால் தமிழ் நாட்டை சமாளிப்பது இலங்கைக்கு கடினமாக உள்ளது. தி.மு.க மற்றும் ஆளும் அதிமுக என்பன ராஜபக்ஸ அரசாங்கத்துக்கு எதிராக கடும் நிலைப்பாட்டை எடுத்துள்ளன. இந்தக் கட்சிகள் கொண்டுள்ள எதிர்மறையான கவனத்தை மாற்ற முடியுமா? அதை மாற்றுவதற்காக ராஜபக்ஸ சில மேலதிக தூரம் முன்னால் நடப்பாரா? புது தில்லியின் தலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதுடன் மோடியின் ஆட்சி இலங்கையின் அந்த வேலையை பெருமளவுக்குக் குறைத்துமுள்ளது.






# கொரியன் இருக்க பயம் ஏன்?

தமிழ்ப் படங்களில் ஏதாவது ஒன்றில் ஒரு நல்ல காட்சி, ஒரு நல்ல அம்சம் தட்டுப்பட்டால் அது ஏதாவது வெளிநாட்டுப் படங்களில் வந்ததாக இருக்கும். அதிகமும் கொரியன் படங்கள். தெகிடி மாதிரி ஒருசில விதிவிலக்குகள் இருந்தாலும் சமீபத்தில் பெயர் வாங்கிய படங்கள், மூடர்கூடம் - Attack the Gas Station, விடியும் முன் - London to Brighton... என பலவும் வெளிநாட்டுப் படங்களின் தழுவல்.

சேஸர், யெல்லோ ஸீ உள்பட ஒரு டசின் கொரியன் படங்கள் தமிழ் [illegible]சுவதற்காக கோடம்பாக்கத்தின் கதை விவாதக் குழுக்களால் விவாதிக்கப்பட்டு வருகின்றன. அவை அப்படியே படமாகாவிட்டாலும் அந்தப் படங்களின் காட்சிகள், கதைக்கருக்கள் தமிழ்ப் படங்களில் இடம்பெற அதிக சாத்தியங்கள் உள்ளன.

பத்துப் பதினைந்து வருடங்கள் உதவி இயக்குனராக கண்களில் இயக்குனர் கனவுடன் வலம்வரும் உத்வேகமிக்க இளைஞர்களே தங்களின் முதல் படத்தை தழுவலாக அமைத்துக் கொள்வது புரிந்து கொள்ள முடியாத புதிர். மூடர்கூடம், விடியும் முன் படங்களின் இயக்குனர்களுக்கு அதுதான் முதல் படம். சமீபத்திய வெற்றிப் படமான யாமிருக்க பயமே புகழ்பெற்ற கொரிய இயக்குனர் கிம் ஜி வூனின் The Quiet Family படத்தின் தழுவல். A Tale of Two Sisters, A Bittersweet Life, I Saw the Devil போன்ற பிர-பலமான படங்களை இயக்கியவர் கிம் ஜி வூன். அவரது படங்கள் குறித்து தமிழில் தாராளமான விமர்சனங்கள் கிடைக்கின்றன.

1998இல் கிம் ஜி வூன் The Quiet Family படத்தின் மூலம் இயக்குனராக அறி-முகமானார். அந்தப் படம் ஜப்பானிய இயக்குனர் தகாஷி மிகே -ஐ கவரவே அவர் முறைப்படி உரிமை பெற்று த கொய்ட் பமிலியை Happiness of the Katakuris என்ற பெயரில் படமாக்கினார். தகாஷி மிகே ஜப்பானின் தற்கால இயக்குனர்களில் முக்கியமானவர். 13 அசாஸின்ஸ், ஹரா கிரி - டெத் ஒ.ஃப் ஏ சாமுராய் போன்ற முக்கியமான படங்களை இயக்கியவர். ஹரா கிரி என்பது Seppuku என்றழைக்கப்படும் ஜப்பானிய சடங்கு.

சாமுராய்களுக்கு அவமானம் நேர்ந்தாலோ, தங்களின் வாக்கை காப்பாற்ற முடியாமல் போனாலோ கத்தியால் தங்களின் வயிற்றை குறுக்காக கிழித்து தங்களைத் தாங்களே கொன்று கொள்வார்கள். சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் தனிப்பட்ட பாதுகாப்பு படைவீரர்கள் இதுபோன்ற கொள்கை உடையவர்கள். மன்னரை காப்பாற்ற முடியாமல் போனால் காளியின் சிலைமுன் தங்களின் தலையை தாங்களே அரிந்து கொள்வோம் என்று சபதமேற்றவர்கள்.

யாமிருக்க பயமே கொரிய படத்தின் கதையை அடிப்படையாகக் கொண்டது. படத்தில் வரும் உதவியாளனின் தங்கை கண்களில் காமத்துடன் எப்போதும் நாயகனை அழைத்துக் கொண்டேயிருக்கிறாள். அவளிடமிருந்து நாயகனை மீட்பதுதான் நாயகனின் காதலியின் ஒரேவேலை.

யாமிருக்க பயமே எட்டு கோடிக்கு மேல் தயாரிப்பாளருக்கு லாபம் சம்பாதித்து தந்ததாக கூறுகிறார்கள். இது திரையரங்கின் மூலம் கிடைத்தது. தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமை, ரீமேக் உரிமை என்று வேறு வருவாய்களும் உள்ளன. யாமிருக்க பயமேயின் இரண்டாம் பாகத்தை எடுப்பதற்கான முயற்சிகள், விருப்பங்கள் இருப்பதாக தெரிகிறது. கொட்டிக் கிடக்கும் கொரியன் படங்களில் ஏதாவது ஒன்று கைகொடுக்காமல் போகாது.

## மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு

# தூர்ந்து போன நீர் நிலைகளால் துடிக்கப் போகின்றது எங்கள் எதிர்காலம் துடிக்கின்றது கால்நடைகளின் நிகழ்காலம்

குடாநாடு உட்பட பல பிரதேசங்களில் புனரமைக்கப்படாது தூர்ந்து போன பலகேணிகள் மற்றும் குளங்களால் கால்நடைகள் தண்ணீர் இன்றி தாகத்தில் துடிக்கின்றன. அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ள கடும் கோடை, வறட்சி காரணமாக தண்ணீர்ப் பிரச்சினை மேலோங்கி வருகின்றது. முன்னைய காலங்களில் கிராமங்கள் தோறும் கேணிகளும் கால்நடைகள் நீர் அருந்துவதற்கான நீர்த்தாங்கிகளும் அமைக்கப்பட்டு இருந்தன. இதனால் அனைத்து உயிரகளும் சௌபாக்கியத்துடன் வாழும் சூழல் இருந்தது.

இன்நிலை தற்போது நகரமய மாக்கத்துடன் கூடிய நாகரிக வளர்ச்சியால் இல்லாது போய்விட்டது. தற்போது கால்நடைகள் தண்ணீர் அருந்துவதற்கு இடமின்றி அலைந்து திரியும் நிலை உருவாகியுள்ளது. இது ஒரு புறமிருக்க மேல் தண்ணீரைப்பேணும் பொறிமுறைகள் தற்போது சீரழிந்துள்



வறட்சியின் உச்சநிலை

ளன. ஏராளமான பொதுக்கிணறுகள், கேணிகள், குளங்கள் தூர்ந்து போன நிலையில் பராமரிப்புக்கள் இன்றி காணப்படுவதனால் நீரைச் சேமிக்கும் குளங்கள் குறைந்து வருகின்றது. இந்நிலை மறுபுறத்தில் இயற்கைச் சமநிலையைக் குறைத்து சூழலியல் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன.

முன்னைய அரசர்கள் தங்களின் அரசியலில் முக்கியமானவையென கருதிய விடயங்கள் இவையாகும் இது தற்போது கருத்தில் எடுக்கப்படாத நிலையில் உள்ளது. சூழலியலாளர்கள் என தம்மைக்கூறிக்கொண்டு அரசியலில் இருப்பவர்கள் இது தொடர்பாக கவனமெடுக்க வேண்டும்.

**இங்கு இனம்காணப்பட்ட சில குளங்கள்**

- வெட்டுக்களி குளம்
- முதலிக்குளம்
- பால்குளம் பாசையூர்
- பானாவெட்டிக்குளம்
- செம்மணிக்குளம்
- நாயன்மார்கட்டு குளம்
- வீரமாகாளியம்மன் குளம்
- பண்டாரக்குளம்
- கன்னாதிட்டி குளம்

வீரமாகாளியம்மன் குளம் ஆனது வீராமாகாளியம்மன் கோவிலுக்கு முன் புறமாயும் கந்தர்மடம் அரசடிப் பிள்ளையார் கோவிலுக்குப் பின்புறமாகவும் அமையப் பெற்றுள்ளது. குளமானது நோர்வே நாட்டின் நிதி உதவியுடன் தேச நிர்மாண மற்றும் அபிவிருத்தி அமைச்சின் ஊடாக 2005 ஆம் ஆண்டு 6200 கன.மீற்றர் கொள்ளளவுடைய குளமாக புனரமைப்புச் செய்யப்பட்டது.

**நாயன்மார்கட்டு குளம்**

இக்குளமானது அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்புறமாக அமைந்துள்ளது. எப்பொழுதும் பசுமையாக அல்லி, தாமரையும் நிறைந்து காணப்படும். இதுவும் பராமரிக்கப்பட வேண்டும்.

**பால்குளம் பாசையூர்**

தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சும் யாழ். மாவட்ட செயலகமும் இணைந்து யாழ். மாநகர சபையினூடாக இக்குளமானது புனரமைக்கப்பட்டது. இதற்குரிய நிதி உதவியை நோர்வே அரசாங்கம் வழங்கியுள்ளது. பத்தாயிரம் கனமீற்றர் அளவுடைய இக்குளத்தின் புனரமைப்புக்கு 1.06 மில்லியன் நிதி உதவி 2005 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

யாழ். நீர்வள பாதுகாப்பு சூழலியல் முகாமைத்துவ கருத்திட்டத்தினூடாக செய்யப்பட்டு

நீர்வளம் காப்பதன் மூலம் சுமூகமான வாழ்வை மேம் படுத்த முடியும். எனவே நீர் நிலைகளை பாதுகாப்ப துடன் வீண் விரயத்தையும் தவிர்ப்பதன் மூலம் வழமான வாழ்வை உருவாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

காரைநகர் மக்களின் முன்னுதாரணச் செயற்பாடு பிரித்தானியா காரை நலன் புரிச் சங்கத்தின் நிதி உதவியுடன் காமாட்சி கேணி, பத்தர் கேணி, சிவன் கோவிலடி கந்தர் குண்டு, வியாவில் வண்ணாங் குளம் ஆகியன நீண்ட காலங்களின் பின்னர் சீரமைக்கப்பட்டு வருகின்றன. இதற்கென பிரித்தானியா காரை நலன் புரி சங்கம் இரண்டரை இலட்சம் ரூபா (250,000.00) ஒதுக்கீடு செய்து வழங்கி யுள்ளது.

வரும் காலங்களில் நீண்ட வறட்சியை யாழ். குடா மக்கள் எதிர்கொள்ள உள்ளார்கள் என பல ஆய்வுகள் நிரூபித்துள்ளன. எனவே காரை மக்கள் பல முயற்சிகளை எடுத்துள்ளனர்.

**தேவையின் முக்கியத்துவம்**

இலங்கை அதன் மழை நீரினை இரு பருவ காலங்கள் மூலம் பெறுகின்றது. மழை வீழ்ச்சியின் அடிப்படையில் இலங்கையின் நிலப்பகுதி இரண்டாகப் பிரிக்கப்படுகின்றது.

1. ஈரவலயம்
2. வரண்டவலயம்

இதில் ஈரவலயம் வருடத்தில் 2350 மி.மீ மழை வீழ்ச்சியினை இவ்விரண்டு பருவ காலங்களில் பெறுகின்றது. வறண்ட வலயம் சராசரியாக 1450 மி. மீ மழை வீழ்ச்சியை பெறுகின்றது. இவ் 1450 மி.மீ மழைவீழ்ச்சி ஒக்ரோப்ர் மாதம் தொடககம் டிசம்பர் மாதத்திலான பெரும் போகத்தில் தான் கிடைக்கின்றது இவ்வாறு கிடைக்கும் மழைவீழ்ச்சியானது குறுகிய காலத்தில் கிடைப்பதால் அதனைச் சரியான முறையில் நாம் பயன்படுத்துவதற் கேற்ற பொறிமுறை, அல்லது தொலைநோக்கு திட்டங்கள் எம்மிடம் இல்லாமையால் இம் மழை நீரின் பெரும் பங்கு கடலை சென்றடைகின்றது.

இதனால் எமக்கு ஏனைய மாதங்களில் நீர்த் தட்டுப் பாடு ஏற்படுகின்றது. அத்துடன் கடற்கரையினை அண்டியுள்ள பகுதிகளில் எமது நில நீர் மீள் வலுவூட்டலினை சரியாக அடையாததினாலும் இருக்கும் நீரினை பாவிப்பதனாலும் இவ்வாறான நில நீர்பற்றாக்குறையினால் கடல்நீர் உட்புகுந்து விடுகின்றது. எனவே எங்களுடைய நீர்த்தேவையினை பூர்த்தி செய்வதற்கு எம்முன் உளள முதலாவது வழி எங்களுக்குக் கிடைகக்கும் இம் மழை நீரை தகுந்த தொழில்நுட் பத்துடன் சேகரித்து நீர்ப்பற்றாக்குறை யான காலங்களில் பயனபடுத்துவ தாகும். இந்த மழை நீரினை எவ்வாறு நாம் அறுவடை செய்யலாம்?


**ஆம் பின்வருவனவற்றின் மூலம் அறுவடை செய்யலாம்:**



தர்மத் தொட்டி

1. நன்னீர் கிணறுகளை நல்ல முறையில் பேணுதல்
2. குளங்கள், கேணிகள் என்பன வற்றை புனரமைத்தல்,
3. தற்போதுள்ள நீர்த்தேக்கங்களை நல்ல முறையில் பேணுதல்,
4. மேலும் பல நீர்த்தேக்கங்களை உருவாக்குதல்.

இவைகள் எல்லாம் எவ்வளவு தூரம் சாத்தியம் ஆகுமென்றால் குடநாட்டு வாழ் மக்கள், அங்குள்ள பல பொது அமைப்புக்கள், ஏன் கோவில் நிர்வாகங்கள் கூட இவற்றுள் கவனம் செலுத்த வேண்டும்.



புனரமைக்கப்படும் கேணிகள்




அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் ஐவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.

### சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- சி.நிரஜன்
தரம் :- 7
பாடசாலை:- யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி.

பெயர் :- சௌ.டான்சன்
தரம் :- 8
பாடசாலை:- யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

பெயர் :- சி.சுபர்ணா
தரம் :- 5
பாடசாலை:- யா/வல்லை மகளிர் வித்தியாலயம்.

பெயர் :- க.சுமன்ராஜ்
தரம் :- 8
பாடசாலை:- கிளி/ பாரதி வித்தியாலயம்

பெயர் :- சி.சபிதா
தரம் :- 12
பாடசாலை:- யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.


பெயர் :- பு.யதுர்சனா
தரம் :- 10
பாடசாலை:- எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேச வித்தியாலயம்.

**14.06.2014 வெளியான புதிர்ப்போட்டியின் விடைகள்**

1) 2 3) 2 5) 3
2) 2 4) 1

**வேறுபட்ட படக் கூட்டத்தின்கீழ் கோடிடுக.**







**வட்டக்காய் 2 இனதும் அன்னாசி 3 இனதும் நிறை யாது?**

(i) 8kg (ii) 9kg (iii) 10kg

**ஆரம்பத்தில் காட்டியவாறு கடதாசியை மடித்து வெட்டி பிரிக்கும் போது கிடைக்கும் அமைப்பு யாது?**




**அனுப்பவேண்டிய முகவரி**

புதிர்ப்போட்டி
இல: ------- 373,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

# புகையிரத வீதிக் கடவை அமைப்பு பாராமுகம் காட்டப்படுகிறதா?

## கேள்வி எழுப்பும் விவேகானந்த நகர் மக்கள்



ஏ-9 பிரதான வீதியிலிருந்து விவேகானந்தா நகருக்குச் செல்லும் பிரதான வீதி புகையிரத வீதியாக உள்ள நிலையில் இவ்வீதி மக்கள் பயணம் செய்வதற்கு ஏற்றவாறு இன்னமும் சீர்செய்யப்படாமையால் இதனூடாகப் பயணத்தை மேற்கொள்ளும் மக்கள் நாளாந்தம் அச்சத்துடனேயே பயணம் செய்வதாக கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சிக்கான புகையிரதசேவை ஆரம்பிக்கப்பட்டு வருடம் கழிந்துள்ள நிலையில் இதுவரை இவ்வீதி புனரமைக்கப்படவில்லை எனவும் இதனால் பல விபத்துச்சம்பவங்கள், உயிரிழப்புக்கள் என்பன இடம்பெற்றுள்ளதாகவும் இப்பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக இவ்வீதியால் நாளாந்தம் 500 இற்கும் மேற்பட்ட மக்கள் பயணம் செய்வதுடன பாடசாலை மாணவர்கள், தொழிலுக்காகச்செல்வோரும் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

அத்துடன் கனரகவாகனங்களும் இவ்வீதியால் பெரும் சிரமத்தின் மத்தியில் செல்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை சரியான முறையில் வீதிக்கடவைகள் போடப்படாமையினால் இரவு வேளைகளில் புகையிரதம் வருவது தெரியாது மக்கள் வீதியை கடக்க முற்படுகின்ற சந்தர்ப்பங்களில் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் காணப்படுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக அண்மையில் இரவு வேளை குறித்த வீதியால் உழவுஇயந்திரம் செல்ல முற்பட்டசமயம் உழவு இயந்திரப் பெட்டி தண்டவாளத்தில் சிக்குண்ட நிலையில் சடுதியாக புகையிரதம் வந்து உழவுஇயந்திரப் பெட்டியை தட்டிக்கொண்டு சென்றுள்ளதாகவும் பெட்டி உடைந்த நிலையில் வீதியை கடந்து விழுந்ததாகவும் மக்கள் இச்சந்தர்ப்பத்தில் சென்றிருந்தால் என்னவாயிருக்கும் எனவும் கேள்வி எழுப்புகின்றனர்.

மேலும் இவ்வீதியை சீர்டுத்தி வீதிக்கடவையை அமைத்து தருமாறு உரியவர்களிடம் கோரிக்கை முன்வைத்திருந்த போதிலும் இதுவரை எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே மேலும் பல உயிர்ச்சேதங்கள் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் பாராமுகம் காட்டாது.உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (77)

## நவாலியில் அதிகரித்துவரும் கோழித்திருட்டுக்கள்

(சுன்னாகம்)

நவாலி அரசடிப்பகுதியில் அண்மைக்காலமாக தொடரும் கோழித் திருட்டால் கோழிவளர்ப்பில் ஈடுபடுவோர் நஷ்டங்களையும், இடர்களையும் எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

நவாலி அரசடிப் பகுதியில் வீடுகளில் வளர்க்கப்படும் கோழிகளை உரிமையாளர்கள் கூடுகளை விட்டு வேளியே திறந்து விடும் போது மேய்ச்சலுக்குச் செல்லும் .கோழிகள் சேவல் முட்டையிடும் கோழி, குஞ்சுகள் என்ற பாகுபாடின்றி திருடர்களால் திருடப்படுகின்றது திருடப்பட்ட கோழிகள் இறைச்சிக்காக எடுக்கப்பட்ட பின்னர் அவற்றின் இறகுகள் அயல் பிரதேசங்களில் வீசபடுவதுமான சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துவருகிறது. எனவே கோழிவளர்ப்போரின் குடும்பங்களின் பொருளாதாரத்தை காப்பாற்றும் வகையில் திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என கோழிவளர்ப்பில் ஈடுபடுவோர் தெரிவிக்கின்றனர். (66)

## வருடாந்த பரிசளிப்புவிழா

தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்புவிழா, எதிர்வரும் 1ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்குப் பிரதமவிருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராசா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுலகுமாரன் கலந்துகொள்ளவுள்ளார். கௌரவவிருந்தினராக ஆசிரியர் வே.இராஜேஸ்வரா கலந்து கொள்ளவுள்ளார்.

ஆசியுரையினை ஸ்ரீலஸ்ரீ.ப. சிவசங்கரக்குருக்கள் வழங்கவுள்ளார் வாழ்த்துரையினை, ஓய்வுபெற்ற தெல்லிப்பளைக் கோட்டக்கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன் வழங்கவுள்ளார்.

பரிசில்தின நினைவுப்பேருரையினை யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர்.த.தேவராசா ஆற்றவுள்ளார். பரிசில் வழங்கல் நிகழ்ச்சியினைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (06)



காரைநகர் களபூமி, திக்கரை முருகமூர்த்தி கோவில் சப்பறத் திருவிழாவில் வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா பங்குபற்றி ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார்.இந் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது. ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைநகர் அமைப்பாளர் வீரமுத்து கண்ணனினதும், சப்பற திருவிழா உபயகாரர் எஸ். பாலச்சந்திரனினதும் மற்றும் கோவில் நிர்வாகத்தினரினதும் அழைப்பின் பேரிலேயே அவர் இந் நிகழ்வில் பங்குபற்றி ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார்.

## வாரம் ஒரு காரம்

### இதுக்குத்தானா இங்கு நாம் ஆசைப்பட்டோம்

### எதுக்கு வீணாக சர்வதேசத்தைக் காதலித்தோம்



அதிகாரத்தைக் கையில் எடுத்து இனவாதத்தை தூண்டும் பொதுபலசேனாவை அரசு ஏன் கண்டிக்க பின்னிற்கிறது?.... தற்போது நாட்டில் நிலவும் இனக்கலவரங்களிற்கு அடிப்படையாக விளங்குபவர்கள் பௌத்த தீவிரவாத குழுக்களான பொதுபலசேனா உட்பட்ட இனவாதக்கும்பல்களே ஆகும் என்பது அரசுக்குத் தெரிந்தும் கூட இவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனைகளைப் பெற்றுக் கொடுக்க ஏன் அரசு பின்னிற்கின்றது " என மனித உரிமை கண்காணிப்பகம் குற்றம் சாட்டியுள்ளது.

ஜனாதிபதி உட்பட அரசபீட உயர்அதிகாரிகள் வன்முறைகளிற்கு எதிராக கருத்துக்களை வெளியிட்டு வருவதோடு பாதிக்கப்பட்டவர்களிற்கு நஷ்டஈடு வழங்கப்படும் எனவும் கூறிவருகின்றனர். அவ்வாறு இலங்கையில் ஏற்பட்டுள்ள இனக்கலவரங்களை மனதார ஏற்றுக்கொள்ளவில்லையானால் ஏன் குற்றவாளிகளுக்கு தண்டனைகளைப் பெற்றுக்கொடுக்க அரசு பின்நிற்கிறது என்பதுதான் ஆசியபிரிவிற்கான மனிதஉரிமை கண்காணிப்பக இயக்குநரின் மறைமுக வினாவாகும்.

முஸ்லம்களிற்கெதிராக ஏற்பட்டுள்ள அளுத்கம கலவரத்தைத் தொடர்ந்து தமிழ் - முஸ்லிம்களிற்கெதிரான கலவரத்தைத்தூண்டும் வகையில் குடா நாட்டிலும் பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அவ்வாறானால் திட்டமிட்டு கலவரத்தை தூண்ட முயற்சிக்கும் கும்பல்கள் இலங்கையில் உருவாகியுள்ளன. ஆகவே இது தற்செயலாக இடம்பெற்ற ஓர் கலவரம் இல்லை.

அப்படியானால் இந்தக் கும்பல்கள் எதற்காக இதைச் செய்கின்றன? இதன பின்னணியில் இருக்கும் அரசியல் மர்மம் என்ன? என சிந்தித்தால் பல சந்தேகங்கள் உருவாகின்றன. இது ஒருபுறமிருக்க நாட்டை சீர்குலைக்க முனைந்துள்ள சர்வதேச முயற்சிகளில் ஒன்றுதான் இக்கலவரங்கள் என இதற்கு வேறோர் துருவத்தில் நாமம் சூட்டப்படுவதையும் காணமுடிகிறது.

அவ்வாறானால் இலங்கையில் இடம்பெற்றுள்ள கலவரத்திற்கு இங்குள்ளவர்கள் எவரும் காரணமில்லையா?.... இது அரசுக்கு எதிராக இடம்பெற்றுவரும ஒரு சர்வதேச சதி என்பதற்கூடாக இனவாத பௌத்த பீடங்களைத் தப்ப வைத்துக்கொள்ளும் ஓர் பிரசாரமும் மறைமுகமாக அரங்கேறிவருகின்றது.

எது எப்படி இருப்பினும் நெருக்கடிக்குள் மீண்டும் இலங்கை சிறுபான்மை மக்களைத் தள்ள சில அடிப்படை வாதிகள் முயற்சிக்கின்றனர் என்பதே உண்மை. கூட்டமைப்பும் இதைத்தான் மறைமுகமாக தமிழர்க்குச் செய்கின்றது. சிங்கள இனவாதக் கட்சிகளும் இதைத்தான் மறைமுகமாக சிறுபான்மை இனங்களிற்கு செய்கின்றன.

இவற்றிற்கெல்லாம் அரசு துணைபோகுமாயின் மேற்குலகில் இருந்தும், தென்னிந்தியாவில் இருந்தும் தற்போது வரும் அச்சுறுத்தல்களிற்கப்பால் அரபு மற்றும் முஸ்லீம் நாடுகளில் இருந்தும் அச்சுறுத்தல் வரும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

தலைமைப்பீடங்களுடன் இருப்பவர்களும் சில ஊடகங்களும் மக்களையும், அரசையும் குழப்பி கூத்தைப் பார்ப்பதற்குத் தயாராக உள்ளனரே தவிர குறுககிடப்போகும் இன்னல்களைக் கூறி நாட்டினையும் நாட்டு மக்களையும் அமைதிப்படுத்தும் பணிக்கு யாரும் இல்லை.

ஓர் நாட்டில் பெரும்பான்மை சமூகங்கள் இடையே சிறுபான்மை சமூகங்கள் வாழும்போது அச்சிறுபான்மையினர்க்கு பெரும்பான்மையினரே பொறுப்பாகவும். பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும்.

இது அரசின் தவறுகளாகவும், ஆட்சிஅமைப்பில் உள்ள குறைபாடுகளாக இருக்கும் அதேவேளை பலமின்றி பலவற்றை எதிர்பார்த்து இருக்கும் சிறுபான்மை இனங்களிற்கு மறைமுகமாக பேரழிவொன்று குறுக்கிடப்போகின்றது. யதார்த்தத்தைப் புறக்கணித்து இணக்க அரசியலை இழிவென்று பார்த்த நாம் இப்படியே தொடர்ந்தும் இருந்தால் இனிவரும் காலங்களில் பெரும் இன்னல்களைச் சந்திக்கப் போகின்றோம் என்பதே உண்மை.

அரசு சர்வதேச சட்டத்துக்குள் நின்று சாதுரியமாக காய்நகர்த்தி ஐ.நாவின் விசாரணைக்கு தடை போடுகின்றது. நாட்டின் இறைமைக்குள் எவரும் தலையிட முடியாத வகையில் நாடாளுமன்றத்தின் சார்பில் ஐ.நாவின் விசாரணைக்கு மறுப்புத் தெரிவித்து விட்டது. இதைமீறி ஓர் நாட்டின் இறைமைக்குள் எவரும் தலையிடமுடியாது என்பதை அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களிற்கான பிரதி உதவிச்செயலாளர் ஒப்புக்கொண்டதையும் பார்த்தோம்.

ஈரான் வடகொரியா, சிரியா போன்ற நாடுகளின் பட்டியலில் இலங்கையை சேர்த்துப் பார்க்க மட்டுமே அமெரிக்காவால் முடிகிறதாம். சற்று சிந்தித்துப் பாருங்கள், ஐ.நாவையே வெற்றிகண்டு அதன் கண்காணிப்பைக் கண்கட்டிவிட்ட இலங்கைக்கு கூட்டமைப்பின் கும்மாளமெல்லாம் இனி வருங்காலத்தில் சிறுபிள்ளை விளையாட்டுத்தான். இதற்குள் சிக்கித் தவிக்கும் இலங்கைத் தமிழர்களின் கண்ணீரெல்லாம் எப்போதும் இரத்தக் கண்ணீர்தானா?

**இதுக்குத்தானா நாம் ஆசைப்பட்டோம எதுக்கு வீணாக சர்வதேசத்தை காதலித்தோம்.**

# சந்தேகத்திற்கிடமான முறையில் இலங்கை மருத்துவர் மரணம்

(கிளிநொச்சி)

இலங்கை மருத்துவர் ஒருவரின் மரணம் தொடர்பில் அவுஸ்ரேலிய அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். மேற்கு அவுஸ்ரேலிய காவல் துறையினர் இது தொடர்பிலான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மருத்தவரின் மனைவி மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

34 வயதான தினேந்தரா அத்துகோரள என்ற மருத்துவரே சந்தேகத்திற்கு இடமான முறையில் அவுஸ்ரேலியாவில் உயிரிழந்திருந்தார். கடந்த 24ஆம் திகதி படுகாயமடைந்த நிலையில் வீட்டில் இருந்து பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி மருத்துவர் உயிரிழந்தார்.

மரணம் தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக காவல்துறையினர் அறிவித்துள்ளனர். மரணம் தொடர்பில் மருத்துவரின் குடும்பத்திற்கும் கொன்சோல் காரியாலயத்திற்கும் தகவல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# முஸ்லிம்களுக்காக எமது அரசியல்வாதிகள் இன்று வடிக்கின்றனர் முதலைக் கண்ணீர்

## வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு போன்ற பகுதிகளில் இருந்து முஸ்லிம் மக்கள் இரவோடு இரவாக 2 ஆயிரம் ரூபாவுடன் அன்று விரட்டியடிக்கப்பட்டபோது எங்களுடைய அரசியல்வாதிகள் பொறுப்பற்ற முறையில் நடந்து விட்டு இன்று முதலைக் கண்ணீர் விடுவதைப் பார்க்கும் போது எனக்கு முதலைக் கண்ணீர் வருகிறது. என வட மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா நேற்றுமுன்தினம் வடமாகாண சபை அமர்வின் போது பேருவளை சம்பவம் தொடர்பில் இடம்பெற்ற கண்டனப் பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்து உரையாற்றும் போது தெரிவித்தார்.

இனரீதியான வன்முறைகள் எந்தக் கோணத்தில் வந்தாலும் அது கண்டிக்கப்பட வேண்டும். ஆனால் பேருவளை, அளுத்கம பகுதிகளில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு எதிராக பல அரசியல் தலைவர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளனர். அவை பிரச்சினைகளை வளர்க்கும் வகையில் அமைந்துள்ளன. தவிர பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் அமையவில்லை. அவ்வாறு வெளியிடுவதை தவிர்ப்பது சிறந்தது.

அன்று யாழ்ப்பாணத்திலிருந்து 27 ஆயிரம் முஸ்லிம்களும், மன்னாரிலிருந்து 40 ஆயிரம் பேரும், முல்லைத்தீவிலிருந்து 8 ஆயிரம் பேரும் இரவோடு இரவாக விரட்டியடிக்கப்பட்ட போது மௌனியாக ஒரு வார்த்தை சொல்ல வக்கில்லாதவர்கள் இன்று முஸ்லிம்களுக்கு நியாயம் கேட்கிறார்கள். முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்ட போது நான் சார்ந்த கட்சி புத்தளத்தில் 240 பேர்ச் காணியை வழங்கி 130 முஸ்லிம் குடும்பங்களை குடியேற்றினோம். இப்போதும் தேவா பாத் என்று புத்தளத்தில் உள்ளது இங்கு இவர்களுக்கு 4 பள்ளி வாசல்களையும் 12 முன்பள்ளிகளையும், அமைத்ததுடன் அதன் ஆசிரியர்களுக்கு 5 வருட காலத்திற்கு சம்பளமும் வழங்கினோம். அன்று முஸ்லிம்களுக்கு உறுதுணையாக நின்றவர்கள் நாங்கள் இப்போதும் நிற்கன்றோம். முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிரான பிரேரணையை நாம் ஆதரிக்கின்றோம்.

இறுதி யுத்தத்தின் போது முஸ்லிம்கள் மௌனியாக இருந்தார்கள் என கூறுவது அவ்வளவு ஏற்கக் கூடிய தல்ல. கிழக்கு மாகாண சபையின அமைச்சர் ஹிஸ்புல்லா காயமடைந்த மக்களுக்கு தனது சொந்தச் செலவில் வைத்திய சாலையில் முகாமிட்டிருந்து இரவு பகலாக வைத்திய சேவையினை வழங்கினார் என்பது யாவரும் அறிந்தது. எல்லா முஸ்லிம் மக்களையும் குறை கூறுவது தவறு. தமிழர்களுககாக குரல் கொடுக்கும் முஸ்லிம்கள் பெருமளவில் இருக்கறார்கள். என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# வீதி ஒழுங்குகளை மீறியோருக்கு தண்டம்

கிளிநொச்சி பூநகரிப் பகுதியில் வீதி ஒழுங்குகளை மீறி நடந்த இருவருக்கு 7500 ரூபா தண்டம் விதித்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ. வாகப்தீன் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

வரி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் ஆகியன இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய நபருக்கு 6500 ரூபாவும், இரவில் மின்விளக்கின்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு 1000 ரூபாவும் தண்டம் விதித்தார். மேற்படி இருநபர்களும் கடந்த செவ்வாய்க்கிழமை பூநகரிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இந்நபர்களுக்கெதிராக பூநகரிப் பொலிஸார் கிளிநொச்சி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். இவ்வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக கொள்ளப்பட்ட போதே நீதவான் மேற்படி உத்தரவினை பிறப்பித்தார்.

# எரிபொருளுக்கு தட்டுப்பாடு நாட்டில் ஏற்படமாட்டாது

## அமைச்சர் அநுரபிரியதர்சன யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)



கடந்த இருவார காலமாக சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டிருந்தாலும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படவில்லை என அமைச்சர் அனுரபிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

வருடாந்த மேற்பார்வை காரணமாக சுத்திகரிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடலில் மசகு எண்ணெய் இறக்கப்படுகின்ற போது அங்கிருந்து மசகு எண்ணெயை விநியோகிக்கும் குழாய் வெடித்துள்ளமையால் ஒரு மாதகாலமாக மசகு எண்ணெயை பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும், இதன் காரணமாக சுத்திகரிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக தொழிற்சங்கங்கள் குறிப்பிடுகின்றன.

சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளை இறக்குமதி செய்வதை விட மசகு எண்ணெய் சுத்திகரிப்பது இலாபமானது என்றாலும் கடந்த சில காலங்களில் பல காரணங்களுக்காக சுத்திகரிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டமையால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு பெருமளவில் எரிபொருள் கிடைக்காமல் போயுள்ளது. நாட்டிற்கு தேவையான எரி பொருள் தேவையில் மூன்றில் ஒரு பங்கு சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கிடைக்கப் பெறுகின்றது.

சுத்திகரிப்புக்குத் தேவையான மசகு எண்ணெய் எம்மிடம் இருக்கின்றது. எரிபொருளை விநியோகிக்கின்ற மார்க்கங்களின் ஊடாக நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. வருடாந்த பேற்பார்வைக்காக கடந்த வாரம் மூடப்பட்டது. ஒரு மாதத்திற்கு தேவையான எரிபொருள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இந்தக் காலபகுதியில் எரிபொருள தட்டுப்பாடு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடம் பெறாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# மாலைதீவு முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தல் இல்லை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)



இலங்கை வாழ் மாலைதீவு முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தல் எதுவும் கிடையாது என இலங்கை அரசாங்கம் உத்தரவாதம் அளித்துள்ளது,


அண்மையில் இடம்பெற்ற வன்முறைகளினால் மாலைதீவு முஸ்லிம்கள் அச்சமடையத் தேவையில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். இலங்கையில் சுமார் 9000 மாலைதீவு பிரஜைகள் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்ப டுகிறது.

தெஹிவளை, கல்கிஸைப் பகுதிகளில் அதிகளவான மாலைதீவு மக்கள் வாழ்ந்து வருகின்ற போதிலும் அண்மையில் இடம்பெற்ற வன்முறைகளினால் மாலைதீவு பிரஜைகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

அண்மையில் இடம்பெற்ற வன்முறைகள் உள்நாட்டு ரீதியானது எனவும், ஏனைய சமூகங்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லை எனவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை அரசாங்கத்தின் வாக்குறுதி மீது நம்பிக்கை இருப்பதாக மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் டனியா மயூமுன் தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும், இலங்கையின் நிலைமைகள் குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

# கைக் குண்டு மீட்பு



ஆயுதங்களை தம்வசம் வைத்திருப்பவர்கள் இராணுவத்திடம் ஒப்படைக்க வேண்டுமென்று கோரப்பட்ட துண்டுப் பிரசுரத்தின் கீழ் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக அச்சுவேலி பொலிஸார் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெரிவித்தனர்.

யாழ். அச்சுவேலி ஆவரங்கால் பிரதான வீதியில் உள்ள பேருந்து தரிப்பிடத்தில் கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

பேருந்து தரிப்பிடத்தில் நின்ற மக்கள் அங்கு கைக்குண்டு ஒன்று இருப்பதனை அவதானித்து அச்சுவேலி பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில், இந்த கைக்குண்டினை மீட்டுள்ளதாகஅச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். (25

# கல்வியியலாளர்களுக்கு வழிகாட்டல் பயிற்சி பட்டறை



வவுனியா தெற்கு வலய கல்வி அலுவலக கல்வியியலாளர்களுக்கான ஆலோசனை வழிகாட்டல் பயிற்சிப் பட்டறை நேற்று முன்தினம் நடைபெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. அன்ரன் சோமராஜா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் , ஆசிரிய ஆலோசகர்கள் கலந்து கொண்டதுடன் வவுனியா பொது வைத்தியசாலையின் உள நல மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி எஸ். சிவதாஸ், பிரதிக்கல்விப்பணிப்பாளர் திருமதி நா. மாணிக்கவாசகம் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

இதன்போது பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளான மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை மேம்படுத்துவதற்காக புதிய யுக்திகளை கையாள்வதும் அதனூடாக மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தை அதிகரிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடல்களும் இடம் பெற்றிருந்தன.

# தரம் - 9, 10, 11 மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்

கணிதம்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

01. $324 + 13$ கூட்டுக.


02. ரூ. 125 இற்கு வாங்கிய பொருளொன்றை ரூ. 150 இற்கு விற்றால், அவர் பெற்ற இலாபம் யாது?

03. $+3 + 4$ பெறுமானம் காண்க


04. $a^3 \times a^4$ சுருக்குக

05. 345.7 எனும் எண்ணை விஞ்ஞான முறைக் குறியீட்டில் தருக.


06. உருவில் நிழற்றிய பகுதியின் பின்னம் யாது?



07. உருவில் x இன் பெறுமானம் யாது?





08. உருவின் சுற்றளவு யாது?




09. 729 எனும் எண்ணைக் கிட்டிய 10 இற்கு மட்டம் தட்டுக


10. 15, 17, 19, 21, . . , . . .அடுத்து வரும் இரு உறுப்பெண்ணையும் காண்க.

11. உருவில் வகுப்பு A யின் மூலகங்களை வரையறுக்குக.





12. இலங்கை எந்த நேர வலயத்தில் அமைந்துள்ளது?


13. உருவில் h இன் பெறுமானம் யாது?




14. தரப்பட்ட கோணம் $A\hat{O}B$ யினை கவராயத்தைப் பயன்படுத்தி இருசமகூறாக்குக.





15. உருவின் பரப்பளவைக் காண்க





16. $2xy + 6x$ பொதுக் காரணிகளை வேறாக்குக?

17. இதன் விசேட பெயர் என்ன?

18. $\frac{1}{4} + \frac{2}{4}$ சுருக்குக





19. நாணயமொன்று சுண்டப்படும் போது கிடைக்கும் மாதிரி வெளி நிகழ்ச்சிகளை வரையறுக்குக.




20. $x - 3 = 5$ எனின் $x$ இன் பெறுமானம் காண்க.

21. உருவில் இன் பெறுமானம் யாது?




22. AB இன் விசேட பெயர் யாது?

23. $\sqrt{9}$ இன் பெறுமானம் யாது?

24. 1l பெற்றோலின் விலை 64/= எனின் 500ml பெற்றோலின் விலை யாது?

25. 5% என்பதைப் பின்னமாகத் தருக?

26. ஒரே அளவான போத்தலில் 3 போத்தல் நீரும் 1 போத்தல் பழரசமும் விட்டு குளிர்பானம் தயாரிக்கப்பட்டது. நீரும் பழரசமும் விடப்பட்ட விகிதம் என்ன?


27. $3 + 5 = 8$ என்பதைப் பாய்ச்சல் கோட்டுப் படம் மூலம் காட்டுக.

28. 1:100 எனும் அளவிடைக்கமைய வரையப்பட்டுள்ள அளவிடைத்தாளில் 4cm குறிக்கும் உண்மைத்தூரம் யாது?

29. a x a x a சுட்டி வடிவில் தருக

30. 3 cm நீளமும், 2 cm அகலமும், 1 cm உயரமும் உடைய பாத்திரத்தின் கனவளவு யாது?

31. உருவில் A என்னும் புள்ளியின் ஆள்கூற்றுப் பெறுமானம் யாது?





32. 4,5,3,4,4,2,1 எனும் எண் பரம்பலின் ஆகாரப்புள்ளி யாது?

33.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வேண்டிய மோட்டார் வண்டி | /// | 𝍸 | 𝍸//// | 𝍸𝍸 | // |
| வராத நாள் | 1 | 2 | 3 | 4 | 5 |

34. இவ்விரு முக்கோணிகளும் ஒருங்கிசையத் தேவையான


1) தரவினைக் குறிப்பிடுக
2) ஒருங்கிசைவு நிபந்தனை யாது?




35. 0.2 ஐப் பின்னமாகத் தருக.

36. x = 1 y = 3 எனின் 2x + y இன் பெறுமானம் யாது?

37. A யிலிருந்து B யின் திசைகோள் யாது?




38. $(a+5)^2 = a^2 + .... + .....$ பின்வரும் விரிவில் வெற்றிடத்தை நிரப்புக.

39. 15y இன் ஒரு காரணி 3 எனின் மறுகாரணி யாது?

40. $1\frac{2}{3}$ எனும் கலப்புப் பின்னத்தை முறைமையில்லாப் பின்னமாக்குக.

## தரம் -11


1) பெறுமானம் காண்க $\frac{1}{2} + \frac{1}{8}$

2) சுருக்குக. $8.48 \div 8$

3) ஏறுவரிசைப்படுத்துக. $0.3, \frac{1}{2}, \frac{3}{5}, 8\%$

4) 515 ml இதனை லீற்றரில் தருக.

5) உருவில் y இன் பெறுமானத்தை a, x இல் தருக




6) தீர்க்க $\frac{1}{3}x + 1 = 3$

7) 0.125 ஐ எளிய பின்னமாகத் தருக.

8) 49 $cm^2$ பரப்பளவுள்ள ஒரு சதுரத்தின் சுற்றளவு யாது?

9) சுருக்குக $\left(1\frac{1}{3} - \frac{3}{4}\right)$ இன் $1\frac{5}{7}$

10) தோட்டமொன்றில் $\frac{1}{4}$ பங்கு பப்பாசி $\frac{1}{4}$ பங்கு தோடை மீதி தென்னை மரங்கள் ஆகும். தென்னை மரங்கள் 100 எனின், மொத்த மரங்கள் எத்தனை?

11) சுருக்குக $1101_{\text{இரண்டு}} + 111_{\text{இரண்டு}}$

12) (2x -5) ( x-3) விரித்து எழுதிச் சுருக்குக.

13) $a = \frac{x^2 + y^2}{2x}$ , b $\frac{x^2 + y^2}{3x}$ எனின் 2a + 3 b இன் பெறுமானம் யாது?

14) தரப்பட்டுள்ள உருவில் இணைகரம் ABCD இன் பரப்பளவு 50 $cm^2$ எனின் முக்கோணம் ABE இன் பரப்பளவு யாது?

15) 27 x = 81 எனின் x ஐக் காண்க.

16) log, a = 3 எனின் a இன் பெறுமதி யாது?


17) 6, 5, 6,5 ,x, 3, 3 எனும் எண் பரம்பலின் ஆகாரம் 5 எனின் x இன் பெறுமதி யாது?

18) $x^2 - 5x - 6, (x-1)^2$ என்பவற்றின் பொ.ம.சி. காண்க.

19) A யிலிருந்து பார்க்கும்போது B யின் திசைகோள் $210^0$ எனின் B யில் இருந்து பார்க்கும்போது A யின் திசைகோள் யாது?


20) $4x^2 - 12x + 9$ என்பதை நிறைவர்க்க கோவையாக எழுதுக.

21) தரப்பட்ட நேர்கோட்டின் சமன்பாட்டை எழுதுக.




22) $x^2 - 4x + 1 = 0$ எனில் x + இன் பெறுமானத்தைக் காண்க.

23) உருவில் தரப்பட்ட தரவுகளிற்கு அமைய x, y ஆகியவற்றின் பெறுமானங் களைக் காண்க.





24) ஒரு குறித்த வேலையை 3 பெண்கள் அல்லது 2 ஆண்கள் 12 நாட்களில் செய்வர். அதேவேலையை 6 பெண்களும், 2 ஆண்களும் சேர்ந்து எத்தனை நாட்களில் செய்வர்?


25) குமார், பாலா ஆகியோர் சம தொகையான பணம் வைத்திருக் கின்றனர். குமார் தன்னிடமுள்ள பணத்தின் 10% ஐ பாலாவிற்குக் கொடுத்தால், குமாரிலும் பார்க்க பாலா ரூபா 2400 கூடுதலாக வைத்திருப்பான். ஆரம்பத்தில் அவர்களிடத்திலிந்த பணம் எவ்வளவு?

9. ஒருஅறுகோணியில் 4 கோணங்கள் ஒன்றுக்கொன்று சமமாகும். ஏனைய கோணங்கள் ஒவ்வொன்றும் $90^o$ஆகும். எனவே எஞ்சியகோணம் ஒன்றின் பெறுமானத்தைக் கணிக்க.

10. உருவில் தரப்பட்டுள்ளதகவல்களைக் கொண்டுX இன் பெறுமானத்தைக் காண்க.




11. உருவில் தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு X இன் பெறுமானத் தைக் காண்க.





12. ஒரு கம்பனியின் ரூ 10 பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு ஒருவர் ரூ 36000 ஐ முதலீடுசெய்கின்றார். அவர் கொள்வனவுசெய்யத்தக்கபங்குகளின் எண்ணிக்கை 2000 ஆகும். ஒருபங்கின் சந்தைப் பெறுமானம் யாது?

13. பின்வரும் ஒருங்கமைசமன்பாட்டுச் சோடியைத்திருப்தியாக்கும் X இன் பெறுமானத்தைக் காண்க.

$$2x + y = 15$$

$$5x - y = 6$$

14. வரிப்படத்தில் காணப்படும் பாத்திரத்தின் கொள்ளளவு 2 லீற்றர் ஆகும். தரப்பட்டுள்ளதகவல்களுக்கேற்பபாத்திரத்தில் இருக்கும் திரவத்தின் கனவளவுயாது?





# தரம் –10

எல்லாவினாக்களுக்கும் விடைஎழுதுக.


1. ரூ 75 இற்குவாங்கிய ஒரு புத்தகத்தினை ரூ 95 இற்குவிற்கும் போதுகிடைக்கும் இலாபம் யாது?

2. முழு உருவில் நிழற்றப்பட்டுள்ள பின்னம் யாது?



3. 15இற்கு குறைந்த முக்கோணி எண்களை எழுதுக.

4. உருவில் உள்ளதகவல்களுக்கேற்ப X இன் பெறுமானத்தைக் காண்க.





5. கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்கானதளத்தைதயார் செய்வதற்கு 5 மனிதர்களுக்கு 12 நாட்கள் தேவைப்படும். இவ் வேலையை 6 நாட்களில் முடிப்பதற்குதேவையானமனிதர்களின் எண்ணிக்கையாது?

6. வட்டம் ஒன்றின் மையத்திலிருந்து6cm தூரத்தில் உள்ளநாணின் நீளம் 16cm ஆகும். அவ் வட்டத்தின் ஆரையினைக் காண்க.

7. படித்திறன் 3 ஆகவும் வெட்டுத்துண்டு 5 ஆகவும் உள்ள ஒரு நேர்கோட்டின் சமன்பாடுயாது?

8)




PQRS ஓர் இணைகரம். அதில் SR =12cm, PA=10 cm, PB = 5cm ஆகும். பக்கம் QR இன் நீளத்தைக் காண்க.

## கடந்த ஞாயிறு மற்றும் செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை வெளியான புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளுக்குரிய விடைகள்

### 22 யூன் 2014 ஞாயிற்றுக்கிழமை

6) i. கவனமாக இரு
ii. கைகளை உயர்த்துங்கள்
iii. உங்களுக்கு நன்றி

07) i. உங்கள் சுகம் எப்படி? உங்கள் நலம் எப்படி? உமது சுகம் எப்படி? உமது நலம் எப்படி? ii). நான் நல்ல சுகமாக உள்ளேன்.

| | | | |
|---|---|---|---|
| 08) 4 | 17) 1 | இணைத்தல் | 35) வல்லூறு |
| 09) 2 | 18) 3 | 26) 3 | 36) வான்கோழி |
| 10) 3 | 19) 1 | 27) 1 | 37) 14 நாட்களுக்கு |
| 11) 4 | 20) 4 | 28) 2 | 38) மு.ப. 7.30 |
| 12) 2 | 21) 2 | 29) வெற்றிலை | 39) ரூ.135.00 |
| 13) 3 | 22) 3 | 30) தூதுவளை | 40) 102 பால்ரின்கள் |
| 14) 2 | 23) 1 | 31) மொசுமொசுக்கை | i. 95 |
| 15) 1 | 24) 2 | 32) முடிதும்பை | ii. 120 வாகனங்கள் |
| 16) 4 | 25) பொருத்தமாக | 33) மரங்கொத்தி | iii. 45 வாகனங்கள் |
| | | 34) பென்குயின் | iv. பேருந்து |

### 24 யூன் 2014 செவ்வாய்க்கிழமை

| | | | | |
|---|---|---|---|---|
| 1) வெள்ளம் | 8) கூறமுடியாது | 15) 60 பேர் | 22) ☒ | 28) 2 |
| 2) மடு | 9) நான்கு | 16) 120 பேர் | 22) ☒ | 29) 3 |
| 3) பிள்ளை | 10) நோர்வே | 17) 2 | 23) ☒ | |
| 4) சரி | 11) 04 | 18) மீன்கள் | 24) | |
| 5) பிழை | 12) 7 பேர் | 19) A | 25) ☒ | |
| 6) பிழை | 13) 26 பேர் | 20) 3 | 26) 3 | |
| 7) தாய் | 14) 15 பேர் | 21) 1 | 27) 2 | |

### 27 யூன் 2014 வெள்ளிக்கிழமை

| | | | |
|---|---|---|---|
| 1) iii | 6) i | 11) i | 16) iii |
| 2) ii | 7) iii | 12) 10 | 17) i |
| 3) i | 8) iii | 13) ii | 18) i |
| 4) iii | 9) i | 14) i | 19) ii |
| 5) i | 10) ii | 15) iii | 20) iv |

# நன்மைகள் தந்து நல்லருள் புரிந்திடும் நயினை நாகபூஷணிக்கு இன்று கொடியேற்றம்


உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற அகிலாண்ட கோடிபிரம்மாண்ட நாயகியான அன்னை ஆதிபராசக்தியானவள் நயினாதீவிலே ஸ்ரீநாகபூஷணித்தாயாக எழுந்தருளி வீற்றிருந்து அருள் பாலிக்கின்றாள். அந்த அருள்மிகு அம்பிகைக்கு இன்று கொடியேற்றம்.

இப்போது பிறந்திருக்கும் ஜய வருடத்துக்கான திவ்யமகோற்சவம் இன்று நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. நாகபாம்பு பூசித்து வணங்கி வந்த நன்மைகள் தந்து நல்லருள் புரிகின்ற நயினை நாகபூஷணிக்கு நடைபெறுகின்ற இந்த வருடாந்த மகோற்சவம் இன்றுமுதல் பதினைந்து நாள்களுக்குத் தொடர்ந்து இடம்பெறும்.

ஒவ்வொருநாளும் ஒவ்வொரு விதவிதமான அலங்காரத்துடன் அம்பிகை அழகே உருவாகக் காட்சிதருவாள். அந்த அழகு காண்பதற்கு நாம் கொடுத்து வைத்திருக்க வேண்டும். சரித்திரப்பிரசித்தி பெற்ற இந்த நயினை நாகபூஷணி அம்மன் கோவில் உற்சவத்தைக் காண்பதற்கு இலங்கையின் நாலாபக்கங்களிலிருந்தும் அடியார்கள் இங்கு வந்து சேர்வார்கள். அவர்களுக்கான தங்குமிட வசதிகளும் உணவும் இங்கே நல்ல முறையில் வழங்கப்படும். தினமும் நயினை அமுதசுரபி மண்டபத்தில் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும்.

இந்தக்கோயிலின் அருமையும் பெருமையும் எழுத்தில் அடங்காது. அலைகடல் மத்தியிலே ஆழிசூழ்தீவிலே அடியார்க்கருளும் அம்பிகையாக ஸ்ரீ நாக பூஷணித்தாய் எழுந்தருளியிருக்கும் பாங்கு சொல்லிமுடியாது. அத்தனை பேரழகுடன் காட்சிதரும் அம்பிகை அருட்சக்தியாவாள்.

இத்தலத்துக்குக் கன்னிப் பெண்களும் சுமங்கலிகளும் திருமணம் கைகூடாத இளைஞர்கள் மற்றும் அடியார்கள் எல் லோருமே நேர்த்தி வைத்து வழிபாடியற்று வார்கள். பிறகு அதனைப் பூர்த்தி செய்ய இந்தத் தேவஸ்தானத்தில் வந்து கூடுவார்கள்.



இந்தக்கோவிலின் புனிதமும் மகிமையும் மாண்பும் மகத்துவமும் பற்றிய ஒரு வரலாற்றுக்கதையும் நிலவி வருகிறது. ஸ்ரீநாகபூஷணித்தாய் தம்மை நம்பி வந்து வழிபடுகின்ற எவரையுமே கைவிடமாட்டாள். என்பதற்கு இக்கதையே தக்க சான்றாதாரமாக விளங்குகின்றது.

முன்னொரு காலத்திலே நயினாதீவிலே எழுந்தருளி அருள்பாலிக்கும் அம்பிகையை நாகபாம்பு ஒன்று பூப்போட்டு வணங்கி வந்ததாம் ஒருநாள் அந்தப் பாம்பு அம்பிகையைக்கும் பிட வந்தபொழுது கருடனொன்று அதைக்கொல்லப் பார்த்ததாம். அப்போது அந்த வழியால் வந்த வணிகனொருவன் நாகபாம்பைக் காப்பாற்றினான் என்று கூறப்படுகிறது.

அந்த வணிகன் வீடு சென்று கண்ணயர்ந்த பொழுது அம்பாள் காட்சி கொடுத்ததாகவும் அவனுடைய வீடு நிறைய நாகரத்தினமணிகள் நிறைந்திருந்ததாகவும் அச்செல்வத்தைக்கொண்டு அந்த வணிகனே இக்கோயிலைக் கட்டுவித்தான் எனவும் கூறப்படுகிறது.

பல்லாயிரக்கணக்கான மெய்யடியார்கள யாத்திரையாக வந்து வழிபாடியற்றும் இத்தலம் அன்றுபோல் இன்றும் ஒரு புனித புண்ணிய தலமாகக் கருதப்பட்டு வருகிறது. இப்பொழுதும் அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையானவள் எடுத்துரைக்க முடியாதளவுக்கு பற்பல அற்புதங்கள் புரிந்தவண்ணம் வீற்றிருக்கின்றாள்.

ஆகவே அருளைவாரி வழங்கும் ஸ்ரீநாகபூஷணி அம்பிகையை உண்மையான பக்தியுடன் பாடிப்பணிந்து சிந்தித்து வந்துதித்துச் சேவித்து நின்று நல்லருள் பெற்றுய்ய அவளையே அடிபணிந்து நிற்போமாக.

* * * *

தெய்வத்தமிழ்ச்சுடர்
கலாபூஷணம்
இராசையா ஸ்ரீதரன்

# தங்கம்மா அப்பாக்குட்டியின் 6 ஆவது குருபூசை விழா

(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் ஆறாவது ஆண்டு குரு பூசை நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பளை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தான மண்டபத்தில் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸதானத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

காலை 9 மணிக்கு துர்க்கா தேவி ஆலயத்தில் விஷேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று அன்னையின் நினைவாலயத்தில் வழிபாடுகள் நடைபெற்று அன்னையின் உருவச்சிலை வழிபாடு திருமுறை மடத்தில் விஷேட பூசை வழிபாடுகள் என்பவற்றுடன் துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் திருமுறைப் பாராயணம் இடம்பெற்று அன்னபூரணி மண்டபத்தில் சிறப்பு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

நிகழ்வில் வரவேற்புரையினை தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தான உப பொருளாளர் சு.ஏமூர்நாயம பிரார்த்தனை உரைகளினை தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான் பிரதம குரு சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக்குருக்கள் மருதனார் மடம் சுந்தர ஆஞ்சநேயர் தேவஸ்தான ஆதீன கர்த்தா சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள் நல்லை திருஞான சம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீசோம சுந்தர தேசிகஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் வழங்கவுள்ளார்கள்.

பண்ணிசை அரங்கினை இசைமாமணி கலாபூஷணம் இளைப்பாறிய அதிபர் வ.செல்லத்துரை வழங்குவார்.

மூத்த சிவாச்சாரியார்கள் கௌரவிப்பு நிகழ்வில் வேதாகம வித்தகர் சிவஸ்ரீ ச.சோமசுந்தரக்குருக்கள் உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் ஆலய பிரதமகுரு சிவஸஸ்ரீ வை.சபாரத்தினக்குருக்கள் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

11 ஆம் திருமுறை நூல் வெளியீட்டு நிகழ்வில் வெளியீட்டுரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக பீட பீடாதிபதி யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி நிகழ்த்துவார்.

முதற்பிரதியினை தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான உபதலைவர் தேசகீர்த்தி ச.ஆறுமுகநாதன் பெற்றுக் கொள்வார். (63)

# அதிக வேகத்தில் வாகனங்கள் அச்சத்துடன் போக்குவரத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதான வீதியால் பொது மக்கள் போக்குவரத்து செய்வதற்கு மிகுந்த அசௌகரியப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிற்றூர்திகள் முதல் கனரக வாகனங்கள் அனைத்தும் அதி வேகத்தில் பயணிப்பதால் கூரணம் தப்பினால் மரணம் என்னும் நெருக்கடியுள் போக்குவரவை மேற்கொள்வதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

சுண்டிக்குழி சந்தியில் இருந்து துரையப்பா விளையாட்டரங்குச் சந்திவரையான பகுதிகளில் வாகனங்கள் செலு தப்பட வேண்டிய வேகத்தைக் கடைப்பிடியாமல் சாரதிகள் மனம் போன போக்கில் வாகனங்களைச் செலுத்தி வருவதாக தெரிவிக்கின்றனர்.

வீதியின் ஒருமருங்கில் நின்று வாகனங்கள் எதுவுமில்லையென வீதியைக்கடந்து மறுமருங்குப் போவதற்கிடையில் வாகனங்கள் முட்டுமாப்போல் செல்வதாகவும் கூறப்படுகிறது. (68)

# மக்களின் தேவைகள் குறித்து அரியாலையில் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

அரியாலை தென்கிழக்கு கிராமப் பகுதி மக்களது தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தலைமையில் நடைபெற்றது

இக் கலந்துரையாடலில் மக்களது தேவைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. இதன் போது அரியாலை தென்கிழக்கு மணியம்தோட்டம், உதயபுரம், பெரியதோட்டம் கிராம மக்களுடன் இந்திய வீட்டத்திட்டம் தொடர்பாகவும், அரச காணியில் குடியிருக்கும் மக்களுக்கு காணி உறுதி பெற்றுக் கொடுப்பது தொடர்பிலும், மின்சாரம், போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப் பட்டது.

இதில் கருத்துத் தெரிவித்த ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் மேற்படி விடயங்களை பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்தார்.

இதில் நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் அ.ரவீந்திரன் கலந்து கொண்டார்.

# வடமராட்சி வடக்கு பிரதேச கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் பிரதேச மட்டத்தில் நடாத்தப்பட்ட பாடசாலை மட்டம் திறந்த பிரிவுளுக்கான கலை, இலக்கியப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்று வெற்றியீட்டியவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

*நேற்றைய தொடர்ச்சி...*

**கனிஷ்ட பிரிவு-கட்டுரை**

சு.காருண்யா-(யாழ்/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), வி.றதன் (யா/புலோலி மெ.மி.த.க.பாடசாலை), ஸ்ரீ.வேணுஜா-(யா/மெதடிஸ்த பெண் கள் உயர்தரப் பாடசாலை)

**கனிஷ்ட பிரிவு**

*(கவிதைப் பாடல்)*

கெ.வினிதா- சு.ரவீணா, நி.கீர்த்தனா (யா/வட இந்து மகளிர் கல்லூரி),

**சிரேஷ்ட பிரிவு**

*கவிதை எழுதுதல்*

சு.துஷாந்தி-(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), இ.சுஜிதா (யா/வட இந்து மகளிர் கல்லூரி), கோ. மயூரி-(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

**சிரேஷ்ட பிரிவு**

*கவிதைப் பாடல்*

வ.மாதுமை-(யா/வட இந்து மகளிர் கல்லூரி), இ.நிவேஜா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

(தொடரும்....

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ........................................

முகவரி :- ........................................

பிறந்த ஆண்டு :- ........................................

கூப்பன் ஐந்தும் புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

# எரிவாயு குழாய் வெடித்து
# ஆந்திராவில் 14 பேர் பலி

ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் எரிவாயு கொண்டுசெல்லும் குழாய் ஒன்று வெடித்ததில் 14 பேர் உயிரிழந்துள்ளதுடன் 15 பேர் வரை படுகாயமடைந்துள்ளனர். இந்த விபத்துக்கான காரணம் தெளிவாகத் தெரியவில்லை.

"கெயில்" நிறுவனம் இந்திய அரசாங்கத்திற்கு சொந்தமான மிகப பெரிய இயற்கை எரிவாயு செயலாக்க மற்றும் விநியோக நிறுவனங்களில் ஒன்றாகும்.

நகரம் கிராமத்தில் இருக்கும் அரசாங்கத்திற்கு சொந்தமான எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு ஆணையத்தின் (ஓ.என். ஜி.சி) எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்திற்கு அருகில் இருக்கும் இந்த நிறுவனத்தின் கட்டடத்தில் உள்ள 46 சென்ரிமீற்றர் அளவிலான குழாயில் இந்த வெடிப்பு ஏற்பட்டுள்ளதாக நிறுவனத்தின் தலைவர் பி.சி. திரிபாதி செய்தி நிறுவனம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் விபத்துக்கான காரணங்கள் தெரியவில்லை என்றும் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.விபத்தில் 14 பேர் இறந்துள்ளதாக ஆந்திர பிரதேசத்தின் உள்துறை அமைச் சர் சின்னப்பா ராஜப்பா பிபிசியிடம் தெரிவித்துள்ளார்.

இந்த தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் ஆனால் இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்றும் அம்மாவட்டத்தின் மூத்த அதிகாரி நீது குமாரி பிரசாத் தெரிவித்துள்ளார்.

# ஹோர்லிக்ஸ் மாமா தூக்கிட்டு தற்கொலை



ஹோர்லிக்ஸ் மாமா என்றழைக்கப்பட்ட பிரபல சினிமா, மற்றும் தொலைக்காட்சி நடிகர் ஏ.சி.முரளி மனோகரன் சென்னையில் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

பல தொலைகாட்சி சீரியல்களிலும் சில திரைப்படங்களிலும் நடித்துள்ள அவர் நடித்த ஹொர்லிக்ஸ் விளம்பரம் ஒன்று, மிகப் பிரபலம்.

அந்த விளம்பரத்தின் மூலம் அவர் ஹோர்லிக்ஸ் மாமா என்றே அழைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அவர் நேற்றுக் காலை புரசைவாக்கத்தில் உள்ள அவரது வீட்டில், தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


Crest

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

**Vacancies – Faculty of Arts**

University of Jaffna will entertain applications up to **11th July 2014** from suitably qualified persons for the under mentioned posts.

**Temporary Lecturer / Temporary Tutor**

Archaeology / Christian Civilization / Drama & Theatre Arts / Economics / English Literature / Fine Arts / Geography / Hindu Civilization/ Hindu Philosophy / History / Law / Linguistics / Media Studies / Planning / Philosophy / Political Science / Psychology / Sanskrit / Sociology / Tamil / Translation Studies

**Temporary Lecturer / Instructor**

Art & Design / Dance (Bharathanatiyam / Kathakali) / Music (Vocal / Violin) / English Language Teaching / Home Economics

- Note: Candidates awaiting the results of the final degree examinations may also apply for Tutor/Instructor

**Salary:**

| | |
|---|---|
| Temporary Lecturer | Rs.26, 020/- per month fixed |
| Temporary Tutor/Instructor | Rs. 21,370/- per month fixed |

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self -addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order for Rs.100/- drawn in favour of the Bursar, University of Jaffna.

Applications for the above posts should be sent to the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna.

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for interview.

Registrar
2014.06.27

(C/3716)



**VACANCIES**

**VAVUNIYA CAMPUS, UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

University of Jaffna will entertain applications upto 08.08.2014 from qualified persons for the under mentioned posts.

**FACULTY OF APPLIED SCIENCE**

Department of Bio Science
Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Environmental Science
Note:
Preference will be given to those who have specialization at postgraduate level in /Doctoral degree in Environmental Science/ Wild life Conservation / Waste Management /Ecotourism/Oceanography for the Post of Senior Lecturer Grade I/II

Department of Physical Science
Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Applied Mathematics and Computing/ Information & Communication Technology

Instructor (Female) in Physical Education Grade II

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Lecturer Grade I | Rs.45,545 - 7x1050 - 52,895/-p.m |
| Senior Lecturer Grade II | Rs.39,755 - 11x790 - 48,445/-p.m |
| Lecturer (Probationary) | Rs.27,775 - 10x645 - 34,225/-p.m |
| Instructor in Physical Education Grade II | Rs. 24,930- 19x360 - 31,770/- p.m. |

Note:
In addition to the above salary, the following allowances will also be paid for academic staff:
i.Academic allowance - Senior Lecturer Gr. I/Gr. II - 85% of the basic salary
Lecturer (Probationary) - 65 % of the basic salary
Further 35% of the basic salary will be paid as Research allowance based on the research activity of the academic staff.

The following allowances will also be paid for permanent post
ii. Special allowance - 20% of the basic salary
iii. Cost of living allowance of Rs.7,800/-p.m.

Statutory benefits:
I. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above.
II. Membership in Universities Provident Fund,and Pension Scheme in the University system.
III. Gratuity payments
IV. Employees' Trust Fund benefits.
V. Free Medical Services.

Applications for the above posts shall be sent to the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Thirunelvely Jaffna. Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self -addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the Bursar, University of Jaffna.

Those who wish to apply for more than one post should apply in separate forms.

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA
27.06.2014

(C/3717)

# காலியில் கைப்பணிக் கிராமம்

# கைப்பணியாளர்களுக்கு உதவித்திட்டம்

பாரம்பரிய கைவினை கைப் பணிக் கிராம அபிவிருத்தி நிகழ்ச் சித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட காலி மாவட்டத் தில் கலேகானை, போப்பே பொத்தல மரச்செதுக்கல் கைப் பணிக் கிராமத்திற்கான வசதிகள் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவி ருத்தி அமைச்சின் கீழ் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷவால் எதிர்வரும் யூலை 4 ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு கைவினை கைப்பணியாளர்களிடம் கைய ளிக்கப்படவுள்ளது.

இத்தகவலை பாரம்பரிய கைத தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச் சின் செயலாளர் வே.சிவஞான சோதி தெரிவித்தார்.

இவ் அங்குரார்ப்பண நிகழ்வு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் அனுச ரணையில் தேசிய அருங்கலை கள் பேரவை நடாத்துகின்றது.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், பிரதி அமைச்சர் வீரகுமார திஸாநாயக் கவும் கலந்துகொள்ளவுள்ளதாக வும், தென்மாகாண முதலமைச் சர் ஷான் விஜயலால், காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் ரமேஷ் பத்திரன, அமைச் சின் சிரேஷ்ட உத்தியோகத்தர் கள், பிரதேச செயலர், பிரதேச சபைத் தலைவர், தேசிய அருங் கலைகள் பேரவைத் தலைவர் புத்தி கீர்த்திசேன, தேசிய அருங் கலைகள் பேரவையின் அலு வலர்கள், துறைசார்ந்த உத்தி யோகத்தர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களும் கலந்துகொள்ள வுள்ளனர்.

போப்பே பொத்தல கைவினை கைப்பணிக் கிராமத்திலுள்ள சுமார் 162 மரச்செதுக்கல் கைவினை கைப்பணியாளர்க ளுக்கு அவர்களின் கைப்பணி களை மேற்கொள்வதற்கு பாரம் பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவி ருத்தி அமைச்சினால் 6.2 மில்லி யன் ரூபா செலவில் வேலைத் தளங்கள், தொழில்நுட்பம், பயிற் சிகள், பொது வசதிகள் என்ப னவும் வழங்கப்படவுள்ளன.

மேலும் பயனாளிகளுக்கு தொழிலை திறம்பட மேற்கொள் வதற்கான தொழில் உபகரணப் பொதிகளும் கையளிக்கப்பட வுள்ளன.

## மாலைதீவு...

இச்சந்திப்பின்போது ஜனாதி பதியிடம் கோரிக்கை விடுத்தார்.

இக்கோரிக்கையை தான் ஏற் றுக்கொள்வதாகவும் இது தொடர் பில் கவனம் செலுத்துவதாகவும் ஜனாதிபதி கூறினார். மாலைதீவு உதவி ஜனாதிபதி டாக்டர் முக மது ஜமீல் அஹ்மத், மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் துன்யா மைமூன் ஆகியோரும் ஜனாதி பதியை குரும்பா தீவில் சந்தித் துக் கலந்துரையாடினர்.

## ரஜரட்ட...

இதற்கமைய, உபவேந்தர் உள்ளிட்ட குழுவினர் வெளியே றுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக அங்கிருந்து கிடை க்கும் தகவல்கள் தெரிவிக்கின் றன.

## குருநகரில்...

அருகில் இருந்து மற்றொரு வீட்டுக்கும் தீ பரவி அது பகுதி யாக எரிந்த நிலையில் அணைக் கப்பட்டது. யாழ். மாநகர சபை தீயணைப்புப் பிரிவினரும் படை யினரும் இணைந்து தீயை கட் டுப்பாட்டுக்குள் கொண்டு வந் துள்ளனர். இத் தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப் படவில்லை. (25)

## சுற்றுலாப்...

புறக்கணிக்கும் நிலை ஏற்பட் டுள்ளது.

இதன் காரணமாக ஏற்பட் டுள்ள அந்நியச் செலாவணி இழப்பு பொருளாதாரத்தில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தும் என்று ஆய்வாளர்கள் எதிர்வு கூறுகின் றனர்.

## ஜனாதிபதி...

என ஜனாதிபதி ஊடக இணை ப்பு செயலாளர் விஜயாநந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

சீசேல்சில் இருந்து கிடைக்க பெற்ற விசேட அழைப்பின் பேரிலே அவர் அங்கு விஜயம் செய்துள்ளார்.இந்த விஜயத்தின் போது, புதிய இலங்கைக்கான தூதுவராலய திறப்பு விழாவி லும் ஜனாதிபதி கலந்து கொள் வார் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

# ஜானக பெரேரா கொலை வழக்கு

# நீதிபதிக்கும் அழைப்பாணை

(கொழும்பு)

தற்கொலைத் தாக்குதல் நடத்தி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உட்பட 29 பேரை கொலை செய்த சம்பவம் தொடர பான வழக்கு நேற்று அநுராத புரம் மேல் நீதிமன்றத்தில் மீண் டும் விசாரணைக்கு எடுக்கப்பட் டது.

இந்த வழக்கில் சாட்சியமளிப் பதற்காக எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி நீதிமன் றத்தில் ஆஜராகுமாறு அநுராத புரம் நீதவான் நீதிமன்றத்தின் முன்னாள் நீதவான் தர்ஷிகா விமலசிறிக்கு அறிவிப்பாணை அனுப்புமாறு உத்தரவிட்டுள்ளது.

வழக்கில் குற்றம் சுமத்தப்பட் டுள்ள இரண்டாவது சந்தேக நபர் நீதவான் நீதிமன்றத்தில் வழங்கிய ஒப்புதல் வாக்கு மூலத்தை தற்போது மறுத்துள்ள மையே இதற்கான காரணமா கும். குறித்த ஒப்புதல் வாக்கு மூலம் வழங்கப்பட்ட போது, நீதி மன்றத்தில் மொழி பெயர்ப்பா ளராக பணியாற்றியவர், எழுது வினைஞராக பணியாற்றியவர். அப்போது அந்த இடத்தில் இரு ந்த பொலிஸ் சார்ஜன்ட் ஆகி யோரையும் சாட்சியமளிக்க வரு மாறு மேல் நீதிமன்றம் அறி விப்பாணை அனுப்பி வைக்கு மாறு உத்தரவிட்டுள்ளது.

# பள்ளிவாசலுக்கு வெளியே

# இனி தொழுகை வேண்டாம்

### பாதுகாப்பு கருதி வேண்டுகோள்

முஸ்லிம் மக்கள் தொழுகையின்போது பள்ளிவாசலுக்கு வெளியே நின்று தொழுவதை இயன்றளவு தவிர்த்துக் கொளளுமாறு பள்ளிவாசல் நிர்வாகிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதுகாப்புப் பிரச்சினை யினையடுத்து, இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. கொழும்பு பிரதேச பள்ளிவாசல்களைச் சேர்ந்த நிர்வாகிகள் இந்த வேண்டு கோளை விடுத்துள்ளனர்.

குறிப்பாக கொழும்பு, கோட்டை, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, பொரளை உள்ளிட்ட சில பிரதேசங்களிலுள்ள பள்ளிவாசல்களுக்கு வெளியே வீதியோரங்களில் சில முஸ்லிம்கள் ஜும்ஆத் தொழு கையை நிறைவேற்றுகின்றனர்.

நாட்டின் தற்போதைய அசாதாரண சூழ்நிலையை கருத்திற் கொண்டு பள்ளிவாசலுக்கு வெளியே தொழும் சகல முஸ்லிம்களும் உள்ளே சென்று தமக்குரிய இடங்களை இயன்றளவு ஒதுக்கிக் கொண்டு தொழுது கொள்ளுமாறு கோரியுள்ளனர்.

## ஆஸி. நோக்கிச்...

13 ஆம் திகதி தென்னிந்தியாவில் இருந்து புறப்பட்டதாக அவர் கூறினார்.

இது பற்றி குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிசனின் பேச்சாளர் கருத்து வெளியிடுகையில், கடலில் உயிர்ப் பாதுகாப்பிற்கு தீவிர அச்சுறுத்தலாக அமையக்கூடிய எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைக ளையே அரசாங்கம் ஊர்ஜிதம் செய்யுமெனத் தெரிவித்தார்.

நீர்க்கசிவு ஏற்பட்டுள்ள படகு பற்றி அரசாங்கத்திடம் தகவல் எதுவுமில்லையென அவர் கூறினார்.

## பாக். பிரஜைகள்...

வெளிவிவகார அமைச்சை தொடர்பு கொண்டு அறிவித்துள்ளது.

இலங்கையில் அரசியல் தஞ்சம் கோரும் பாகிஸ்தான் பிரஜைக ளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக கவனத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இலங்கை வரும் பாகிஸ்தான் பிரஜைகளுக்கு விமான நிலையத்தில் வருகைதரு விசாக்கள் வழங்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில், இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் பாகிஸ் தான் பிரஜைகள் இனி வரும் காலங்களில் அந்நாட்டில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பித்து விசாக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட் டுள்ளது.

# நல்லூர் பிரதேச சபைக்கு 50 மில்லியன் ஒதுக்கீடு

(திருநெல்வேலி)

இனங்காணப்பட்ட வேலைத் திட்டங்களுக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் உள் ளூராட்சி மன்றங்களுக்கு வழங் கப்படும் நிதியிலிருந்து நல்லூர் பிரதேச சபைக்கு 50 மில்லியன் ரூபா பணம் வழங்கப்படவுள் ளது.

இதில் 30 மில்லியன் ரூபா பணம் நல்லூர் பிரதேச சபை யின் இனங்காணப்பட்ட வேலைத் திட்டங்களுக்கும், 20 மில்லியன் ரூபா ஈ.பி.டி.பி.யின் வேலைத் திட்டங்களுக்காகவும் வழங்கப் படும்.

இப்பணத்தின் மூலம் உள்ளூ ராட்சி மன்றங்கள் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படு கிறது.

இத்தகவலை நல்லூர் பிர தேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அ.இரவீந்திரதாசன் அண்மையில் இடம்பெற்ற நல் லூர் பிரதேச சபையின் மாதாநதக் கூட்டத்தில் தெரிவித்தார். (137)

# அளுத்கம வன்செயல் பிரதேச சபையில் கண்டனம்

அளுத்கம, பேருவளை போன்ற இடங்களில் முஸ்லிம்க ளுக்கெதிராக இடம்பெற்ற தாக் குதல்கள், பொருட் சேதங்கள், தீ வைப்பு, உயிரிழப்புக்கள் போன்றவற்றை கண்டித்து நல் லூர் பிரதேச சபை கண்டனத் தீர்மானமொன்றை நிறைவேற்றி யுள்ளது.

அண்மையில் நடைபெற்ற சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இத்தீர்மானம் ஏகமனதாக நிறை வேற்றப்பட்டது.

வன்முறைத் தாக்குதலைக் கண்டித்து சபையில் கலந்து கொண்ட தவிசாளர், உறுப்பினர் கள் அனைவரும் தமது பலத்த கண்டனத்தை தெரிவித்துக் கொண்டனர்.

தமது கட்சியின் சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் அ.இரவீந் திரதாசன் தமது கண்டனத்தை தெரிவிப்பதாகக் குறிப்பிட்டார். இன, மத, குரோதங்களும், அடா வடித்தனங்களும் நிறுத்தப்பட வேண்டும் எனவும், குற்றம் புரிந் தவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என வும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஏனைய உறுப்பினர்களும் இதனைக் கண்டித்து உரையாற் றினர். (137)

# மின் தடை பற்றிய அறிவித்தல்

உயர் அழுத்த தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை தோப்பு, அச்சுவேலி, செல்வநாயகபுரம், தம்பாலை, இடைக்காடு, பத்தமேனி, தெல் லிப்பழை சந்தை வீதி, தெல்லிப் பழை புற்றுநோய் வைத்திய சாலை, தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலைப் பிரதேசங்கள் ஆகிய இடங்களிலும்,

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை நவிண் டில், பொலிகண்டி, பொலிகண்டி ஆலடி, நெடியகாடு, இமையா ணன், உடுப்பிட்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, கம்பர்மலை, உடுப்பிட்டி சனசமூக நிலையத் தடி, பொக்கணை, கெருடாவில், தொண்டைமானாறு, மயிலிய தனை, சிதம்பரா கல்லூரியடி, நவிண்டில் V.C, வல்லை, கொன வெண்ட், குருநகர், பாசையூர் - Holy Cross, பண்ணை, முத்தமிழ் வீதி, பண்ணை வைத்தியசாலை, வில்லூன்றி, பழைய பூங்கா வீதியின் ஒரு பகுதி, மடம் வீதி ஆகிய இடங்களிலும் மின் விநி யோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியிய லாளர் அறிவித்துள்ளார்.

# மக்களின் நம்பிக்கை சிதைந்து விட்டது

### பொன்சேகா கவலை

(கொழும்பு)

நாட்டு மக்களின் எதிர்பார்ப் புக்களும் நம்பிக்கையும் சிதை ந்து போயுள்ளதை 90 வீதமான மக்களின் அமைதி எடுத்துக் காட்டுவதாக ஜனநாயகக் கட்சி யின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். பண்டாரவளை யில் நேற்று முன்தினம் நடை பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

மக்களுக்கு பல வாக்குறுதி களை அரசியல்வாதிகள் வழங் கினர். அவை என்றுமே நிறை வேற்றப்படவில்லை. இதனால் மக்கள் அதிருப்தியுடன் வாழ்ந்து வருகின்றனர்.

மக்களின் வாழ்க்கைச் சுமை யும் அழுத்தங்களும் தொடர்ந் தும் அதிகரித்து வருகிறது. மக் கள் மிகவும் துன்பகரமான வாழ் க்கை வாழ்ந்து வருகின்றனர்.

நாட்டின் ஊழல் மிகுந்த அர சியலே மக்களை இந்த இட த்தை நோக்கி தள்ளியுள்ளது. இலங்கையின் அரசியல்வாதி கள் தமது வயிற்றை நிரப்பிக் கொள்ளவே அரசியலில் ஈடு பட்டு வருகின்றனர். வயிற்றுப் பிழைப்பு அரசியலே நாட்டில் இருக்கின்றது எனவும் சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

# தொகுதி அமைப்பாளர்கள் மீது தொடர் குற்றச்சாட்டுகள்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் சிலர், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நீக்கப்பட வுள்ளதாக அந்தக் கட்சியின் தக வல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களுக்குப் பதிலாக புதிய தொகுதி அமைப்பாளர்கள் நிய மிக்கப்படவுள்ளனர். அண்மை யில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியின் தொகுதி அமைப் பாளர்களின் கூட்டத்தில் முன் வைக்கப்பட்ட யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு இந் தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள் ளது.

சில தொகுதி அமைப்பாளர்க ளின் செயற்பாடுகள் குறித்து விமர்சனங்கள் முன்வைக்கப்பட் டதாகத் தெரியவருகிறது.



# சமூகச் சீரழிவுக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களே

## ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகன்

மூன்று தசாப்த கால யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு நாட்டில் அமைதியான சூழல் நிலை நிலவி வரும் இந்தக் காலப் பகுதியில் மீண்டும் ஒரு ஆயுதக் கலாசாரம் தலைதூக்கியிருப்பது எமது இளம் சமூகத்தினர் மீண்டும் வழிதவறிப் போவதற்கான அத்திவாரமாகவே அமைந்துள்ளது. இந் நிலைமை முடிவுக்கு கொண்டு வர அக்கறையுள்ள அனைவரும் முன்வர வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக குடாநாட்டில் அரங்கேறிவரும் தனிப்பட்ட மற்றும் கூலிக்காக கொடூரமாக இடம்பெற்றுவரும் வாள்வெட்டு சம்பவங்கள் கண்டிக்கப்பட வேண்டியதோடு, முடிவு கட்டப்படவும் வேண்டியதுமாகும். இத்தகைய சமூக சீர்கேடான செயல்களையும், எமது மக்களை தேவையற்ற அச்சத்துக்குள்ளும், பதற்றத்திற்குள்ளும் தள்ளிவிடும் சம்பவங்களையும் தடுத்து நிறுத்த உரிய அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்கவேண்டும் எனவும் வலியுறுத்துகின்றோம். ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவந்த வாள்வெட்டுச் சம்பவங்களின் தொடர்ச்சியாக அண்மையில் கோண்டாவில், உரும்பிராய் பகுதி இளைஞர்களுக்கிடையில் ஏற்பட்ட குழுச்சண்டை ஒரு மாணவனின் படுகொலையாக முடிந்தமையானது எமது இளம் சமூகம் மீண்டும் தடம் மாறிச் சென்று கொண்டிருப்பதையே கோடிட்டுக் காட்டுகின்றது. இந்த நிலை தொடர்ந்து சென்றால் தமிழினம் கடந்த காலத்தில் கொடிய யுத்தத்தில் இழந்து போனவற்றை விட அதிகமானவற்றை மறுபடியும் இழக்க நேரிடும். எனவே இத்தகைய சம்பவங்களுக்கு முடிவுகட்ட சமூக அக்கறையுள்ள அனைவரும் தமது பங்களிப்பைச் செய்ய முன்வரவேண்டும். நீண்ட கால போராட்டத்தால் நலிவுற்றுப்போன எமது மக்கள் இப்போதுதான் ஒருவாறாக தமது வாழ்வாதாரத்தில் மீண்டுகொண்டு வருகின்றனர். இந்த சூழ்நிலையில் சமூக சீர்கேடான இவ்வாறான செயல்கள் மீண்டும் ஒரு பேரழிவுக்கு நாம் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டு விடுமோ என்ற அச்சநிலை குடாநாட்டு மக்கள் மத்தியில் தற்போது ஏற்பட்டுள்ளது மிக வேதனையான விடயமாகும். ஒரு காலத்தில் கலாசாரத்துக்கு பெயர் போன யாழ்ப்பாணம் இவ்வாறான சம்பவங்களால் இன்று தலைகீழாக மாறிவருவதை எவராலும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. தமது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய எதிர்பார்ப்புகளுடன் பெற்றோர்கள் பல்வேறு துன்பங்களைச் சுமந்து பிள்ளைகளை வளர்க்கின்றனர். ஆனால் இளைஞர்கள் தவறான பாதையில் செல்வதனால் அவர்களது குடும்பம் மட்டுமல்லாது ஒட்டுமொத்த தமிழ் மக்களது வாழ்க்கையும் மீண்டும் கறைபடிவதை யாராலும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

தற்போது இந்தக் குழுச் சண்டியர்களை கட்டுப்படுத்த இராணுவம் தலையிடுகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. இந்த நிலை தொடர்ந்தால் மீண்டும் குடாநாடு முழுவதும் இராணுவம் குவிக்கப்படும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. என்ற கவலை எமது மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது. வாள்வெட்டுக்கள் போன்ற கோரச் செயல்களை செய்பவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஒப்படைத்து கடுமையான தண்டனைகளை பெற்றுக்கொடுத்தால் கொலை, கொள்ளைகளை குடாநாட்டில் தடுத்து நிறுத்தினாலேயே இங்கு இயல்பு நிலையை ஏற்படுத்த முடியும். இதற்கு பொது மக்களும் தமது ஒத்துழைப்புக்களை துணிச்சலோடு வழங்க வேண்டும். பொருளாதாரத்திலும், வாழ்வாதாரத்திலும் ஈடு செய்யமுடியாத இழப்புக்களைச் சந்தித்த எமது மக்கள் மீண்டும் ஒருதடவை பாதிக்கப்படுவதற்கு காரணமானவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேண்டுகோளாக இருக்கின்றது. அவர்களை சட்டத்தின் முன் கொண்டுவருவதற்கு நாங்களும் உங்களுடன் கைகோர்த்துக் கொள்கின்றோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கணவன் உலக்கைத் தாக்குதல்; ஆபத்தான நிலையில் மனைவி

(யாழ்ப்பாணம்)

குடும்பத் தகராறு காரணமாக மனைவி மீது கணவன் உலக்கையால் அடித்ததில் மனைவி படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று நண்பகல் ஒரு மணியளவில் இச் சம்பவம் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் ஈவினை தெற்கு, புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்த பரமசிவம் இராசு (வயது-70) என்ற மூதாட்டி காயமடைந்துள்ளார்.

வீட்டில் ஆட்கள் இல்லாத நிலையில் குறித்த மூதாட்டி சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த வேளை கணவனால் உலக்கையால் அடித்துத் தாக்கப்பட்டதுடன், வேறு கூரிய ஆயுதங்களினாலும் தாக்கப்பட்டுள்ளார் என அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

மனைவி மீது தாக்குதல் மேற்கொண்ட நபர் முன்னர் மனநோயினால் பாதிக்கப்பட்டிருந்தவர் என விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது. (இ)

# கள்ளிக்குளம் மக்களின் அடிப்படைத் தேவைகள்

## களநிலையில் ஆராய்வு

(வவுனியா)

வவுனியா கள்ளிக்குளம் மீள் குடியேற்ற கிராமத்திற்கு ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு அங்கு உள்ள மக்களை சந்தித்து கலந்துரையாடினர் அப்போது அங்கு உள்ள மக்கள் தங்களின் குறைபாடுகளை தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில் சுகாதாரம், கல்வி, போக்குவரத்து , குடிநீர், வீட்டுத்திட்டம், சமூகமுன்னேற்றம், மின்சாரம், வாழ்வாதாரம், விளையாட்டரங்கு, போன்ற உதவிகளை தங்களுக்கு செய்து தரும்படி கேட்டுக் கொண்டனர். இதற்கு இணங்க கட்சியின் பிராந்திய இணைப்பாளர் தோழர் சாந்தன் இது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வந்து உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். இச்சந்திப்பின் போது ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வன்னி பிராந்திய இணைப்பாளர் ஏ.சாந்தன், வவுனியா மாவட்ட பதில் அமைப்பாளர் ஆர். குலம் மாவட்ட அலுவலகப் பொறுப்பாளர் என்.தயாளன். மற்றும் கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள் வீ.தர்சன் இ.விஜயகுமார் சி.நிரோசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# நீதித்துறையில் நம்பிக்கை மக்களுக்கு இல்லை

## வடக்கு முதல்வர் தெரிவிப்பு

அரசுக்கு சார்பான வகையில் வழக்குகளில் தீர்ப்புக்கள் வழங்கப்படுவதனாலும் வழக்கு விசாரணைகள் தாமதப்படுவதனாலும் மக்களுக்கு நாட்டின் நீதித்துறை மீது சந்தேகம் ஏற்பட்டிருப்பதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றங்களின் ஊடாக நீதியைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் தமது காணிகளைத் திருப்பித் தருமாறு கோரி வலிகாமம் வடக்கைச் சேர்ந்த 2 ஆயிரம் பேர் வழக்குத் தாக்கல் செய்திருக்கின்றார்கள். இருந்தும் அந்த வழக்கு விசாரணைகள் துரிதப்படுத்தப்படாத காரணத்தினால் அவர்கள் நீதிமன்றத்தின் மீது நம்பிக்கை இழந்துள்ளதாகவும் வடமாகாண முதலமைச்சர் பி.பி.சி. தமிழோசையிடம் சுட்டிக்காட்டினார்

# சகமாணவனின் தாக்குதல்; மத்திய கல்லூரி மாணவன் காயம்

மாணவன் ஒருவன் சக மாணவனின் தாக்குதலுக்கு இலக்காகி தலையில் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

யாழ்.மத்திய கல்லூரியில் க.பொ.த சாதாரண தரத்தில் கற்கும் பி.கரிதாஸ் (வயது-15) என்ற மாணவனே சக மாணவனால் இரும்புக் குழாயினால் தாக்கப்பட்டு தலையில் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று பிற்பகல் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ)

# யாழ்.நகர வீதிகளுக்கு விரைவில் விமோசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் திருத்தப்படாதிருக்கும் சில முக்கிய வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டு காப்பற் இடும் பணிகள் நடைபெறவுள்ளதாக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

யாழ்.நகரின் முனியப்பர் வீதி, மின்சார நிலைய வீதி, கந்தப்பசேகரம் வீதி. விக்டோரியா வீதி போன்ற வீதிகளே இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரிவித்த அவர் பொருளாதார அமைச்சின் நிதியொதுக்கீட்டின் கீழ் இந்த வீதிகள் புனரமைக்கப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இரண்டொரு தினங்களில் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (பா)

# இந்தியன் வீட்டுத் திட்டம் முன்னேற்ற மீளாய்வு

அச்சுவேலி வளலாய் ஜே/284 கிராம அலுவலர்கள் பிரிவிற்குட்பட்ட இந்தியன் வீட்டுத் திட்ட பயனாளிகளுடனான கலந்துரையாடலொன்று வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அச்சுவேலி வளலாய் பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் வலி. கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி.கிழக்கு பிரதேச இணைப்பாளருமான ஐங்கரன், இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உத்தியோகத்தர்கள், இந்தியன் வீட்டுத்திட்டப் பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வட்டக்கச்சி-சிவிக்சென்ரர் வீதியின் அவலம் தொடர்கிறது

## மக்கள் விசனம்

வட்டக்கச்சி-சிவிக்சென்ரர் வைத்தியசாலை வீதி புனரமைப்பானது நெல்சிப் திட்டத்தின் கீழ் 100 இலட்சம் ரூபா செலவில் 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிலையில் குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் தலையீட்டினால் வீதி புனரமைப்பு பணி இடைநிறுத்தப்பட்டது.

தற்போது புனரமைக்கப்படாது கண்டல் கல் பரவப்பட்ட நிலையில் காணப்படுவதால் மக்கள் போக்குவரத்தை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை ஏதிர்கொண்டு வருகின்றனர்.

கரைச்சி பிரதேச சபையின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இவ்வீதிப் புனரமைப்பு பணியானது அவர்களின் அக்கறையின்மை காரணமாகவே இவ்வாறு புனரமைக்கப்படாது இருப்பதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். தொடர்ந்தும் உடகங்கள் வாயிலாக இவ்வீதி புனரமைக்கப்படாமை சுட்டிக் காட்டப்பட்டு வந்த நிலையிலும் பிரதேச சபையினர் உரிய நடவடிக்கைகள் எடுத்து மக்களின் சிரமங்களை தவிர்ப்பதாக இல்லை எனவும் பிரதேச வாழ் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இது தொடர்பாக கடந்த மே மாதம் இடம்பெற்ற கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் கேள்வி எழுப்பட்ட போது அதற்கு பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் வீதியினை புனரமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் இன்னும் ஒரு சில நாட்களில் குறித்த வட்டக்கச்சி சிவிக்சென்ரர் வைத்தியசாலை வீதி புனரமைக்கப்படும் எனவும் அனைவரும் முன்னிலையிலும் உறுதிபடத் தெரிவித்திருந்தார் தற்போதும் வீதி அவ்வாறே காணப்படுகிறது.

எனவே மக்கள் நலன்களில் அக்கறை எடுத்து கரைச்சி பிரதேச சபையினரும், உரிய தரப்பினரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுதிருப்பதோடு, அபிவிருத்திப் பணிகளுக்கு அரசு நிதிகளை ஒதுக்கீடு செய்வதில்லை என தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கரைச்சி பிரதேச சபையினரும், நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நெல்சிப் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதிகளுக்கான இது போன்ற பணிகளை செவ்வனே செய்யாமல் அக்கறையின்றி இருப்பது கவலையளிக்கிறது எனவும் மக்கள் மேலும் தெரிவித்தனர்.

# முதியவர்களுக்கு உலர் உணவு நிவாரணம்

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள சாந்தபுரம் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு முதியோர்களுக்கான உலருணவு அன்பளிப்பு வழங்கப்படவுள்ளது. சாந்தபுரம் முதியோர் சங்கதினால் தெரிவு செய்யப்பட்டுள்ள 90 வறிய முதியோருக்கு தலா 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவு வழங்கப்படவுள்ளது.

ஓய்வுநிலை அதிபர் க.இராசேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் கலந்து கொள்ளவுள்ளனர். (90)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூன் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.